உதயசூரியன்

UTHAYASOORIYAN උදයසූරියන්

Source for reading hunters

உதயசூரியன் (களம் 02 - உதயசூரியன் - 16) (12 டிசெம்பர் 2013) பக்கம்: 32 விலை: 20/=

100 வருடங்களுக்கு ஒரு முறை ஓடும்

பேய் வண்டி

Shape Instantly.....!!!

15% Discount

Available
Sizes: M, L, XL, XXL

Rs 2000 Above.....

Bodykerves

www.bodykerves.com

HOTLINE 0777 700 798

Available only at

Bodykerves International

19, Stratford Avenue, Colombo 05

Tel:011 2588 000

Authorized Dealers - East

Trincomalee : Nawamilas - 0777 660 390

Baticoloa : Nilam - 0777 890 040

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனவாத விஷமிகளின் இன்னுமொரு கைவரிசை!

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு இனங்களிடையே சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் இனவாத விஷமிகள் அவ்வப்போது தமது கைவரிசையைக் காட்டி இது பௌத்த சிங்கள நாடு. இங்கே ஏனையோர் வாழத் தகுதியற்றவர்கள் என்று கொக்கரித்து வருகின்றனர்.

இதன் வெளிப்பாடாக நாட்டிலுள்ள இந்து ஆலயங்கள் அண்மைக் காலமாக இனந்தெரியாத விஷமிகளால் உடைக்கப்பட்டும் தெய்வ விக்கிரகங்கள் சேதமாக்கப்பட்டும், ஆலயங்களில் உள்ள பெறுமதியான ஆபரணங்களும், பொருட்களும் கொள்ளையிடப்பட்டும் வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரே இரவில் 4 ஆலயங்கள் சேதமாக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டன. தொடர்ந்து யாழ்ப்பாணம், தம்புள்ள, இரத்தினபுரி போன்ற பகுதிகளில் உள்ள ஆலயங்களும் பல்லேகம பகுதியிலுள்ள ஆலயமும் உடைக்கப் பட்டு சேதமாக்கப் பட்டன.

வணக்க ஸ்தலங்கள் மக்களின் உணர்வுகளோடும் நம்பிக்கையோடும் தொடர்புபட்டவை. இந்த வணக்க ஸ்தலங்களின் மீது தாக்குதல் தொடுப்பது மக்களின் உணர்வுகளை சீண்டிப்பார்க்கும், வேதனைப்படுத்தும் செயற்பாடாகும்.

தமிழ், சிங்கள மக்கள் ஒன்றாக பரவி வாழும் ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் 1983 ஆம் ஆண்டு ஜூலை இனக் கலவரத்திற்கு பின்னர் முதற் தடவையாக இந்து ஆலயத்தின் விக்கிரகம் ஒன்று இனந்தெரியாத விஷமிகளால் உடைத்து சேதமாக்கப் பட்டுள்ளது.

ஹாலிஎல உடுவரைத் தோட்ட மேற்பிரிவில் அமைந்துள்ள ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலய முன்றலில் அமைக்கப்பட்டுள்ள வீரபத்திர காளியம்மன் சிலையே கடந்த 8 ஆம் திகதி (ஞாயிறு) இரவுவேளையில் விஷமிகளால் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளதுடன் விக்கிரகத்தில் இருந்த சூலாயுதமும் களவாடப்பட்டுள்ளது. இதனால் முழு உடுவரைத் தோட்டம் முழுவதையும் மயான சோகம் ஆட்கொண்டிருக்கிறது.

ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலய கும்பாபிஷேகம் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்றிருந்தது. தற்போது 48 நாட்களுக்கான மண்டலாபிஷேகப் பூஜைகள் இடம்பெற்றுவரும் நிலையில் இவ்வனர்த்தம் இடம்பெற்றமை அம்மக்களின் இதயங்களில் ஈட்டி கொண்டு குத்தியதை மறக்கவும், மன்னிக்கவும் முடியாத விடயமாக மாறியுள்ளது.

சில வருடங்களுக்கு முன்பு இவ்வாலயப் பகுதியிலுள்ள மரங்கள் வெட்டியகற்றப்பட்டபோது ஏற்கனவே ஆலய முன்றலில் வைக்கப்பட்டிருந்த பத்திரகாளியம்மன் சிலை சேத

மடைந்தது. இதற்கு பின்னரே அவ்விடத்தில் புதிய வீர பத்திரகாளியம்மன் சிலையை ஊர் மக்கள் வைத்து கும்பாபிஷேகம் செய்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த சிலை சேதமாக்கப்பட்டதை தொடர்ந்து, அப்பகுதிக்கு பொறுப்பான எல்ல பொலிஸார் ஸ்தலத்திற்கு சென்று விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். பதுளை பொலிஸ் நிலைய அதிகாரிகளும் மோப்ப நாய்களுடன் சென்று குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாராட்டத்தக்க ஊவா பிரதிநிதிகளின் நடவடிக்கை!

நாட்டில் ஏனைய பிரதேசங்களில் கோவில் உடைப்புச் சம்பவங்கள் இடம்பெற்ற சமயங்களில் அரசியல் பிரதிநிதிகள் சம்பவ இடத்திற்கு சென்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை. ஆனால் ஊவா பிரதிநிதிகள் மிகச்சிறப்பாக செயற்பட்டு மக்களுக்காக நாம் இருக்கிறோம் என்பதை நிரூபித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பசறைத் தொகுதி அமைப்பாளரும், ஜனாதிபதியின் இணைப்பாளருமான வடிவேல் சுரேஷ் அப்பகுதிக்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்தார்.

ஊவா அமைச்சர் செந்தில் தொண்டமான் கொழும்பில் இருந்ததன் காரணமாக அவர்சார்பில் பிரதிநிதிகள் சம்பவ இடத்திற்கு சென்று நடவடிக் கைகளை மேற்கொண்டனர்.

சிலை உடைப்புச் சம்பவம் குறித்து வடிவேல் சுரேஷ்

கூறுகையில்:- இத்துன்பியல் நிகழ்வானது அனைத்து இந்து மக்களின் இதயங்களையும் காயப்படுத்தியுள்ளது. இத்தகைய ஈனச் செயலை புரிந்தவர்கள் நிச்சயம் தண்டிக்கப்படல் வேண்டும். இவ்விடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பண்டாரவளை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர், எல்ல பிரதேச செயலாளர் உட்பட அரசாங்கத்தின் உயர்மட்ட அமைச்சர்கள், அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன். என்றார்.

செந்தில் தொண்டமான் தெரிவிக்கையில்:- அரச உயர் மட்டத்துடன் இவ்விடயத்தை அணுகியுள்ளோம், இந்த இழிசெயலை நிச்சயம் மன்னிக்க முடியாது. இந்த செயலைச் செய்தவர்கள் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும் என்றார். மேலும் ஊவா கலாசார அமைச்சு, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு மூலமாக முற்றிலும் அரச செலவில் இக்கோவிலை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

வணக்க ஸ்தலங்கள் தொடர்ந்து சேதமாக்கப்பட்டு கொள்ளையிடப்படுவது அச் சமூகங்களின் சமய நம்பிக்கையை, தெய்வங்களை அவமதிக்கும் செயலாகும். அண்மைக்காலமாக வடக்கு, கிழக்கு, தென், ஊவா என்று வியாபித்து வரும் இந்து ஆலயங்கள் மீதான தாக்குதல்களையும், கொள்ளையிடல் சம்பவங்களையும் தடுத்து நிறுத்தி குற்றவாளிகளை இனங்காணக்கூடிய நிலையை ஏற்படுத்த அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

ஹாலிஎல நிருபர்

கொக்கரக்கோ..

இந்திய பிரதமர் மன்மோகன் சிங் வயதான முட்டாள். இந்தியா பெரிய நாடு அல்ல. அது மூட்டைப்பூச்சி. பொதுநலவாய மாநாட்டிற்கு மன்மோகன் சிங் வராததால் நான்கு மாதில மக்கள் அவரை புறக்கணித்துவிட்டனர். அவர் விரைவில் பதவியிலிருந்து தூக்கி எறியப்படுவார். இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் ஒரு அயோக்கியன் என்றும், அமெரிக்க அதிபர் ஒபாமா ஒரு கறுப்பன். சீனா மட்டுமே எங்கள் நண்பன்.

ஜே.ஆர்.பி.சூரியபெரும,
பாராளுமன்ற உறுப்பினர்

சாரதியின்றியே ரயில் ஓடுவது நாட்டிற்கு முன்மாதிரியாகும். அபிவிருத்தியடைந்த நாடுகளை போல போக்குவரத்து துறையை மேம்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். மாளிகாவத்தையிலிருந்து இரத்மாலானை வரைக்கும் சாரதியின்றி ரயில் பயணித்தது பாரியதொரு சம்பவமாகும். அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

போக்குவரத்து அமைச்சர்
குமார் வெல்கம

பிரதியமைச்சர் நிரூபமா அழகிய நீர்வீழ்ச்சி என்று அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார். நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்தனவை பாராட்டி பேசிக்கொண்டிருந்தார். இதன்போது குறுக்கிட்ட ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் ஒருவர் இந்த அமைச்சுக்கு பிரதியமைச்சர் ஒருவர் இருப்பது தெரியாதா என்று வினவினார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர், ராஜபக்ஷ குடும்பம் பற்றி தெரியாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள் பிரதியமைச்சர் நிரூபமா ராஜபக்ஷ ஒரு காலத்தில் ஓர் அழகிய நீர்வீழ்ச்சி என்றார். குறுக்கிட்ட எதிரணியினர் அப்படியென்றால் இப்போது இல்லையா என்று வினவிய போது அப்போதும் இப்போதும் தான் என்றார்.

அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா

பெற்ற குழந்தையை கழுத்து நெரித்துக் கொன்ற தாய்!

டயகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தோட்டமொன்றில் தாய் ஒருவர் தான் பெற்ற குழந்தையின் கழுத்தை நெரித்துக் கொன்ற சம்பவம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த தாய்க்கு ஏற்கனவே இரண்டு குழந்தைகள் உள்ளன. தற்போது பிரசவமானது மூன்றாவது பெண் குழந்தையாகும். கணவன் வீட்டில் இல்லாத பட்சத்தில் குழந்தை பிரசவமாகியுள்ளது. கணவன் வீட்டுக்கு வந்தபோது மனைவி தனக்கு குழந்தை பிறந்துள்ளதாகவும் அது இறந்துவிட்டதாகவும் கூறியுள்ளார். சந்தேகம் கொண்ட கணவன் உடனடியாக பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார். இதனையடுத்தே பொலிஸார் உடனடியாக சம்பவ இடத்துக்கு சென்றனர்.

பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையின்போது குழந்தை குறைப் பிரசவத்தில் பிறந்ததாகவும் இக்குழந்தை கழுத்து நெரிக்கப்பட்டு இறந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. சந்தேகத்தின் பேரில் தாயை பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளனர். மேலதிக விசாரணையை டயகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கே.புஷ்பராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகம் அபிவிருத்தி கண்டுவிட்டது

மெஜிக் காட்டும் மலையகத் தலைவர்கள்

மலையக மக்களுக்கு எல்லா வளங்களும் கிடைக்கின்றன. உழைப்புக்கேற்ற வருமானம் கிடைக்கிறது. வசதியான வளமான வாழ்க்கை வாழ்கிறார்கள். இன்னும் கொஞ்சம்... ஏதோ சின்னச் சின்ன பிரச்சினைகள் பற்றாக்குறைகள்தான் இருக்கின்றன..

என்ன இதெல்லாம் எப்போது நடந்தது. எந்தக்காலத்தில் இந்தக் கட்டுரை எழுத்தப்ப டுகிறது என்றெல்லாம் யோசித்து விடாதீர்கள்.

அண்மைக் காலமாக மலையகம் அபிவிருத்தி கண்டுவிட்டதாக ஒருசில அரசியல்வாதிகள் இப்படித்தான் தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மலையக தோட்டப்புற பாதைகளுக்கு கொங்கிறீட் இடுவதாலும், மின்சாரம் கொடுப்பதாலும், பொது அமைப்புகளுக்கு பொருட்கள் கொடுப்பதாலும் மாத்திரம் மலையகத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்திவிட முடியாது. அத்தோடு மலையக தோட்டப்புற மக்களின் வீடுகளில் பொருத்தியுள்ள டிஸ்க் அண்டனாக்களையும், செல்போன்களையும் கணக்கிட்டு மலையக மக்கள் முன்னேறிவிட்டதாக மக்களவைகளிலும் மேடைகளிலும் கூறித்திரிகின்ற மலையக அரசியல்வாதிகள் இன்னும் மலையக மக்களின் உண்மையான நிலைமையை அறிந்திராது இருப்பது வேடிக்கையான விடயம்.

மலையக தோட்டப்புறங்களில் டிஸ்க் அண்டனாவும் அம்மக்களிடத்திலே கைபேசி பாவனையும் அதிகரித்திருப்பது உண்மைதான். இதை வைத்து அபிவிருத்தியை கணிப்பிடுவது எந்தவகையில் நியாயம்?

இன்னும் மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளே தீர்க்கப்படாமல் உள்ளன. சுகாதார கட்டமைப்பு முழுமையாக சீர்படுத்தப் படவில்லை. போக்குவரத்துப் பிரச்சினை காணப்படுகின்றது. உரிய குடிநீர் வசதி இல்லை. வீட்டு வசதி இல்லை. விளையாட்டுத் துறையில் பின்னடைவு. கல்வியில் உரிய இலக்கை எட்டவில்லை. உழைப்புக்கேற்ற ஊதியம் இன்றி காணப்படுவதால் பொருளாதாரத்தில் முன்னேற முடியாத நிலை. சுயபொருளாதாரத்தை கட்டியெழுப்ப முயற்சித்தும் வளங்கள் இன்மை என பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். இவ்வாறு முக்கிய விடயங்களில் எல்லாம் மலையகம் பின்தங்கிருக்கின்ற பொழுது ஒரு சில விடயங்களை மாத்திரம் வைத்துக் கொண்டு மலையகம் அபிவிருத்தி கண்டுள்ளதாக அரசியல்வாதிகள் யாருக்கு படம் காட்டுகிறார்கள் என்பது புரியாதுள்ளது.

மலையக அரசியல்வாதிகள் பெரும்பாலானோர் தமது தொழிற்சங்க பலத்தை கட்டியெழுப்பவும் அரசியல் இருப்பை பாதுகாத்துக் கொள்ளவும் மாத்திரமே அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். அதாவது ஆதரவாளர்களையும், தொழிற்சங்க அங்கத்தவர்களையும் திருப்திப்படுத்துவதில் மாத்திரமே குறியாய் உள்ளன.

இதனால் திட்டமிடப்படாத அபிவிருத்தித் திட்டங்களே மலையகத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த திட்டமிடப்படாத அபிவிருத்தித் திட்டங்களாலேயே மலையக அபிவிருத்திக்கு பல ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டாலும் இன்றும் மலையகத்தில் அடிப்படை பிரச்சினைகளை தீர்க்க முடியாத நிலை காணப்படுகின்றது. இதற்கு மலையக அரசியல்வாதி களின் தூரநோக்கற்ற சிந்தனையே காரணம் என்பதை மறுக்க முடியாது.

இலங்கையை பொறுத்தவரை தற்போது புள்ளிவிபரங்கள் ஊடாக சர்வதேசத்திற்கு மத்தியதர வர்க்க நாடாக காட்டுவதற்கு முயற்சிப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுவதுடன் இதனால் இலங்கை மக்களுக்கே பாதிப்பு ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அந்தவகையிலே மலையகத்தில் புள்ளிவிபரங்கள் ஊடாக அபிவிருத்தி ஏற்பட்டுவிட்டாதாக ஒரு மாயை ஏற்பட்டுள்ளது. அது முற்றுமுழுதாக தொலைக்காட்சி, டிஸ்க் அண்டனா, கைபேசி பாவனை, இன்னும் ஒருசில ஆடம்பர பொருட்கள் என்பவற்றை மையப்படுத்தியதாகவே காணப்படுகின்றது.

மலையகத்தைப் பொறுத்தவரை இந்த அரசாங்கம் பெருந்தோட்டத்துறையின் அபிவிருத்திக்காக பல அர்ப்பணிப்புகளை செய்து வருகின்றது. நாட்டின் ஜனாதிபதியே மலையக மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்து வைத்திருப்பதே இதற்கு பிரதான காரணமாகும். ஜனாதிபதியும் அவரது அரசும் மலையக மக்கள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த எடுத்திருக்கின்ற முயற்சியை வரவேற்கும் அதேவேளை மலையக மக்களின் வாழ்க்கைத் தரத்தை சமூக முன்னேற்றத்தை ஏனைய சமூகங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மலையகம் எவ்வளவு பின்தங்கியிருக்கிறது என்பது புரியும்.

மலையகத்தில் தற்போதைய தேவை இலங்கையில் ஏனைய சமூகங்கள் எட்டியிருக்கின்ற வளர்ச்சியை தாமும் அடைவதாகும். இல்லாவிடின் இந்த நாட்டில் மலையக மக்களுக்கும் ஏனைய சமூகங்களுக்கும் இடையிலான இடைவெளி அதிகரிக்கும். இது எதிர்கால சந்ததியினரின் கௌரவமான வாழ்வுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

மலையகத்தில் இன்னும் பல தோட்டங்கள் வெள்ளைக்காரர்கள் உருவாக்கிய அதே நிலையிலேயே பல தசாப்தங்களைக் கடந்தும் காணப்படுகின்றது. இதெல்லாம் இந்த அரசியல்வாதிகளின் கண்களுக்கு புலப்படவில்லை. மாறாக ஒரு சில தோட்டங்களின் முன்னேற்றத்தை வைத்துக்கொண்டு ஒட்டு மொத்த மலையகமும் அபிவிருத்தி கண்டுவிட்டதாக கூறித்திரிவது யாரை திருப்திப்படுத்த என்ற கேள்வி எழுகின்றது.

ஆகவே மலையக அரசியல்வாதிகள் தோட்டங்களின் உண்மை நிலையை உணர்ந்து கருத்துகளை தெரிவிக்க முன்வரவேண்டும். உங்களுடைய அறிக்கைகளும், தகவல்களும் மலையக மக்களையே பாதிக்கும் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

மலையகம் சமூக அபிவிருத்தியை நோக்கி எவ்வளவோ தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. அவர்கள் பயணம் செய்கின்ற பாதையில் தடைகளை ஏற்படுத்தி பயணத்தை தாமதப்படுத்திவிட வேண்டாம் என்பதே மலையக அரசியல்வாதிகளிடம் மலையக மக்கள் விடுக்கும் ஒரே கோரிக்கையாகும்.

எஸ்.மோகன்

உடனடி வேலை வாய்ப்புகள்

- வயது 17 - 55 ஆண் / பெண்.
- 30,000/- க்கு மேல் வருமானம்.
- தொழிற்சாலைகள் (பிஸ்கட், சொக்லேட், கிலவுஸ், யோகட், பொலித்தீன், ஆடை).
- துறைமுகம், விமான நிலையம் (PVT).
- JSO, LSO, OIC.
- Hotel.
- மேசன், உதவியாளர்கள்.
- உணவு, தங்குமிடம் உண்டு.

நண்பர்கள், குழுக்கள், ஒரே நிறுவனத்தில்...

தொடர்புகளுக்கு :
No 38, Buhari Shopping Complex,
Main Street, Bandarawela.
Tel: 077 8508118 / 011 4422124

புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

இடம்:
ஹட்டன் டிக்கோயா நகரசபை மண்டபம்
காலம்:
09.12.2013 முதல் 16.12.2013 வரை
நேரம்:
காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

2014 ஆம் ஆண்டு கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு தேவையான அனைத்து வகையான சிங்கள, தமிழ், ஆங்கில பாடநூல்கள், உசாத்துணை நூல்கள் போன்றனவற்றை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
ரோயல் புத்தக நிலையம்,
18/H/1, டன்பார் றோட், ஹட்டன் தொ.பே: 071 8396621

புத்தக அனுசரணை: லங்கா புத்தகசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதை இன்றே செய்

ஒரு உண்மையான வெற்றியாளன், சாதனையாளனாக.. முக்கியமாகச் செய்யகூடாதது ஒன்று!!!!

ஒரு இளைஞன். நன்றாக போட்டித் தேர்வுக்கு தன்னை தயார்படுத்திக் கொண்டிருந்தான். போட்டித் தேர்வுக்கான நாளும் அறிவித்து, அதற்கான விண்ணப்பமும் கொடுத்துவிட்டார்கள். விண்ணப்பம் அனுப்புவதற்கு ஒரு மாதகால அவகாசம் இருந்தது.

அதனால் ஒவ்வொரு நாளையும் வீணாக்காமல் தொடர்ந்து படிப்பதிலேயே கவனம் செலுத்தி வந்தான். படிப்பதிலிருந்து கவனம் சிதறாமல் பார்த்துக்கொண்டான்.

இடையே விண்ணப்பம் அனுப்ப வேண்டுமே என்று நினைவு வந்தாலும், ''அதற்குத்தான் இன்னும் இரண்டு வாரங்கள் உள்ளதே'' என்று நினைத்துக்கொண்டு, மீண்டும் தன்னுடைய கவனம் முழுவதையும் போட்டித் தேர்வுக்கு தயார் படுத்துவதிலேயே இருந்தான்.

நன்றாக தயார்படுத்தி எப்படியும் இந்த முறை அரசாங்கப் பணி வாங்கிவிட வேண்டும் என்பதிலேயே அவனுடைய குறிக்கோள் இருந்தது.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசிநாளும் வந்தது. இன்னும் இருபத்தி நான்கு மணிநேரம் இருக்கிறது. மதியத்திற்கு மேல் அஞ்சல் அலுவலகத்திற்கு சென்றுவிட்டான். அங்கு சென்று பார்க்கும்போதுதான் இன்னும் விண்ணப்பமே நிரப்பாமல் இருப்பது புரிந்தது. இன்னும் இரண்டு மணி நேரம் உள்ளது. அதற்குள் நிரப்பி அனுப்பிவிடலாம் என்று அவசர அவசரமாக விண்ணப்பத்தை நிரப்பினான்.

அவசரம், பதற்றம் அவனை தொற்றிக்கொண்டது. எப்படியோ விண்ணப்பத்தை பூர்த்தி செய்துவிட்டான். இறுதியாக ஒன்றைக் கவனித்தான். விண்ணப்பத்தில் அவனுடைய போட்டோ ஒட்ட வேண்டிய இடம் காலியாக இருந்தது.

''அடடா.. போட்டோ எடுத்து வர மறந்து விட்டோமே..'' என்று நினைத்துக்கொண்டே போட்டோ ஸ்டூடியோ எங்கிருக்கிறது என விசாரித்தான்.

அங்கிருந்து அரை கிலோமீற்றர் தள்ளி ஒரு போட்டோ ஸ்டூடியோ இருப்பதாகச் சொன்னார்கள்.

பத்தே நிமிடத்தில் போட்டோவை எடுத்துக்கொண்டு வந்துவிடலாம் என்று தன்னுடைய ''டூவீலரை'' எடுத்தவனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

பைக்கை நகர்த்தவே முடியவில்லை. டூவீலரின் முன் பக்க சக்கரத்தில் காற்றே இல்லை.

தலையிலடித்துக் கொண்டு, வழியில் சென்றவரிடம் ''லிப்ட்'' கேட்டு அங்கு சென்று போட்டோவும் எடுத்துக் கொண்டு வந்து அதை ஒட்டிவிட்டான்.

கடைசியில் அரைமணி நேரமே இருந்தது. அரைமணி நேரத்தில் அஞ்சல் அலுவலகத்தை மூடி விடுவார்கள், அதற்குள் கொடுத்துவிடலாம் என்ற நம்பிக்கையில் அஞ்சலகத்தை அடைந்தான்.

விண்ணப்பத்தைக் கொடுப்பதற்கு முன்பு ''ஒருமுறை விண்ணப்பத்தை சரிபார்த்துவிடலாம்'' என்று பார்க்கும்பொழுதுதான் அவனுக்கு ஒரு பேரிடி காத்திருந்தது..

அப்படியே சரிந்து அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்துவிட்டான்.

அப்படி என்னதான் அந்த விண்ணப்பத்தில் இருந்தது?

விண்ணப்பதாரரின் பெயர் என்ற இடத்தில் இளைஞனுடைய அப்பாவின் பெயர் இருந்தது.

ஒரு சிறிய வேலைதான். சிறிது நேரத்திலேயே முடிந்து விடக்கூடியது. ஆனால், அதனுடைய முக்கியத்துவமோ பன்மடங்கு அதிகம்.

இளைஞனின் ''தள்ளி''ப் போடும் மனப்பான்மையால் வந்த வினை!

''இன்னும் சிறிது நேரம் கழித்து செய்யலாம்..'', ''நாளை செய்யலாம்... இன்னும் நிறைய நாட்கள் இருக்கிறதே..'', ''அடுத்த வாரம் செய்யலாம்..'', ''அடுத்த மாதம்தானே அதற்கு கடைசி நாள்.. அதனால் இன்னும் பதினைந்து நாட்கள் கழித்து செய்துகொள்ளலாம்'' என்று ஒரு சிலர் தாம் செய்யவிருக்கும் முக்கியமான செயல்களிலும், அதனுடைய முக்கியத்துவம் உணராமல் ''தள்ளி''ப் போட்டுக்கொண்டே செல்வார்கள்..

ஒரு செயலைச் செய்யவேண்டுமெனில் அதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து உடனடியாக செயற்பட்டு அதனை முடித்துவிட வேண்டும்.



இந்த வாரம் உங்களுக்கு எப்படி

12.12.13 முதல்

18.12.13 வரை

	வியாழன்	வெள்ளி	சனி	ஞாயிறு	திங்கள்	செவ்வாய்	புதன்
மேஷம்	செலவு	மேன்மை	சாந்தம்	வரவு	சிக்கல்	நன்மை	ஆதாயம்
ரிஷபம்	தனம்	உயர்வு	அமைதி	தாமதம்	ஆதரவு	வெற்றி	சுகம்
மிதுனம்	வெற்றி	அன்பு	நட்பு	ஜெயம்	தோல்வி	வரவு	வரவு
கடகம்	கவலை	ஆதரவு	ஆதரவு	ஆதரவு	செலவு	தாமதம்	செலவு
சிம்மம்	ஆக்கம்	நன்மை	ஆக்கம்	வெற்றி	ஆதாயம்	நலம்	பாராட்டு
கன்னி	ஒய்வு	பெருமை	பிரமை	பகை	சுகம்	பிரீதி	பயம்
துலாம்	உற்சாகம்	பொறாமை	சுகம்	கவனம்	விருத்தி	நட்பு	முயற்சி
விருச்சிகம்	இலாபம்	விவேகம்	பெருமை	குழப்பம்	கவனம்	புகழ்	தெளிவு
தனுசு	கடன் தீரல்	பணிவு	நற்சொல்	சிந்தனை	ஆக்கம்	ஆதரவு	சாந்தம்
மகரம்	நன்மை	நலம்	போட்டி	சோதனை	அலைச்சல்	இலாபம்	பக்தி
கும்பம்	உழைப்பு	உற்சாகம்	ஜெயம்	அமைதி	பாசம்	மேன்மை	உழைப்பு
மீனம்	சினம்	ஒய்வு	சாதனை	சுகம்	உயர்வு	இன்பம்	தாமதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களின் பாலியல் சேஷ்டைகளும்

அவர்களுக்கு பாதுகாப்பளிக்கும் நிர்வாகமும், அரசியல்வாதிகளும்

கடந்த வருடம் 2012 ஆம் ஆண்டு சிறுவர்களுக்கு எதிராக 4500 இற்கும் மேற்பட்ட பாரதூரமான குற்றச் செயல்கள் இடம்பெற்றிருப்பதாகவும் இவ்வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் ஜூலை மாதம் வரை 700 இற்கும் மேற்பட்ட சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றிருப்பதாகவும் சட்ட மா அதிபர் திணைக்கள புள்ளி விபரங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

அந்தவகையில் மாதா, பிதா, குரு, தெய்வம் என்பதன்படி தெய்வமாக இருக்கவேண்டிய ஆசிரியர்களே பிஞ்சு மாணவர்களிடம் தமது கேவலமான இச்சையைத் தீர்த்துக்கொள்ள முயல்வது மிருக இனங்களில் கூட நடக்காத ஈனச் செயலாகும்.

கடந்த வாரம் கொட்டகலை பகுதியில் திருமணம் முடித்து இரண்டு குழந்தைகளுக்கு தந்தையான ஓர் ஆசிரியர் தன்னிடம் கல்வி கற்கும் 14 வயது மதிக்கத்தக்க மாணவியை தொடர்ச்சியாக தமது பாலியல் இச்சைக்கு பயன்படுத்தி வந்துள்ளதாக வெளிவந்துள்ள செய்தி அதிர்ச்சியளிக்கின்றது.

மிருகங்கள், பறவைகள் கூட பராயமடையாத தமது இளம் பருவத்தினருடன் பாலியல் உறவுகளை வைத்துக் கொள்வதில்லை. ஆனால் தெய்வமாக மதிக்கப்பட வேண்டிய ஆசிரியர் அதுவும் திருமணம் முடித்து பல உறவுகளைக் கண்டவர்கள்தான் இவ்வாறு நடந்து கொள்கின்றனர்.

அண்மையில் கந்தப்பளை பிரதேசத்தில் ஓர் ஆசிரியர் தனது வகுப்பில் கல்வி கற்ற மாணவியை கர்ப்பமாக்கியது. சில வருடங்களுக்கு முன் தலவாக்கலையில் பிரபல பாடசாலை ஒன்றில் ஆசிரியர் ஒருவர் தன்னிடம் கல்வி கற்ற மாணவியை துஷ்பிரயோகம் செய்தது.

அதேபோல அப்புத்தளை பகுதியில் பேரப்பிள்ளைகளைக் கண்டுள்ள வயதிலுள்ள ஓர் அதிபர் பிஞ்சு மாணவர்களை தொடர்ச்சியாக தமது பாலியல் இச்சைக்கு பயன் படுத்தியமை.

இவ்வாறு பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

கொட்டகலையில் இடம் பெற்ற இச்சம்பவம் தொடர்பாக குறித்த பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகம் சார்ந்தவர்களிடம் இது குறித்து கேட்டபோது அவர்கள் அலட்சியமாக பதிலளித்தார்கள்.

உண்மையோ பொய்யோ எங்களுக்கு ஒன்றும் தெரியாது. நீங்கள் அவரிடம்தான் கேட்க வேண்டும் என்று பொறுப்பில்லாமல் பதிலளிக்கின்றார்கள்.

அப்பாடசாலையிலுள்ள ஆசிரியர்களின் பிள்ளைகளோ அல்லது நிர்வாகம் சம்பந்தப்பட்டவர்களின் பிள்ளைகளாகவோ இருந்திருந்தால் இவர்கள் இவ்வாறு அலட்சியமாக பதில் அளிப்பார்களா? இவ்வாறு ஈனச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு சட்ட ரீதியான பாதுகாப்புக்கு ஆதரவளிப்போரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இவர்களிடம் அப்பிள்ளைகள் தாம் விரும்பித்தான் இவ்வாறு நடந்து கொள்கின்றார்கள் என்று சிலர் சாமர்த்தியமாக பதிலளிக்கின்றார்கள்.

மாணவர்கள் தவறான வழியில் செல்லும்போது அவர்களை சரியாக வழிநடத்துவது ஒவ்வொரு ஆசிரியரினதும் கடமையாகும். மாணவர்கள் தவறு செய்யும்போது அந்த தவறை ஆசிரியர்களும் செய்துவிட்டு நியாயப்படுத்துகின்றார்கள்.

பெரும்பாலானவர்கள் அரசியல் பலம் காரணமாக தப்பித்துக் கொள்கின்றனர். இது சம்பந்தமாக இச்சமூகம் இதுவரை எதிர்ப்பு நடவடிக்கைகளையோ ஆர்ப் பாட்டங்களையோ மேற்கொள்ளவில்லை.

அப்பாடசாலை மாணவர்களும் இவ் ஆசிரியருக்கு எதிராக எவ்வித கோஷங்களும் எழுப்பவில்லை. எவ்வித விழிப்புணர்வு நிகழ்வும் இல்லை. எமது சமூகம் எந்த விதத்திலும் சமூகத்தோடு சாத்தியப்படாத திட்டங்களை வரவேற்கின்றன. மழுங்கிய நிலையில் இருப்பது எமது சமூகம் மட்டுமே. வாய்மூடி மௌனமாக வேடிக்கைதான் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அதேவேளை 2012 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரத்தில் கொழும்பு பாலிக்கா வித்தியாலய மாணவி செனானி குணதிலக்க வர்த்தகத்துறையில் தேசிய மட்டத்தில் முதலாம் இடம் பெற்றார். இவருக்கு கற்பித்த ஆசிரியர் குமுதுலியனகே ரூபா 40 இலட்சம் பெறுமதியான தன்னுடைய காரை தன் மாணவிக்கு அன்பளிப்பு செய்துள்ளார். இவ்வாறான மனித நேயமிக்க ஆசிரியர்களும் இருக்கின்றார்கள்.

அதேபோல கல்விக்கு புகழ்பெற்ற கொட்டகலை பிரதேசத்தில் சில வருடங்களுக்கு முன்பதாக சக்திவேல் என்ற வர்த்தகப் பிரிவு ஆசிரியரிடம் கல்வி கற்று உயர்தர வர்த்தகப் பிரிவில் ஒரே தடவையில் 50 மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றார்கள். இவர்களை பாராட்டும் முகமாக அலரிமாளிகையில் இவர்களுக்கு ஜனாதிபதியால் விருதுகள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே எம்மத்தியில் போற்றத்தக்க ஆசிரியர்கள் வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றார்கள். சில நாகரிகமற்ற ஆசிரியர்களின் செயற்பாடுகள் காரணமாக மாணவர்களுக்கு உணர்வோடு கல்வி சேவையாற்றுபவர்களுக்கும் அவப்பெயர் ஏற்படுகின்றது.

ரிஷி

யாரிடம் இருக்கிறது நேர்மை?

ஒரு சுவாரஷ்ய ஆய்வு!

உலக நாடுகளில் மக்களிடம் இன்னும் எந்த அளவில் நேர்மை இருக்கிறது என சோதித்துப் பார்க்க விரும்பியது ரீடர்ஸ் டைஜஸ்ட் ஆங்கில மாத இதழ்!

இதற்காக உலகின் பல நாடுகளையும் தேர்வு செய்தது. ஒரு மணிபேர்சில் கொஞ்சம் பணம் (இது நாட்டுக்கு நாடு மாறுபட்டது!) பேர்சின் சொந்தக்காரரின் முகவரி, தொலைபேசி எண், அவரின் குடும்ப போட்டோ, கடையில் வாங்க வேண்டிய பொருட்களின் பட்டியல், சில செய்தித் தாள்களின் கட்டிங்குகள் ஆகியவற்றை சன சந்தடி மிக்க தெருக்கள், வங்கிகள், பார்க்குகள் போன்ற பொதுமக்கள் கூடும் இடங்களில் நைசாக நழுவ விட்டு மறைந்து நின்று கவனிப்பர்.

இந்த ஆய்வில் சுவாரஷ்யமான பல முடிவுகள் வெளிவந்துள்ளன. அதுமட்டுமல்ல சில நாடுகளின் உண்மை முகங்களும் வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றன.

உலகம் முழுவதும் நடத்தப்பட்ட இந்த ஆய்வில் சிறிய நகரங்களிலேயே அதிக நாணயம் உள்ளதும் தெரிய வந்துள்ளது. மேற்கு நாடுகளாகட்டும் கிழக்கு நாடு களாகட்டும் பெரிய நகரங்களை விட சிறிய நகரங்களில் தான் நாணயத் தன்மை அதிகமுள்ளது.

அதிலும் உலகில் அதிகம் நேர்மை மிக்கவர்கள் யார் தெரியுமா சிங்கப்பூர் வாசிகள்தான். சட்ட திட்டங்கள் கடுமையாக உள்ள கட்டுப்பாடான ஜனநாயக நாடான சிங்கப்பூரில் 10 பேரில் ஒருவர் மட்டுமே சபலத்திற்கு உட்பட்டு இருக்கிறார். ஒன்பது பேர்சுகள் திரும்ப வந்துவிட்டதாம்.

அடுத்த இடத்தில் இருப்பவர்கள் யார் தெரியுமா? இந்தியர்கள்! அதிலும் இந்தியாவில் உள்ள ஏழைச் சகோதரர்கள்.

ஊழல் நிறைந்த அதிகாரிகளாலும் அரசியல்வா திகளாலும் ஆளப்பட்டாலும் தனிப்பட்ட முறையில் இந்தியர்களிடம் உள்ள நேர்மை இன்னும் செத்து விடவில்லை. அவர்களிடம் நாணயம் இன்றும் இன்னமும் இருக்கிறது என்பது இந்த ஆய்வில் தெளிவாகி உள்ளது.

இந்த ஆய்வு இந்தியாவின் திருவனந்தபுரத்தில் நடத்தப்பட்டது. ஆய்வில் 10 இற்கு 8 பேர் பேர்சை திரும்பக் கொண்டு வந்து கொடுத்துள்ளனர்.

அடுத்ததாக ஜப்பானில் உள்ள கமகுரா என்ற நகரத்தில் நேர்மை அதிகம் உள்ளதாம். இங்கு 10 இற்கு 7 பேர்ஸ் திரும்பக் கிடைத்துள்ளது.

ஆசிய நாடுகளில் பாரம்பரியத்தின் கோட்பாடுகள் இன்னும் மதிக்கப்படுவதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது. ஒரே ஒரு நாடு மட்டும் [illegible] அந்த வரிசையில் இல்லை. அதுதான் வாழும் ஹொங்கொங். இங்கு நேர்மை - நாணயத்திற்கு இடமில்லாமல் போய்விட்டது. 10 இற்கு மூன்று பேர்சுகள் மட்டுமே திரும்ப வந்துள்ளனர்.

பேர்சை திரும்பக் கொண்டு வந்து கொடுத்த நேர்மையாளர்களுக்கு அந்த பேர்சையே அன்பளிப்பாக அளித்தபோது ஒரே ஒரு அமெரிக்கர் மட்டும் மறுத்திருக்கிறார். ஐரோப்பிய நாடுகளில் 25 சதவீதத்தினர் மறுத்துள்ளனர்.

ஆசியக் கண்டத்தைச் சேர்ந்த நேர்மையாளர்கள் நேர்மையை விலை பேசுவதை விரும்புவதில்லை என்பதை ஆய்வு கண்டறிந்துள்ளது.

நேர்மையாளர்களுக்கு அதே பேர்சை அன்பளிப்பாகக் கொடுத்தபோது 72 சதவீதத்தினர் அன்பளிப்பு வேண்டாம். நன்றி... எனக் கூறியுள்ளனர். தென்கொரியாவின் தலைநகர் சியோலைச் சேர்ந்த மாணவன் ஒருவன் என் கடமையைத் தான் செய்தேன்; அதற்கு அன்பளிப்பு எதற்கு? எனக் கூறி ஆசிய மக்களின் சென்டிமென்டுகளை எதிரொலித்து உள்ளான்.

வயது, பால், சமூக அந்தஸ்து, இவற்றுக்கும் குணத்துக் கும் சம்பந்தமே இல்லை என்பதும் தெளிவாகியுள்ளது.

நன்கு உடுத்திய நாகரிகப் பெண்மணி ஒருவர் மும்பையில் பர்சை நைசாக எடுத்துக் கொண்டு செல்ல திருவனந்தபுரத்தை சேர்ந்த மூடை தூக்கும் தொழிலாளியான கிருஷ்ணன் குட்டிப் பேர்சை உரியவரிடம் சேர்க்கும் முன் தவியாய் தவித்துப் போய்விட்டாராம்.

நேர்மை என்பது அந்தஸ்தில், பணத்தில், படிப்பறிவில் அல்ல மனதில் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதிர் BOX

கண்ணாமூச்சி



இந்த படத்தில் உள்ள எழுத்துகளைக் கொண்டு குறைந்தது 12 வார்த்தைகளைக் கண்டறிய வேண்டும்... முயன்று பாருங்கள்

இதற்கான விடைகளை அடுத்த வார இதழில் எதிர்பார்க்கவும்...

வார்த்தை விளையாட்டு

சூப்பர் சூப்பர்



01

02

03



01. அமலா பால்
02. த்ரிஷா
03. அசின்
04. சினேகா
05. ஹன்சிகா
06. அஞ்சலி

யார் இந்த நடிகை என கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?

சென்ற வார வார்த்தை வேட்டைக்கான விடைகள்

01. முள்ளம்பன்றி
02. வரிக்குதிரை,
03. கடலாமை
04. காண்டாமிருகம்,
05. வெள்ளாடு
06. சிறுத்தைப்புலி,
07. கீரிப்பிள்ளை
08. நீர்யானை
09. உடும்பு
10. வௌவால்
11. காட்டுப்பன்றி

என்னை யார் என்று தெரிகிறதா? கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்? இதற்கான விடையை 28 ஆம் பக்கம் பார்க்க...

வாசகர்களின் கவனத்திற்கு!

உங்கள் பகுதியில் இடம்பெறும் சம்பவங்கள், சிறுகதை, கவிதை, கட்டுரை என அனைத்து விதமான ஆக்கங்களையும் எமது முகவரிக்கு அனுப்பிவையுங்கள். தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.

முகவரி:
உதய சூரியன்
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்
இல.68, எலிஹவுஸ்வீதி,
கொழும்பு 15.

மின்னஞ்சல்: thinaupcountry@yahoo.com

Fax: 0112540695

வார்த்தைப் புதிர் - 87



இடமிருந்து வலம்

01. நவம்.
06. தங்கத்தின் பெறுமதி இதன் மூலம் மெருகூட்டப்படும்
10. இறை தொண்டில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கப்படும் அங்கீகாரம்.
12. விஷேடமான நாள்.
16. கடன் பெற்றால் தண்டமாக அறவிடப்படுவது. (குழம்பியுள்ளது)
17. ஒரு பறவை
18. இலங்கையின் ஒரு நகரம்.
20. தாவரத்தின் முதன்மை.
21. விரதம் இப்படியும் சொல்லப்படும்

வலமிருந்து இடம்

03. வல்லரசு நாடுகளில் ஒன்று.
05. தாவரத்தின் வித்துகள்.
07. ஒரு உடற் பகுதி.
11. காகத்திற்கும் இதற்கும் சம்பந்தமுண்டு
19. ஆரம்பகால மனிதன் இதன் மூலம்தான் உணவைப் பெற்றான்.

மேலிருந்து கீழ்

01. பாடசாலையில் மாணவர்கள் செய்யும் வேலைத்திறன்
02. பஞ்சாமிர்தம் செய்ய இவை தேவை.
03. இது ஒரு கூடாத குணம்.
04. இது இனிக்கும்.
05. குழந்தைகளுக்கான பாட்டு.
12. பொம்மை.
13. எல்லை.
15. இந்தச் சத்து உடலில் கூடுவது நல்லதல்ல.
16. மூளையில்லாத முரடன் இதற்கு அலைவான் என்று ஒரு பழமொழி உள்ளது. (குழம்பியுள்ளது)

கீழிருந்து மேல்

08. கணித குறியீடு.
09. இதை மனிதனுக்கேயுரிய ஒரு வரம் என்பர். (குழம்பியுள்ளது)
14. திரையுலகோடு சம்பந்தப்பட்டவர்.
19. முருகனின் கையில் இருப்பது.
22. இதற்கு ஆசைப்படாதவர்களே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100 வருடங்களுக்கு ஒரு முறை ஓடும் பேய் வண்டி

சினிமா பாணியில் ஒரு ரயில் சேஸிங்

ஓடிக்கொண்டிருக்கும் ரயிலில் பாய்ந்து ஏறும் கதாநாயகன், வில்லன் மற்றும் அவனது சகாக்களுடன் சண்டையிட்டு பாரிய இடையூறுகளுக்கெல்லாம் முகம்கொடுத்து ரயில் எஞ்சினுக்குள் அதுவும் தலைகீழாகப் புகுந்து சாரதியை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து அந்த ரயிலையே நிறுத்தி பாரிய அனர்த்தங்களை தடுக்கும் காட்சிகளை நாம் பல திரைப்படங்களில் பீர்த்து ரசித்திருப்போம்.

ரத்மலானை ரயில் நிலையத்திலிருந்து காலி இருக்கும் திசையில் மூன்று கிலோமீற்றர் தூரத்தில் இவ்வாறானதொரு உண்மைச் சம்பவம் கடந்த 5 ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

அதுவும் ரயில் சாரதியின்றி தானாகவே பயணித்த ரயிலையே அந்த ரயில்சென்ற வேகத்திற்கு ஒடோடி ஏறி அதனை நிறுத்தி பாரிய அனர்த்தங்களை தவிர்த்திருக்கின்றார் ரயில்வே திணைக்களத்தைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவர்.

மாளிகாவத்தையில் இருந்து தெமட்டகொடை, மருதானை, கொம்பனிவீதி, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெஹிவளை, கல்கிசை ரத்மலானை வரைக்கும் கமார் 15 கிலோமீற்றருக்கு இந்த ரயில் சாரதியின்றி தானாகவே பயணித்துள்ளது.

அதிகாலைவேளை அந்த வழித்தடத்தில், ரயில்களின் சேவையானது முற்றுமுழுதாக இல்லாமல் இருந்தமையினால் பாரிய அனர்த்தங்கள் எதுவுமே இடம்பெறவில்லை, தண்டவாளங்களில் மட்டுமல்ல பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் கூட எவ்விதமான அசம்பாவிதங்களும் ஏற்படவில்லை.

ஷன்டின் என்ற வை-கிளாஸ் ரயில் இயந்திரமே சாரதியின்றி அன்று அதிகாலை 1.15 க்கு இவ்வாறு பயணத்தை ஆரம்பித்துள்ளது.

இந்த ரயிலை பயணிப்பதற்கு அனுமதியளித்தது யார்? அந்த ரயில் இயந்திரத்தின் சாரதி யார்? என்ற கேள்விகள் ரயில் நிலையத்திலிருந்தவர்களிடத்தில் சந்தேகத்தை ஏற்படுத்தவே அவர்கள் விழிப்படைந்தனர்.

விரைந்து செயற்பட்ட ரயில் நிலைய பொறியியலாளர்கள் ரயில்வே கட்டுப்பாட்டறைக்கு அறிவித்துவிட்டு அம்புலன்ஸ் வண்டியின் மூலமாக ரயிலை மறுப்புறத்தில் விரட்டிச் சென்றனர்.

கொழும்பிலிருந்து மொரட்டுவை வரைக்குமான ரயில் நிலைய முகாமையாளர்களுக்கு எச்சரிக்கை அறிவிப்பை கொடுத்து ரயிலை பிடிப்பதற்காக தொலைபேசிகளில் பல்முனை தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தனர்.

மணிக்கு 5 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கும் ரயில் எஞ்சினை அண்மித்தலை தவிர அவர்களால் ரயில் எஞ்சினை நிறுத்துவதற்கு உடனடியாக எந்த நடவடிக்கையையும் எடுக்க முடியாதிருந்தது.

ரயில் எஞ்சினை அண்மிக்கும் வரையிலும் சாரதியின்றி பயணிக்கும் அந்த ரயிலுக்கான பயணப்பாதையை (தண்ட வாளத்தை) சீர்படுத்திக்கொடுப்பதைத் தவிர மாற்று செயற்பாடுகளை ரயில் நிலைய முகாமையாளர்களால் முன்னெடுக்க முடியாதிருந்தது.

அம்புலன்ஸ் வண்டி வெள்ளவத்தையை கடந்தபோது ரயில் எஞ்சின் தெஹிவளை ரயில் நிலையத்தையும், அம்புலன்ஸ்வண்டி தெஹிவளை ரயில் நிலையத்தை தாண்டிய போது ரயில் கல்கிசையையும் கடந்து சென்று கொண்டிருந்தது.

கரையோர தண்டவாளத்தில் ரயிலும் அதற்கு சமாந்தரமாக அம்புலன்ஸ் வண்டியும் பயணித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் இருமுறை சிந்திப்பதற்கு இனியும் காலநேரம் இன்மையினால் அம்புலன்ஸ் வண்டியிலிருந்த அதிகாரியொருவர் ரத்மலானை பகுதியில் கிழமையில் அதுவும் எவ்விதமான அனர்த்தங்களையும் ஏற்படுத்தாது அதிகாலை 1.45 மணிக்கு 3.5 கிலோமீற்றர் வேகத்தில் மாளிகாவத்தை ரயில் சாலையிலிருந்து ரயில் புறப்பட்டு சென்றுள்ளது. களனிவெலி பாதையில் சேவையில் ஈடுபடுத்தப்படும் ரயில் எஞ்சினே இவ்வாறு சாரதியின்றி பயணித்துள்ளது. அந்த ரயில் வை-கிளாஸ் ரயில் எஞ்சினைப் போல ரத்மலானை வரைக்கும் பயணிக்கவில்லை.

ரயில் தண்டவாளங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல கரத்தைகளை முட்டி மோதிக்கொண்டு மருதானை கப்பித்தாவத்தை இந்து கோவில் வரைக்குமே பயணித்ததாக வரலாற்று சான்றாதாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

- நாடோடி -

வைத்து குதித்து இறங்கி ரயில் பின்னால் மிகவேகமாக ஓடத் தொடங்கினார்.

அப்பொழுது நேரம் அதிகாலை 2.15 இருக்கும். எந்தவொரு பயணிகள் ரயிலோ, சரக்கு ரயிலோ பயணிக்காத நேரம். ஏதாவது ஒரு ரயில் பயணித்திருந்தால் கூட பாரிய அனர்த்தத்தைத் தவிர வேறொன்றையும் எம்மால் பார்த்திருக்க முடியாது. ஒருவாறு ரயில் எஞ்சினில் ஏறிய அந்த பொறியியலாளர் ரயிலை நிறுத்திவிட்டார்.

சாரதியின்றி பயணித்த இந்த வை-கிளாஸ் ரயில் எஞ்சின் பயணிகள் ரயில்களுக்காக பயன்படுத்தப்பட மாட்டாது என்று தெரிவித்துள்ள ரீயில்வே திணைக்கள அதிகாரிகள் ரயில் தண்டவாள திருத்த பணிகளின்போது உபகரணங்களையும் பொருட்களையும் எடுத்துச்செல்வதற்கே இந்த ரயில் எஞ்சின் பயன்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சாரதியின்றி பயணித்த ரயிலை பேய் ஓட்டிச் சென்றிருக்கலாம் என்றும் அது பேய் வண்டியென்றும் பரவலாக பேசப்பட்டது. இந்நிலையில் இன்றைக்கு சரியாக 100 வருடங்களுக்கு முன்னர் அதாவது 1913 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ரயிலொன்று சாரதியின்றி அதுவும் மாளிகாவத்தையிலிருந்து அதே தண்டவாளத்தில் புறப்பட்டு பயணித்துள்ளது.

ஒரே ரயில், ஒரே நேரத்தில், ஒரே திசையில், ஒரே

Mr. Cool Air Conditioning
Mirror Finish

Mr. Cool Air Conditioning
Keeps you cool
Specialist in Installation, Maintenance,
Suppliers of all type of Air Conditioners
and Refrigerators, Servicing & Repair Auto A/C
Dealers AUX Air Conditioner
2-A, Fountain House Lane,
Deans Road,Colombo - 10
Tel/Fax: 0112690954
Email: mrcool@sltnet.lk
HOT LINE : 0777-913537

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு தீ வைத்தபோதும்!

சீருடை இன்றி பரீட்சைக்குத் தோற்றிய மாணவி...

தற்போது நடைபெற்றுவரும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவிருந்த மாணவியொருவரை பரீட்சைக்குத் தோற்றுவதிலிருந்து தடுக்கும் வகையில் அம்மாணவியின் வீட்டை தீயிட்டுக் கொழுத்திய சம்பவமொன்று தம்புத்தேகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

பாடசாலை உபகரணங்கள், சீருடை, பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் போன்றன தீக்கிரையாகிய நிலையிலும் அம்மாணவி தனது பாடசாலை அதிபரின் உதவியுடன் பரீட்சைக்குத் தோற்றியுள்ளார்.

தம்புத்தேகம மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஜயமாலி நிஸ்ஸங்க என்ற மாணவியின் வீடே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் அம்மாணவி தோற்றவுள்ள நிலையில் அதனைத் தடுக்கும் முகமாக அவரது எதிரியொருவரினால் வீட்டுக்கு தீ வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

குறித்த மாணவியின் அறை முற்றாக தீக்கிரையாகியுள்ள நிலையில் அதிலிருந்த பாடசாலை உபகரணங்கள், சீருடை, பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் போன்றன முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

பாடசாலை சீருடை இன்மையால் அம்மாணவி சிவில் உடையிலேயே பரீட்சைக்குத் தோற்றியுள்ளார். அம்மாணவியின் புகைப்படமொன்றை பாடசாலை அதிபர் அத்தாட்சிப்படுத்திக் கொடுத்த நிலையில் அவர் எவ்வித பிரச்சினையும் இன்றி பரீட்சையை எழுதியதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் தம்புத்தேகம பொலிஸில் மாணவியின் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதை அடுத்து பொலிஸார் இச்சம்பவம் குறித்து தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நான்கு கால் கோழி!

கொழும்பு கொச்சிக்கடை பகுதி கோழிக்கடையொன்றுக்கு கொண்டுவரப்பட்ட கோழி ஒன்று நான்கு கால்களுடன் காணப்பட்டது. இந்த அதிசய கோழியை பலரும் ஆச்சரியமாகப் பார்த்துச் சென்றனர்.

படம்:- ரமேஷ்

கொழும்பு நல்லாயன் மகளிர் மகா வித்தியாலய ஆரம்பப்பிரிவு மாணவர்களின் 2013 ஆம் வருடத்திற்கான பரிசளிப்பு விழா வித்தியாலய அதிபர் அருட்சகோதரி மாறி யூப்ரேசியா தலைமையில் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. விழாவில் பரிசுபெறும் மாணவர்களும் இடம்பெற்ற கலை நிகழ்வுகளையும் இங்கு காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது தற்கொலையை இணையத்தில் ஒளிபரப்பிய வாலிபர்!

இன்று இணையத்தில் எதை எதையோ ஒளிபரப்பி வருகிறார்கள் அதை நாமும் ஆவலுடன் பார்த்துத் தான் வருகிறோம். அந்த வகையில் ஒருவர் தனது தற்கொலையை இணையத்தில் ஒளிபரப்பி பரபரப்பு உண்டாக்கினார்.

அமெரிக்காவை சேர்ந்த ஸ்டீபன் என்ற 20 வயதுள்ள இளைஞர் தான் தற்கொலை செய்து கொள்ளப் போவதாக இணையத்தில் அறிவித்தார். இத்தனை மணிக்குத்தான் தான் தற்கொலை செய்துகொள்வதாக அறிவித்திருந்தார். அதன்படி சரியாக வீடியோ சட்டில் அவருடன் 500 இற்கும் மேற்பட்டோர் இணைந்தனர்.

முதலில் சில மாத்திரைகளை அவர் எடுத்துக் கொண்டார். பிறகு அதிகமாக மதுவை குடித்துவிட்டு தனது அறையில் தீ வைத்துக் கொண்டார்.

இந்த காட்சி இணையத்தில் நேரடியாக ஒளிபரப்பானபோது பலர் ரசித்து மகிழ்ந்தனர். ஒரு சிலரே வேண்டாம் என்றனர். ஆனால், அவர் விடுவதாக இல்லை. தொடர்ந்து தீ வைத்துக்கொண்டே இருந்தார்.

பின்னர் அதில் இருந்த சிலர் பொலிஸுக்கு தகவல் கொடுத்தனர். நம்ம ஊர் பொலிஸ் மாதிரி எல்லாம் முடிஞ்சதுக்கப்புறம் கடைசி நேரத்தில் வராமல் சரியான நேரத்தில் சென்று பொலிஸார் அவரை காப்பாற்றினர்.

உலகச் செய்திகள்

உலகிலேயே அசிங்கமான நாய் மரணத்தை தழுவியது

அமெரிக்காவின் நியூஜெர்ஸியைச் சேர்ந்த கரேன் குவிக்லிக்கு சொந்தமான நாய் எல்வுட் (8). 2007 ஆம் ஆண்டு கலிபோர்னியாவில் நடைபெற்ற உலகின் மிகவும் அழகற்ற நாய் என்ற போட்டியில் பங்கேற்று பட்டத்தை வென்றது. அதன்பின் அதன் புகழ் அமெரிக்கா மட்டுமன்றி பிரேஸில், ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளிலும் பரவத் தொடங்கியது.

அந்த நாய்க்கு ஏராளமானோர் ரசிகர்களாக மாறினர். இந்த உலக பேம்ஸான் எல்வுட் திடீரென நோய்வாய்ப்பட்டு உயிரிழந்தது. எப்போதும் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டிருக்கும் எல்வுட், சற்று மூடிய கண்களுடனும், தலையில் விசித்திரமான வெள்ளை முடிக் கற்றைகளுடனும் வலம் வந்தது.

மிகவும் வித்தியாசமாக இருந்த அதன் முகமே பலரையும் ஈர்க்கத் தொடங்கியது.

இந்நிலையில் தனது நாய் எல்வுட்டை மிகவும் நேசித்த அதன் உரிமையாளர் குவிக்லி, எவ்ரி ஒன் லவ்ஸ் எல்வுட் என்ற தலைப்பில் குழந்தைகளுக் கான புத்தகம் ஒன்றையும் எழுதினார்.

அவுஸ்திரேலியாவில் ஆணுக்கும் ஆணுக்கும் டும் டும் டும்

அவுஸ்திரேலியாவில் முதன் முதலாக ஆணுடன் ஆணுக்கு திருமணம் இவ்வாரம் நடந்துள்ளது. ஒரினப் பிரியர்கள் திருமணம் செய்ய அனுமதித்து புதிய சட்டம் அமுலுக்கு வந்த சில வினாடிகளில் இந்த திருமணம் கான்பெர்ரா நகரில் நடந்தது. ஒரினச்சேர்க்கைப் பிரியர்களின் கூட்டமைப்பு தலைவர் ரோட்னி க்ரூம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு சட்டம் அமுலானதும் அடுத்த சில விநாடிகளில் ஆணுடன் ஆண் ஒரின திருமணத்தை நடத்தி வைத்தார். இவர்களைப் போல 46 ஜோடிகள் இன்னும் ஒரு வாரத்தில் திருமணம் செய்ய உள்ளனர்.

ப்பா...! இவர்தான் சாப்பாட்டு ராமன்

8,000 கலோரி சக்திப் பெறுமானமுடைய 5.6 இறாத்தல் நிறையுடைய சான்ட்விச் உணவை 36 நிமிடத்தில் உண்டு பிரித்தானிய இளைஞர் ஒருவர் சாதனை படைத்துள்ளார்.

8 துண்டுப் பாண்களுக்கு இடையில் நிரப்பப்பட்ட இறைச்சி, பொரியல்கள், வெண்ணெய், முட்டை, தக்காளி, மரக்கறிக் கலவை உள்ளடங்கலான உணவுப் பொருட்களை நிரப்பி தயாரிக்கப்பட்ட மேற்படி இராட்சத உணவை உண்ணும் மனிதனுக்கு எதிராக சான்ட்விச் என்ற தலைப்பிலான இந்தப் போட்டியில் 116 பேர் பங்கேற்று தோல்வியைத் தழுவியுள்ளனர்.

ஒரு மணி நேர வரையறையைக் கொண்ட இந்தப் போட்டியில் பங்கேற்ற வேறு எவருமே அந்த சான்ட்விச் உணவை முழுமையாக உண்ணவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரையல்லவா காதலிக்கனும்

மனசுக்கு பிடித்த பெண்ணுக்கு விதம் விதமான பரிசுகளை வாங்கித் தருவதில் காதலர்களுக்கு அலாதிப் பிரியம். சீனாவைச் சேர்ந்த ஒரு காதலர் தன் காதலிக்கு பரிசு அளித்த விதத்தைக் கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள்.

மெங் குவாங் (27) என்ற இளைஞர் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். லின்சன் என்ற பெண்ணை சில ஆண்டுகளாக காதலித்து வந்தார். சமீபத்தில் தான் இவர்களின் திருமணத்துக்கு பெற்றோரின் சம்மதம் கிடைத்தது.

இந்த மகிழ்ச்சியைக் கொண்டாடும் வகையில் அழகான 18 கூடைகளை வாங்கி அவற்றில் பணத்தை நிரப்பி மேல் பகுதியை பரிசுப் பொருட்களை அலங்கரிப்பதற்காக கட்டும் ரிப்பன்களால் கட்டிவிட்டார்.

பின் இந்த 18 கூடைகளையும் காதலியின் வீட்டுக்கு கொண்டு செல்வதற்காக 18 ஊழியர்களை அமர்த்தினார். ஊழியர்கள் அந்தக் கூடைகளை லின் சன்னிடம் கொடுத்ததும் லின் சன் மட்டுமல்ல அந்த சுற்று வட்டாரப் பகுதியிலிருந்த அனைவருமே ஆச்சரியப்பட்டனர்.

அந்தக் கூடைகளில் இருந்த பணம் எவ்வளவு தெரியுமா? சுமார் 20 கோடி ரூபா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை வெளியே சிதறிக்கிடக்க...

பேரனின் தலையற்ற உடலே என் மடியில் கிடந்தது!

நெஞ்சை உறைய வைக்கும் ஓர் கொடூர விபத்து!

ஜன்னல் ஓர பஸ் பயணத்தை விரும்பாதவர்கள் யாரும் இல்லை. 4 வயதுச் சிறுவன் லக்மாலும் ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்து வெளியே தெரியும் காட்சிகளை கண்டு ஆரவாரித்துக் கொண்டு வந்தான். எதிர்த்திசையில் ஓடிமறையும் மரங்கள், வாகனங்கள், கட்டிடங்கள் அனைத்தையும் கண்ட அவன் கண்களை இமைக்கக் கூட ஆசைப்படவில்லை. மகிழ்ச்சியில் அவன் மனம் பூரித்திருந்தது. அவனை மடியில் வைத்து வெளிக்காட்சிகளை காட்டிக் கொண்டுவந்த காந்திக்கும் பேரனின் மகிழ்ச்சியைக் கண்டு மனம் பூரித்திருந்தது.

திடீரென்று டமால்.....

என்று ஒரு சத்தம்!

கண்ணிமைக்கும் பொழுதுதான்.

காந்தியின் மடியில் அத்தனை நேரம் பூரித்து மகிழ்ந்து கொண்டிருந்த லக்மால்... தலையற்ற முண்டமாகக் கிடந்தான். அவன் முகத்தின் ஒரு பகுதியோடு உடல் கிடந்தது. மற்றொரு பகுதி வெளியில் வீசப்பட்டுக் கிடந்தது.

எங்கும் பயத்தின் வெளிப்பாடாக அதிர்ச்சிக் குரல்கள்!

இது ஒருசினிமாப் படத்தின் விபத்துக் காட்சியல்ல,

நிஜமாக நடந்த ஒரு துயரம்!

மாத்தறை திககொட பிரதேசத்தைச் சேர்ந்தவர் காந்தி (46 வயது) கடந்த 30 ஆம் திகதி மின்சார கட்டணத்தை செலுத்தச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். தனது பாட்டி வெளியில் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருப்பதை அவதானித்த லக்மால் தானும் கூட வருவதாக அடம்பிடிக்க ஆரம்பித்தான். லக்மால் திககொட கனிஷ்ட வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் கல்வி கற்கின்றான். துடுக்குத்தனமும் சுட்டியும் நிறைந்த லக்மால் எப்போதும் சிரித்த முகத்துடனே இருப்பான். மிகப்பெரிய அசம்பாவிதம் நடக்கப் போவதை அறியாத காந்தி ஒரே செல்லப்பேரனின் ஆசையை மறுக்க முடியாமல் சரி வா போகலாம் என லக்மாலையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டார்.

11 மணியளவில் காந்தி தன் பேரனை அழைத்துக் கொண்டு மாத்தறைக்குச் சென்று மின்கட்டணத்தை செலுத்திவிட்டு பகல் 1 மணியளவில் ஹக்மன நோக்கிச் செல்லும் தனியார் பஸ் வண்டியில் (SP - NA 1565) தன் பேரனையும் அழைத்துக்கொண்டு ஏறினார். அதன்பின் நடந்தவற்றை காந்தி தனது வாக்குமூலத்தில் இவ்வாறு பதிவுசெய்துள்ளார்.

ஹக்மன நோக்கிச் செல்லும் அப்பஸ்வண்டியின் பின் சீட்டில் ஜன்னலோரம் வெற்றிடமாக இருந்தது. லக்மால் அந்த சீட்டில் உட்காருவோம் என ஓடிச்சென்று உட்கார்ந்து கொண்டான். நானும் மறுக்காமல் அவன் பக்கத்தில் அமர்ந்து கொண்டேன். அவன் ஜன்னலினூடாக வெளியில் உள்ள ஒவ்வொன்றையும் பார்த்து பேசிக்கொண்டே வந்தான். பஸ் வண்டி மீதெல்லவல பன்சலையை நெருங்கிக் கொண்டிருந்தது. அவ்விடத்தில் ஒரு வளைவு!

திடீரென பெரிய சத்தம்.

நாம் பயணித்த பஸ்ஸின் மீது இன்னொரு பஸ் மோதியது எனக்கு புரிந்தது. கண்ணிமைக்கும் நேரத்தில் அந்த விபத்து நடந்து முடிந்தது. நான் சுதாகரித்து கண்ணை திறந்து பார்த்தபோது என் நெஞ்சே வெடித்துவிடும் போல இருந்தது.

"ஐயோ என்னால் என் கண்ணை நம்பமுடியவில்லை. என் பாசமிகு பேரனின் முகத்தில் ஒரு பகுதியுடன் முண்டம்தான் என் மடியில் இருந்தது. மிகுதி முகம் சிதைந்து வெளியில்... உடம்பெல்லாம் இரத்தம். என் பேரன் துடிதுடித்துக் கொண்டிருந்தான். என்னால் அந்தக் காட்சியை மீண்டும் நினைத்து பார்க்கக்கூட முடியவில்லை. நான் என்ன செய்ய... என் உயிரை எடுத்துக் கொண்டு அந்த பாலகனை அந்த எமன் விட்டிருக்கலாமே? என் மகனுக்கு நான் என்ன பதில் சொல்வேன்" என காந்தி கதறுகிறார்.

இக் கோர விபத்து தொடர்பாக தனியார் பஸ்வண்டி சாரதி வசந்தகுமார (31 வயது) கொடுத்த வாக்குமூலத்தில்;-

நான் சுமார் 7 வருடங்களாக பஸ் சாரதியாகக் கடமையாற்றுகின்றேன். கடந்த 30 ஆம் திகதி பயணிகளை ஏற்றிக்கொண்டு மீதெல்லவல பன்சலையை நெருங்கிக் கொண்டிருந்தேன். அங்கிருக்கும் வளைவில் பஸ்ஸைத் திருப்பும்போது இ.போ.ச. பஸ் வண்டி மிகவும் வேகமாக வந்தது. நான் 30 கி.மீ வேகத்திலேயே சென்றுகொண்டிருந்தேன். வேகமாக வந்த இ.போ.ச. பஸ்ஸின் பின்பகுதி நான் ஓட்டிச்சென்ற பஸ்ஸின் பின்பகுதியை மோதிச் சென்றது. நான் பஸ்ஸை நிறுத்திவிட்டு எட்டிப் பார்த்தேன். பஸ்ஸின் பின் சீட்டில் அமர்ந்திருந்த பெண்ணின் மடியில் 6 வயது சிறுவனின் தலையின் ஒரு பகுதியுடன் முண்டம் இருப்பதை கண்டேன். சிறுவனின் தலையில் ஒருபகுதி வெளியில் சிதறியிருந்தது. பஸ்ஸின் பின்பகுதி இரத்தம் தோய்ந்து காணப்பட்டது என தெரிவித்துள்ளார்.

தனது பாட்டியுடன் ஆசை ஆசையாய் சென்ற லக்மால் உடல் சிதைந்து இறந்து போனமை அவனின் குடும்பத்தால் ஜீரணிக்க முடியாத விடயமே. அவன் ஜன்னலினூடாக எட்டிப் பார்த்துக் கொண்டு சென்றதுதான் இவ்வளவு கோரமாக இறந்து போவதற்கு காரணம் என்பதை அனைவராலும் இலகுவாக புரிந்துகொள்ள முடியும்.

சிறுவர்கள் எப்போதும் துடுக்குத்தனமானவர்கள். அவர்களை பிரயாணம் அழைத்துப் போகும் போது மிக அவதானமாக இருக்கவேண்டும் என்பதை இக்கோர விபத்து சொல்லிச் செல்கின்றதல்லவா?

எம். தாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினக்குரல்
Voice of Students
இலவச இணைப்பிதழ்
வெள்ளி தோறும்

விதியாதரம்

100% NATURAL
கல்வியால் ஆகாதது ஒன்றுமில்லை

க.பொ.த.(சா/த) மாணவர்களுக்குரியது

பகுதி-I

01. ஒரு பென்சிலின் விலை ரூபா 5.25 எனின் 20 பென்சில்களின் விலையைக் காண்க.

02. $\frac{y}{4} = 5$ என்ற சமன்பாட்டைத் தீர்க்க.

03. $(-5)^2$ இன் பெறுமானம் யாது?

04. ஒரு பரீட்சைக்குத் தோற்றியோரின் $\frac{7}{10}$ பங்கினர் சித்தியடைந்தனர் எனின், சித்தியடையாதோரின் சதவீதத்தைக் காண்க.

05. சுதாகரிடம் ரூபா.50 உள்ளது. இதில் ரூபா.X ஐ நிமலிற்குக் கொடுத்த பின் தற்பொழுது சுதாகரிடம் உள்ள பணத்தை X இன் சார்பில் தருக.
[இங்கு X < 50]

06. உருவில் PQR ஒரு சமபக்க முக்கோணி எனின், $Q\hat{P}R$ இன் பெறுமானத்தைக் காண்க.



07. 21,13,15,15,7,8,9 என்ற எண் பரம்பலின் ஆகாரத்தைக் காண்க.

08. 0.11 X 0.1 இன் பெறுமானம் யாது?

09. சுருக்குக. 12l 60 ml - 5l 80ml

10. $\frac{3}{7}, \frac{3}{10}, \frac{3}{5}$ என்ற பின்னங்களை இறங்குவரிசைப்படுத்தி எழுதுக.

11. சுருக்குக. $(\frac{3}{7} - \frac{1}{14}) \div 1\frac{1}{2}$

12. a=5, b=-3 எனின் $3b-2a^2$ இன் பெறுமானத்தைக் காண்க.

13. 20% இலாபம் வைத்து ஒரு பொருளை விற்கும்போது ஒருவருக்கு ரூபா.140 இலாபம் கிடைத்தது எனின் பொருளின் கொள்விலை யாது?

14. உருவில் உள்ள ஐங்கோணியில் உள்ள தரவுகளைப் பயன்படுத்தி X இன் பெறுமானத்தைக் காண்க.



15. y=2X-3 என்ற நேர்கோட்டிற்குச் சமாந்தரமாகவும் (0,4) என்ற புள்ளிக்கூடாகவும் செல்லும் நேர்கோட்டின் சமன்பாட்டைத் தருக.

16. தரப்பட்ட உருவிலுள்ள தரவுகளைக் கொண்டு பரப்பளவில் சமனான இரு சோடி முக்கோணிகளை எழுதுக.



17. உருவிலுள்ள தரவுகளுக்கேற்ப
i. X இன் பெறுமானத்தைக் காண்க.



ii. மேலே i இல் நீர் பயன்படுத்திய தேற்றத்தை எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. முக்கோணி PQR இல் PQ =10cm, $P\hat{R}Q = 30^\circ$ எனின் திரிகோண கணித விகிதத்தைப் பயன்படுத்தி,



i. $\sin 30^\circ$ இன் விகிதத்தை எழுதுக.

ii. PR இன் நீளத்தைக் காண்க.

19. தொட்டியொன்றிற்கு 120 மில்லிலீற்றர் / நிமிடம் என்னும் வீதத்தில் தொட்டிக்கு நீர் பம்பப்படுகின்றது எனின், 2 மணித்தியாலத்தில் தொட்டியில் சேரும் நீரின் கனவளவை லீற்றரில் தருக.

20. சமனிலி $2X-1<3$ ஐத் தீர்த்து அதனை எண்கோட்டில் குறித்துக் காட்டுக.



21. உருவில் O வை மையமாகவுடைய வட்டத்தில் $P\hat{R}Q = 46^\circ$ எனின்

i. $P\hat{O}Q$ இன் பெறுமதியைக் காண்க.

ii. $P\hat{S}Q$ இன் பெறுமதியைக் காண்க.



22. சுருக்குக. $\frac{5}{(x-2)} - \frac{3}{(2-x)}$

23. ஓர் சதுர அடியைக் கொண்ட கூம்பகமும் அதன் வலையும் உருவில் காணப்படுகின்றது. அவ்வலையில் காணப்படும் a,h ஆகிய அளவீடுகளின் பெறுமானங்களை முறையே எழுதுக.



24. உருவை அவதானித்து L இலிருந்து K இன் திசைகோளைக் காண்க.



25. சதுரம் ஒன்றின் ஒரு பக்க நீளம் 10 அலகுகள். அதன் ஒரு பக்கத்தின் நீளத்தை ஒரு அலகினால் கூட்டியும் மற்றைய பக்கத்தை ஒரு அலகினால் குறைத்தும் பெறப்பட்ட செவ்வகத்தின் பரப்பளவைக் காண்க.

26. ஒரு கூட்டல் விருத்தியில் ஆறாம் உறுப்பு 25 ஆகுமெனில் அவ்விருத்தியில் முதல் 11 உறுப்புகளின் கூட்டுத்தொகையைக் காண்க.

27. $\sqrt{5} = 2.23$ எனின் $\frac{100}{\sqrt{5}}$ என்ற பின்னத்தின் பெறுமானத்தைக் காண்க.

28. சுருக்குக. $\log_3 81 - \log_5 25 + 1$

29. உருவில் 7 cm ஆரையுள்ள திண்ம அரைக்கோளம் காணப்படுகின்றது. இதன் மொத்த மேற்பரப்பின் பரப்பளவைக் காண்க.



30. A,B புள்ளிகளுக்கு இடைப்பட்ட தூரம் 10cm ஆகும். A இலிருந்து 6cm புள்ளிகளின் தூரத்திலும் A,B இலிருந்து சமதூரத்திலும் அசையும் ஒழுக்கை பரும்படிப் படமொன்றில் வரைந்து காட்டுக.

பகுதி-IB

01. உற்பத்தியாளன் ஒருவன் ஒர் கட்டிலை 30% இலாபம் பெறக்கூடியவாறு ரூபா.13000 இற்கு விற்பனை செய்கின்றான்.

i. அப்பொருளின் உற்பத்திச்செலவைக் காண்க.

ii. இவ் உற்பத்திச் செலவானது 7:3 என்னும் விகிதத்தில் மூலப்பொருட் செலவையும் கூலியையும் கொண்டதாயின் அச்செலவுகளைத் தனித்தனியே காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி-I

கவனிக்க:

-) பகுதி I இன் i)ஆம் வினா கட்டாயமானது
-) பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் பகுதி III இலிருந்து இரு வினாக் களையும்தெரிவு செய்க.
-) எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

01) அ) பின்வரும் i) இன் கீழ் காட்டப்பட்டுள்ள வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடங்கள் எல்லாவற்றையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் ii) இன் கீழ் காட்டப்பட்டுள்ள வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடங்கள் எல்லாவற்றையும் வழங்கப்பட்டுள்ள உலகப்படத்திலும் குறித்துக் காட்டுக.

i) 1) இரணைமடு
2) அம்பாந்தோட்டை
3) ராஜங்கனை
4) உண்ணிச்சை
5) விந்தனை
6) கிளிநொச்சி
7) தீகவாவி
8) மகாதீர்த்தம்
9) மகாகமம்
10) தம்மன்னாவ

ii) 1) கவாய்
2) மேற்கிந்தியத் தீவுகள்
3) அலாஸ்கா
4) ஈரான்
5) துருக்கி
6) சீனா
7) ஸ்கொட்லாந்து
8) வடகொரியா

ஆ) i) கீழே A, B, C, D எனக் காட்டப்பட்டுள்ள வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நிகழ்வுகளுடன் தொடர்புடையவர்களை அடைப்புக்குறிக்குள் தரப் பட்டுள்ள பட்டியலில் இருந்து தெரிந்தெடுத்து முறையே எழுதுக?

A) வலகம்பா வழங்கிய தானத்தைப் பெற்றதனால் மகாவிகா ரைப்பிக்குகளிடையே பிளவு ஏற்படக் காரணமானவர்.

B) சமுத்திரகுப்த மன்னனின் தீக் விஜயக் கொள்ளை காரணமாக வரலாற்றாசிரியர்களால் இவனுக்கு வழங்கப்பட்ட பெயர்.

C) விவசாயத்தை மேம்படுத்தும் நோக்கில் நீர்ப்பாசனத்தைப் புனரமைக்கும் திட்டத்தின் கீழ் இறக்ககாமம் குளத்தைப் புனரமைத்தவர்.

D) 'சகலருக்கும் நியாயம்' என்னும் கடிதத்தை மத்திய வல்லரசுக்கு அனுப்பி வைத்த உலகத் தலைவர்.

(விக்கிரமாதித்தன், இந்திய நெப்போலியன், குப்பிக்கல மகாதிஸ்ஸ, ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கலதேரர், ஹென்றி வோட்வூட்ரோ வில்சன், ஹெர் கியூலிஸ் ரொபின்சன், ரூஸ்வெல்ட்)

ii) கீழே A, B, C, D எனக் காட்டப்பட்டுள்ள படங்களை முறையே குறிப்பிடுக.

A

B

C

D

iii) கீழே A ,B,C,Dஎனக் குறிப்பிடப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக?

A) 1920 இல் நாகபுரி மாநாட்டில் இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்?

B) புரட்டஸ்தாந்து மதத்தின் ஸ்தாபகர்?

C) தெதுறு ஓயாவுக்குக் குறுக்கே மூன்று இடங்களில் அணைகட்டி கால்வாய்கள் மூலம் விவசாயத்திற்கு நீரை கொண்டு சென்றவர்?

D) தமிழ் மொழியால் தோத்திரப் பாடல்கள் பாடப்பட்ட ஒரு கோவில் இருந்ததாகக் கூறப்பட்ட இராசதானி எது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி-II

02) i) பின்வரும் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை முறையே A,B,Cஎன்னும் ஒழுங்கில் குறிப்பிடுக.

A) வம்சக் கதைகளின் படி இலங்கையில் முதலில் குளத்தை அமைத்தவன்.

B) 4670 ஏக்கர் விஸ்தீரணமுடைய மணிகரவாவியை அமைத்ததன் மூலம் மக்களின் அன்பைப் பெற்றுக் கொண்டவன்.

C) நிலக்கீழ் பாறைகளின் ஊடாகச் சுரங்கம் அமைத்து திஸ்ஸவாவியில் இருந்து ரன்சுமப் பூங்காவிற்கு நீர் கொண்டு சென்றவன்.

ii) அருகில் உள்ள இலங்கைப் படத்தில் அன்றைய நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்தின் அடையாளமாக இன்றும் திகழும் குளங்களும் கால்வாய்களும் காட்டப்பட்டுள்ளன. அவற்றைப் பெயரிடுக.

A - .....- .....
B - .....
C - .....- .....
D - .....- .....

iii) நீர்வள நாகரிக கால மன்னர்களின் அரசசபை அமைப்பு முறையைக் குறிப்பிட்டு அதில் மேல்நிலை உத்தியோகத்தர்கள் இருவரினது பணிகளைக் குறிப்பிடுக.

iv) நீர்வள நாகரீகம் இலங்கையில் வளர்ச்சியுற ஏதுவாக அமைந்த காரணிகளைக் குறிப்பிட்டு அக்கால விவசாய நடவடிக்கைகளின் வளர்ச்சிப் போக்கையும் குறிப்பிடுக.

03) i) பின்வரும் வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய மன்னர்களை அதே ஒழுங்கில் தருக.

A) ஆங்கிலேயரின் ஆதிக்கம் இலங்கையில் ஏற்படுவதற்கு காரணமான கியூ கடிதத்தை வரைந்தவன்.

B) மல்வத்த பீடத்தின் வழிபாட்டிடத்தை வேறிடத்திற்கு மாற்ற நடவடிக்கை மேற்கொண்டதால் கண்டிப் பௌத்தர்களின் வெறுப்பைச் சம்பாதித்தவன்.

C) முதன் முதலில் ஐரோப்பியர்கள் இலங்கைக்கு வரும் போது இலங்கையில் தமிழர்களின் தனிப்பெரும் சுயாதீன இராசதானியாக விளங்கிய யாழ்ப்பாண இராசதானியின் மன்னனாக இருந்தவன்.

ii) இராஜசிங்க மன்னனின் கண்டி ஆக்கிரமிப்பை அடுத்து போர்த்துக்கேயரிடம் தப்பி ஓடிய கண்டி ஆட்சியாளர்களையும் அவர்களுக்குப் போர்த்துக்கேயர் இட்ட ஞானஸ்தான நாமங்களையும் தருக.

iii) இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்கு எதிராக இடம்பெற்ற முதலாவது சுதந்திரப் போருக்கான காரணங்கள் இரண்டைக் கூறி விளக்குக.

iv) பொலநறுவை இராசதானி வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்களைக் கூறி விளக்குக.

04) i) பின்வரும் நிகழ்ச்சிகளுடன் தொடர்புடையவற்றை A ,B என்னும் ஒழுங்கில் குறிப்பிடுக.

A) இலங்கையில் ஆளுநர் நாயகம் பதவிக்குப் பதிலாக ஜனாதிபதி என்னும் நாம நிர்வாகப் பதவி ஏற்படுத்தப்பட்ட போது இலங்கையின் பிரதமராக இருந்தவர்.

B) முதன்முதலில் சிங்கள மொழியை அரச கரும மொழியாகப் பிரகடனப்படுத்திய அரசியல் யாப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுக்கமான ஆடை அணிபவரா?

இன்றைய நவீன உலகில் ஆடைகளின் நாகரிகங்களும் நளினங்களும் புதுப்புது வகைகளில் வந்துகொண்டுதான் இருக்கின்றன. இவற்றால் கவரப்படும் இன்றைய இளம் பெண்கள் அவ்வாறு வரும் நாகரிக ஆடைகளையே பெரிதும் அணிய விருப்பம் கொள்கின்றனர். அவற்றிலும் உடலை இறுக்கிப் பிடிக்கும் ஆடைகளையே அதிகம் விரும்பி அணிகிறார்கள். அவையே தங்களுக்கு இலகுவாக இருப்பதாகவும் நினைக்கின்றார்கள். அதற்கேற்றாற் போல் பெண்கள் அணிவதற்கென்றே லெகின்ஸ், டைட்ஸ் என நவநாகரிக உடைகள் இப்பொழுது சந்தைகளில் மலிந்து கிடைக்கின்றன.

ஆயினும், இவ்வாறு விற்பனையாகும் டைட்ஸ் போன்ற ஆடைகளை பெண்கள் தங்கள் வயது உடல் அமைப்புக்கு ஏற்றாற் போல் இவை தமக்கும் தமது வயதிற்கும் பொருத்தமானதா? என்பதைப் பற்றிய சிறு தெளிவும் இன்றி, சமூகத்தில் மற்ற பெண்கள் அணிகின்றார்கள். எனவே, தாமும் அணிந்தால் என்ன என அணிகின்றார்கள். இவற்றை அணிவதில் தவறில்லை. ஆயினும், இவ்வாறான டைட்ஸ்கள், லெகின்ஸ் போன்ற ஆடைகளை எவ்வாறு அணிவது என்பதில் ஒரு வரைமுறை இருக்கின்றது.

அவற்றை பின்பற்றினால் எந்த வயதினரும் இவற்றை அணிந்து தம்மை அழகாகவும் இளமைத் தோற்றமுடையவராகவும் உணரலாம். ஆடை என்பதை நாம் அணியும் விதத்தில் தான் எம் அழகும் எமக்கான மதிப்பும் வெளிப்படும்.

ஆனால், இவ்வாறு இறுக்கமாக உடலை ஒட்டிப்பிடிக்கும் ஆடைகளை அணிவது உடலுக்கும் நல்லதல்ல. பெண்கள் இறுக்கமான உடைகளை அணியும்போது, காற்றோட்டமின்றி வியர்வை வெளியேற முடியாமல் அவ் வியர்வையிலுள்ள கிருமிகளின் வளர்ச்சி பன்மடங்காக உயர்வடையும். இதனால் அவர்கள் சரும நோய்கள் ஏற்பட்டு அவஸ்தைப்படவும் நேரிடும்.

இதனால் வேர்க்குரு, வெப்பத்தினால் உடலில் கட்டிகள் மற்றும் சரும நோய்களும் ஏற்படும். மேலும் அணியும் உள்ளாடைகள் போன்றன இறுக்கமாக இருந்தால், உடலில் துர்நாற்றம் வீசுவதோடு, உடலுக்கு ஒவ்வாமை நோய்களும் ஏற்படும். இதனால் இரத்தவோட்டமும் இல்லாமல் போய்விடும்.

ஓரளவு தளர்வான பருத்தி ஆடைகளை அணிவதுதான் உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்றது. இவ்வாறான பருத்தி ஆடைகளை அணிவதால் காற்று உட்புகவும், அதிகப்படியான வியர்வை வெளியேறவும் வழிவகுக்கும். அத்தோடு உடலிற்கும் மிகவும் இதமாகவும் குளிர்மையாகவும் இருக்கும்.

எஸ்.பிரியதர்ஷினி

* வெங்காயத்தின் மீது லேசாக எண்ணெய் தடவி சற்று நேரம் வெயிலில் காயவைத்துப் பின் முறத்தில் போட்டுப் புடைத்தால் எளிதாக மேல் தோல் அகன்றுவிடும்.

* பீன்ஸ், பட்டாணி, கோவா கோஸ் போன்ற காய்கறிகள் நன்றாக குழைய வேகவைக்க வேண்டுமா? முதலில் உப்புப் போடாமல் வேகவைத்து, வெந்தபிறகு உப்பு சேர்க்கவேண்டும்.

* சப்பாத்திக்காக கோதுமை பிசையும்போது வெண்ணெயையும் சேர்த்துப் பிசைந்து கொஞ்சநேரம் ஊற வைத்து பிறகு சப்பாத்தி செய்தால் மென்மையாக பூப்போல இருக்கும்.

* கண்ணாடி போத்தல் துர்நாற்றம் வீசுகிறதா? கொஞ்சம் கடுகைப் போட்டு வெந்நீர் ஊற்றி சிறிது நேரம் கழித்துக் கழுவுங்கள். துர்நாற்றம் போய்விடும்.

* கொத்தமல்லி, புதினா துவையல் களை அரைக்கும் போது, தண்ணீருக்குப் பதில் சிறிது தயிர் சேர்த்தால் சுவை தரும்.

* ரசம், சாம்பார், கீரை மசியலை இறக்கிய பின், பெருங்காயத் தூள் போட்டால் மணம் ஊரைத் தூக்கும்.

மகளிர் பக்கம்

தொப்பை தொல்லையிலிருந்து விடுபட....!

இன்றைய காலத்தில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் பெரும் பிரச்சினையாக இருப்பது உடல் பருமன் மற்றும் தொப்பை ஆகும். அடிவயிற்றில் அதிகமாக சதைப்பிடிப்பு இருந்தால் பெண்களுக்கு உடல் அழகே கெட்டுவிடும். அதைச் சரிசெய்யவும் வலுவானதாக்கவும் கொஞ்சம் பயிற்சிகளை மேற்கொள்வதுதான் சிறந்த வழி.

உடல் எடையைக் குறைக்க விரும்புபவர்கள் உடற்பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு ஆகியவற்றை நிச்சயம் கடைப்பிடிக்க வேண்டும். அளவான உடற்பயிற்சி உடல் பருமனைக் கட்டுப்படுத்துவதோடு ஆயுட்காலத்தையும் அதிகரிக்கிறது.

தினமும் ஐந்து கப் காய்கறி அல்லது பழம் சாப்பிட வேண்டும். கீரை வகைகள், பீன்ஸ், அவரை போன்ற காய்கறிகளையும் புடலங்காய், பூசணி போன்ற கொடிவகைக் காய்கறிகளையும் அதிகம் சேர்த்துக் கொள்வது நல்லது. சீசன்கால பழங்கள் எல்லாம் சாப்பிடலாம். ஆனால் மாம்பழம், பலாப்பழம், கிழங்கு வகைகள் போன்றவற்றை குறைந்த அளவு எடுத்துக் கொள்வது நல்லது.

குப்பையில் கொட்ட மனமில்லை! இதுதான் தொப்பை வளர்ந்த கதை!

பப்பாளிக்காயை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்வது நல்ல பலன் தரும். முள்ளங்கியை உணவில் அதிகமாக எடுத்துக் கொள்வது சிறந்தது.

வாழைத்தண்டு, பூசணி, அருகம்புல் போன்றவற்றில் ஏதேனும் ஒன்றின் சாற்றினை குடித்து வர உடல் எடை குறையும். உடல் அழகு பெறும்.

இஞ்சி சாறுடன் தேன் கலந்து சாப்பிட, 40 நாட்களில் தொப்பை குறையும்.

இந்த உணவு முறைகளுடன், பிசியோதெரபிஸ்ட் மற்றும் பிட்னஸ் பயிற்சியாளர்களிடம் தகுந்த ஆலோசனைதனை பெற்று, அவற்றை பின்பற்றினால் தொப்பை தொல்லையின்றி வாழலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்

படம்: நவீன சரஸ்வதி சபதம்
இசை: பிரேம் குமார்
பாடல் வரிகள்: வைரமுத்து
பாடியவர்கள்: கார்த்திக், பூஜா

நெஞ்சாங்குழி ஏங்குதடி
நெத்திப் பொட்டு வீங்குதடி
நித்திரைய தொலைச்ச கண்ணு துடிக்குதடி
ஒன் நினைப்பு ஓங்குதடி
உள் உசிரு நோகுதடி
கண்ணீர்ப்பட்டு கன்னம் ரெண்டும்
வலிக்குதடி
ஒன்ன விட்டு நான் பிரிஞ்சா
வாழ்க்கை அத்துப்போகும்
அழகே
கண்ண விட்டு நீ மறைஞ்சா
பார்வை செத்துப் போகும்
நித்தம் ஒன்ன எண்ணி எண்ணி
நேரம் வத்தி போகும்
அடியே
சுட்டு விரல் நீண்டு நீண்டு
தூரம் செத்து போகும்
அடி ஒன்ன ஒன்ன நினைச்சு
ஏன் உசிர கையில் புடிச்சு
நான் நொந்துவெந்து கிடக்கேன்
சிறு நூலாம்படையாய் எளச்சேன்
அடி ஒன்ன ஒன்ன நினைச்சு
ஏன் உசிர கையில் புடிச்சு
நான் நொந்துவெந்து கிடக்கேன்
சிறு நூலாம்படையாய் எளச்சேன்
ஆஹாஹா ஹா

(நெஞ்சாங்குழி ஏங்குதடி)

அடிக்கிற காத்த நிறுத்தி
வாய புடுங்க பார்ப்பேன்
வண்ண வண்ண சிறு பறவைக போனா
ஒன்னபத்தி கேட்பேன்
நீ அங்கே எங்கோ நடக்க
அடி இங்கே என்னிடம் துடிக்க
நீ மண்ணில் கண்ணீர் வடிக்க
அது விண்ணை சென்று நனைக்க
நீ தேட நான் வாட
அடி ஒன்ன ஒன்ன நினைச்சு
ஏன் உசிர கையில் புடிச்சு
நான் நொந்துவெந்து கிடக்கேன்
சிறு நூலாம்படையாய் இளச்சேன்

நெஞ்சாங்குழி ஏங்கும் ஏங்கும்
நெத்திப் பொட்டு வீங்கிப் போகும்
நித்திரைய தொலைச்ச கண்ணு துடிதுடிக்கும்
ஆஹாஹா ஆஹா ஆஹா... ஹா...

கண்ணுக்குள்ள ஒன் முகம் தான்யா
வந்து வந்து போகும்
நெஞ்சம் பட்டப் பாடு சாமிக்கு சொன்னா
பாரம் கொஞ்சம் தூங்கும்
உன் ஆசைய என் நெஞ்சில் அழிக்க
நான் அமிலம் ஊத்திக் குடிக்க
உன் நினைவை எப்படி மறக்க
வான் நீலத்தை எது கொண்டு அழிக்க
நீ வாட நான் தேட
என் இரவை எல்லாம் கொளுத்தி
அதை எல்லா திசையிலும் செலுத்தி
நான் உயிரோடு உள்ளதை உணர்த்தி
உயிர் மீட்பேன் உன்னை மலர்த்தி
என் இரவை எல்லாம் கொளுத்தி
அதை எல்லா திசையிலும் செலுத்தி
நான் உயிரோடு உள்ளதை உணர்த்தி
உயிர் மீட்பேன் உன்னை மலர்த்தி

நடிகர்களின் பாதுகாவலன்

பிரபுதேவாவை பிரிந்து மீண்டும் சினிமாவிற்கு நடிக்க வந்த நயன்தாரா கதாநாயகி வேடம் கிடைக்காவிட்டால் வித்தியாசமான கதாபாத்திரத்தில் நடிக்கலாம் என முடிவு செய்திருந்தாராம். ஆனால், அவர் மறுபடியும் நடிக்க களமிறங்கியபோது, அவரது நெருங்கிய நண்பரான ஆர்யா, மறுபடியும் நயன்தாராவுடன் நடிக்க ஆசைப்பட்டு ராஜாராணி படத்தில் நடிக்க வைத்தார்.

அதைப்பார்த்த விஷ்ணுவர்தன், ஏற்கனவே தனது பில்லா படத்தில் நடித்த ராசியான நடிகை என்பதால் மறுபடியும் அஜீத்தைக்கொண்டு தான் இயக்கிய ஆரம்பம் படத்திற்கு ஒப்பந்தம் செய்தார்.

இதனால், மற்ற இயக்குநர்களின் கவனமும் நயன்தாரா பக்கம் திரும்பியது. இதனால் செகண்ட் இன்னிங்சிலும் முதல் ரவுண்டுக்கு இணையாக பிசியாகிவிட்டார் நயன்.

இந்தநிலையில், மறுபடியும் தனது மாஜி காதலர் சிம்புவுடன் ஜோடி சேர்ந்திருக்கும் நயன்தாரா, ஜெயம் ரவி நடிக்கும் புதிய படமொன்றிலும் நடிக்கிறார். இந்த படத்தில் நடிப்பதற்கு வேறு சில நடிகைகளிடம் தான் பேசி வந்தாராம் இயக்குநர் ராஜா.

ஆனால், ஜெயம்ரவி தான் நயன்தாராவுடன் நடிக்க வேண்டும் என்று தனக்குள் இருந்த ஆசைய சொல்லி, அவரை ஜோடி சேர்த்துள்ளாராம்.

இப்படி இளவட்ட ஹீரோக்களே தனக்கு சிபாரிசு செய்வதால் சொல்ல முடியாத சந்தோஷத்தில் இருக்கும் நயன்தாரா, அனுஷ்கா, தமன்னா போன்ற நடிகைகளுக்கு நிகராக தனது படக்கூலியையும், படத்துக்குப்படம் உயர்த்திக்கொண்டே இருக்கிறார்.

ஆக்ஷனுக்கு மாறும் ஆர்யா!

ஆரம்பத்தில் சில படங்களில் ஆக்ஷன் கதைகளில் நடித்த ஆர்யா அந்த படங்கள் எதிர்பார்த்தபடி வெற்றியை தராததால் காதல் கலந்த கொமெடி கதைகள் பக்கம் திரும்பினார். அப்படி நடித்த பாஸ் என்ற பாஸ்கரன் உள்ளிட்ட பல படங்கள் வெற்றியாக அமைந்ததால் சொக்லேட் ஹீரோவாக தொடர்ந்து வருகிறார். இந்நிலையில் புறம்போக்கு படத்தில் ஆக்ஷனுக்கு மாறியுள்ள ஆர்யா இதையடுத்து மீகாமன் என்ற படத்திலும் ஆக்ஷன் ஹீரோவாக நடிக்கிறார். அதனால் தன் கெட்டப்பை மாற்றும் முயற்சியாக தன் உடற்கட்டை ஏற்றி வருகிறார் ஆர்யா.

முனி 3யில் நித்யா மேனன்

முனி, காஞ்சனா (முனி-2) ஆகிய படங்களின் வெற்றிகளைத் தொடர்ந்து ராகவா லோரன்ஸ் கங்கா என்ற பெயரில் முனி-3 ஆம் பாகத்தை இயக்கி வருகிறார். இந்த படத்தில் இரண்டு கதாநாயகிகள் நடிக்கின்றனர். அதில் ஒருவர் டாப்சி. இன்னொரு நடிகையாக அஞ்சலி ஒப்பந்தமாகியிருந்தார். இந்நிலையில், சித்தியுடனான பிரச்சினையில் சிக்கித் தவிக்கும் அஞ்சலி இப்போதைக்கு தமிழ் படத்தில் நடிப்பதில்லை என முடிவெடுத்து ஐதராபாத்திலேயே முகாமிட்டுள்ளார். இந்நிலையில், அஞ்சலி கதாபாத்திரத்தில் நடிப்பதற்காக நித்யா மேனனை ஒப்பந்தம் செய்துள்ளாராம் ராகவா லோரன்ஸ். அதற்காக, நித்யா மேனனுக்கு பெரிய தொகை சம்பளமாக கொடுக்கப்பட்டுள்ளதாம். விரைவில் இவர் சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப்பட உள்ளது.

அருந்ததி புகழ் அனுஷ்கா தற்போது ராணி ருத்ரம்மாதேவி, பாகுபாலி ஆகிய சரித்திர படங்களில் நடித்து வருகிறார். இந்த படங்களுக்காக பழங்கால சண்டை பயிற்சிகளை பயிற்சி எடுத்து வருடக்கணக்கில் நடித்துக் கொண்டிருக்கிறார். இதில் ருத்ரம்மா தேவி படத்தை முடித்துவிட்டவர், அடுத்தபடியாக பாகுபாலியில் நடித்து வருகிறார்.

இந்த நிலையில், மேலும் சில தெலுங்குப்பட டைரக்டர்களும் சரித்திர கதைகளை தயார் செய்து கொண்டு அனுஷ்காவை துரத்திக் கொண்டிருக்கிறார்களாம். இதனால் இந்த படங்களை முடித்ததும் ஒரு சேஞ்சுக்காக ரொமான்ஸ் கதைகளில் நடிக்கலாம் என்று இருந்த அனுஷ்கா அவர்களின் பிடியில் சிக்கி கிடக்கிறாராம்.

அப்படி சில கதைகளை கேட்டு வைத்திருக்கும் அனுஷ்கா பாகுபாலியை முடித்ததும், 16 ஆம் நூற்றாண்டு கதை ஒன்றில் நடிக்கிறாராம். கோல்கொண்டா என் ராஜ்யத்தை ஆண்டு வந்த முகமது ஹூலி ஹூதுப் ஷா என்ற முஸ்லீம் மன்னனின் மனைவியைப்பற்றிய கதையில் அப்படம் உருவாகிறதாம். பாஹ்மதி என்று பெயர் வைத்திருக்கும் அப்படத்துக்காக முஸ்லீம் இளவரசியாக மாறுகிறாராம் அனுஷ்கா.

முஸ்லிம் இளவரசியா

மாறும் அனுஷ்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cinema



என்ன நான் சொல்லுறது? அறிந்தின் புதிய பஞ்ச்

16 வயதினிலே படத்தில் ரஜினி பேசிய இது எப்படி இருக்கு? பன்ஞ் டயலாக் இன்று வரைக்கும் பேசப்படுகிறது. நாலுபேருக்கு நல்லது நடக்குமுன்னா எதுவுமே தப்பில்ல என்கிற கமலின் நாயகன் பன்ஞ் இப்போதும் பிரபலம். அந்த வரிசையில் வருகிறது அஜீத்தின் என்ன நான் சொல்றது?

வீரம் படத்தில் கிராமத்து வெள்ளந்திரி மனிதனாக நடித்திருக்கும் அஜீத் எந்த ஒன்றையும் சொல்லி முடித்துவிட்டு கடைசியாக என்ன நான் சொல்றது என்பார். அதையே இப்போது புதிதாக வெளிவந்திருக்கும் இரண்டாவது டீசரிலும் வைத்திருக்கிறார்கள். நல்லவன்னு சொல்லுவாங்க நம்பிடாதீங்க என்னை கெட்டவன்னு சொன்னாலும் திட்டிடாதீங்க என்ற பாடலின் பின்னணியில் அஜீத் தன் தம்பிகளோடு அணிவகுத்து வருகிற மாதிரி எதிரிகளை போட்டு தாக்குற மாதிரி கோவில் குளத்து படிக்கட்டுல உட்கார்ந்து பிளாக் டீ குடிக்கிற மாதிரி பள்ளி குழந்தைகளை தூக்கி சுமந்து வருகிற மாதிரி காட்சிகள் வருகிறது.

இறுதியாக சட்டை கொலரை பின்னுக்கு இழுத்துவிட்டு என்ன நான் சொல்றது? என்கிறார் அஜீத். இணைய தளத்தில் பட்டையை கிளப்பிக் கொண்டிருக்கிறது இந்த டீசர்.

அண்ணா என்னை காலி பண்ணிடாதிங்க...

பத்திரிகையாளரிடம் ரகசிய வேண்டுகோள்!

பத்திரிகையாளர்களுக்கு பிரியாணித் திருவிழா நடத்தும் இளைய தளபதி, அவர்களிடம் ஒரு கோரிக்கையை வைத்துள்ளார்.

சச்சின் படத்திலிருந்தே விஜய்க்கு ஒரு பழக்கமுண்டு, தனக்கு மிகவும் பிடித்தமான பத்திரிகையாளர்களை மட்டும் தனது நீலாங்கரை வீட்டுக்கோ அல்லது கோடம்பாக்க அலுவலகத்துக்கோ வரவழைத்து மனம்விட்டு பேசி அனுப்புவார்.

இதேபோல் அண்மையில் நடந்த சந்திப்பிலும் குறிப்பிட்ட சில நிருபர்களை மட்டும் அழைத்து பேசியுள்ளார்.

இதில் பேசிய விஜய், அண்ணா இந்தப் படம் நல்லபடியா ரிலீஸ் ஆகணும், அதுனால தயவுசெய்து எதிர்மறையா எதுவும் எழுதி காலி பண்ணிடாதிங்க'' ன்னு தனது பணிவான கோரிக்கையை விடுத்துள்ளார்.

புறம்போக்கு யாரு? குபுக் சிரிப்பில் விஜய் சேதுபதி

தேசிய விருது பெற்ற இயக்குநர் எஸ்.பி ஜனநாதன் புதிதாக இயக்கும் திரைப்படம் புறம்போக்கு. தொடர் வெற்றி பட கதாநாயகர்களான ஆர்யா, விஜய் சேதுபதி இருவரும் இணைந்து நடிக்கின்றனர். சமீபத்தில் நடந்த இப்படத்தின் விளம்பர படப்பிடிப்பில் ஆர்யா, விஜய் சேதுபதியை பார்த்து படத்திற்கு புறம்போக்கு என பெயர் வச்சிருக்காங்க! இதுல நான் புறம்போக்கா? இல்ல நீங்க புறம்போக்கா? என கேட்க... அதற்கு நான் கூட இருக்கலாம்! இல்ல நீங்களா கூட இருக்கலாம் என விஜய் சேதுபதி ஜாலியாக சொல்லிக் கொண்டிருக்கும்போது இயக்குநர் இடையே நுழைந்து பொதுமக்களுக்கு பயன்படுற எல்லாமும், எல்லாருமே புறம்போக்கு தான் என்றார்.

இப்ப உங்க ரெண்டு பேர்ல யார் புறம்போக்குன்னு நீங்களே முடிவு பண்ணிக்கோங்க என்றும் அவர் மேலும் கூற மொத்த யூனிட்டுமே சிரிக்கத் தொடங்கியது.



பிச்சை எடுத்த வித்யாபாலன்!

பாபி ஜஸூஸ் என்ற படத்தில் தத்ரூபமான பிச்சைக் காரக் கோலத்தில் நடித்துள்ளாராம் வித்யா பாலன். தியா மிர்ஸா தயாரிப்பில் உருவாகும் படம் பாபி ஜஸூஸ்.

படத்தில் பெண் துப்பறியும் நிபுணராக வருகிறார் வித்யா பாலன். இதுவரை நடித்த படங்களை விட இது மிகவும் வித்தியாசமானதாக இருக்கும் என்று கூறும் வித்யா, இந்தப் படத் திற்காக கடினமாக உழைத்து வருகிறாராம்.

படத்தில் ஒரு காட்சியில் பிச்சைக்காரப் பெண்ணாக நடிக்க வேண்டியிருந்ததால் மேக்கப் மூலம் அசல் பிச்சைக்காரப் பெண்ணாக மாறிவிட்டாராம். பிச்சைக்கார கெட்டப்புடன் ஹைதராபாத் ரயில் நிலையத்திற்கு வெளியே உட்கார வைத்து பிச்சை எடுக்க வைத்துவிட்டார்களாம். அதை விட பெரிய காமெடி என்னவென்றால் வித்யாவைப் பார்த்து காசு போட்ட ஒரு பெண் நல்லாத்தானே இருக்கே, எதுக்கு பிச்சை எடுக்கிற, ஏதாவது வேலை பார்த்து உழைத்துப் பிழைக்கக் கூடாது என்று நன்றாக திட்டிவிட்டுப் போனாராம்.



பாடல்

படம்:- சின்னத் தம்பி
இசை:- இளையராஜா
பாடியவர்:- மனோ
பாடல் வரிகள்:- கங்கை அமரன்

இஸ்...டேய் ரொம்ப தட்டாதடா..
தாளம் தட்டறதுக்கு
என் தலையா கிடைச்சது
மெதுவா மெதுவா

இம் இம் இம் இம் இம்..
அட உச்சந்தல உச்சியில
உள்ளிருக்கும் புத்தியில பாட்டு
இது அப்பன் சொல்லி வந்ததில்ல
பாட்டன் சொல்லி தந்ததில்ல நேத்து
எப்படித்தான் வந்ததுன்னு
சொல்லுறவன் யாரு
இதில் தப்பிருந்தா என்னதில்ல
சாமிகிட்ட கேளு
எப்படித்தான் வந்ததுன்னு
சொல்லுறவன் யாரு
இதில் தப்பிருந்தா என்னதில்ல
சாமிகிட்ட கேளு

(அட உச்சந்தல உச்சியில)

கம்மாயி நெறஞ்சாலும் அதை பாடுவேன்
நெல்லு கதிர் முத்தி முளைச்சாலும்
அதை பாடுவேன்
புளியம் பூ பூத்தாலும் அதை பாடுவேன்
பச்ச புல்மேலே பனி தூங்கும்
அதை பாடுவேன்
செவ்வானத்த பார்த்தா
சின்ன சிட்டுகள பார்த்தா
செம்மறிய பார்த்தா
சிறுச் சித்தெறும்ப பார்த்தா
என்னை கேட்காமலே பொங்கிவரும்
கற்பனைதான் பூத்து வரும்
பாட்டு....தமிழ் பாட்டு...

(அட உச்சந்தல உச்சியில)

தெம்மாங்கு கிளிகண்ணி
தேன் சிந்துதான் இன்னும்
தாலாட்டு தனி பாட்டு எச பாட்டுதான்
என் பாட்டு இது போல பல மாதிரி
சொன்ன எடுப்பேனே படிப்பேனே
குயில் மாதிரி
தாயாலதான் வந்தேன் இங்கு
பாட்டாலதான் வளர்ந்தேன்
வேறாரையும் நம்பி இங்கே
வரல்லே சின்ன தம்பி
இங்கு நான் இருக்கும் காலம் மட்டும்
கேட்டிருக்கும் திக்கு எட்டும்
பாட்டு... எந்தன் பாட்டு....

(அட உச்சந்தல உச்சியில)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வார சிரிப்பு



பேபி ஜூ.நிஷிகா, பொரட்டுவ

உங்கள் மழலைகளின் அழகிய புகைப்படங்களையும் இப்பகுதிக்கு அனுப்பிவையுங்கள்

நெருப்புக் கோழியின் மோப்ப சக்தி

நெருப்புக் கோழியின் மோப்ப சக்தி அதிசயமானது.

தனது முட்டைகளை யாராவது தொட்டால் கூட கண்டுபிடித்துவிடும்.

பிறர் தொட்ட முட்டைகளை அது விட்டு வைப்பதில்லை.

அதை காலால் மிதித்து உடைத்துவிடும்.

நெருப்புக் கோழி முட்டைகள் ஒவ்வொன்றும் ஒரு லீற்றர் தண்ணீர் பிடிக்கும் அளவு பெரியது என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுவர் சிறுகதை

அனுபவமே ஆசான்!

ஓர் இளைஞன் பாலைவனம் ஒன்றைக் கடக்க எண்ணி, தன்னைப் போன்ற மன உறுதிமிக்க நண்பர்கள் பலரைத் துணைக்கு அழைத்துக் கொண்டான். அவர்களிடம், ''நம்மோடு முதியவர்கள் யாரும் வரக்கூடாது. அவர்களது உதவியும் தேவையில்லை'' என்று கூறிப் பயணத்தைத் தொடங்கினான். அவரவரும் தமக்குத் தேவையான பொருட்களைச் சுமந்துகொண்டு அவனோடு சென்றனர்.

பல நாட்களாகப் பயணம் செய்த பின்பும் பாலைவனத்தைக் கடந்து செழிப்பான இடத்துக்கு அவர்களால் வர இயலவில்லை. இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும் என்றும் அவர்களுக்குத் தெரியவில்லை. கொண்டு வந்த உணவும் நீரும் தீர்ந்து கொண்டிருந்தன. மேலும் இந்தப் பாலைவனத்தை எப்படிக் கடப்பது என்ற கவலை வேறு அனைவரையும் தொற்றிக் கொண்டது. எவ்வளவு தண்ணீர் குடித்தாலும் தாகம் அடங்கவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு திகைத்துப் போனார்கள்.

ஒருவன் மட்டும் சற்று தூரம் ஒதுங்கிப் போனான். சிறிது நேரம் கழித்து வந்தவன், நேராகத் தலைவனிடம் போனான். ''இன்னும் கொஞ்ச தூரத்தில் தண்ணீர் கிடைக்கும்'' என்று உறுதியாகக் கூறினான். எல்லோருக்கும் வியப்பாகப் போய்விட்டது. ''எங்களோடு வந்த உனக்கு மட்டும் இது எப்படித் தெரிந்தது?'' என்று கேட்டனர்.

முதலில் சொல்லத் தயங்கிய அவன், நண்பர்களின் வற்புறுத்தல் காரணமாக, ''நான் எங்கு சென்றாலும் என் வயதான தந்தையை அழைத்துச் செல்வேன்; அல்லது ஆலோசனை கேட்டுச் செல்வேன். இப்போது இந்தப் பெட்டியில் அவரை வைத்து சுமந்துகொண்டுதான் வந்தேன். அவரிடம் கேட்டபோது, வெளியே வந்து சுற்றிலும் பார்த்தார். ஒரு பறவை பறந்து சென்றதைக் கண்டார். ''இப் பறவை நீர்நிலை இருக்கும் இடத்தில்தான் வாழும். அதனால் அருகில் நீர்நிலை நிச்சயம் இருக்கும்'' என்றார். அதைத்தான் நான் உங்களிடம் வந்து சொன்னேன்'' என்றான்.

தலைவனான நண்பன், அனுபவமே சிறந்த ஆசான் என்பதையும் வயதானோர் ஆலோசனைகளை மதிக்க வேண்டும் என்பதையும் உணர்ந்து கொண்டான்.

வழிகாட்டும் வாசனை திரவியம்!

எறும்புகள் சாரைசாரையாக செல்லும்போது, சில எறும்புகள் அவ்வப்போது நின்று நிதானித்து விட்டு செல்வதை நாம் பார்க்கலாம். இந்தத் தாமதம் எதற்காக என்பதை நீங்கள் அறிவீர்களா?

எறும்புகள் உணவு தேடி நீண்டதூரம் செல்பவை. அதன் உருவத்திற்கு சில மீற்றர் தூரம் என்றாலும் கிலோ மீற்றர்போல நீண்டது தானே? அதனால் சென்ற வழியை மறந்துவிடாமல் திரும்பி வருவதற்காக அவை அடையாளங்களை ஏற்படுத்துகின்றன. எறும்புகள் தயங்கி மயங்கி நிற்பதை பார்க்கிறோமல்லவா?அது ஒரு வாசனைத் திரவத்தை விடுவதற்கும், ஏற்கனவே விட்ட அடையாளத்தை மோப்பம் பிடித்து இனம் காணுவதற்குமே ஆகும். இப்படியே ஒவ்வொரு எறும்பும் அந்த வாசனையைப் பிடித்துக்கொண்டே தங்கள் கூடுகளை அடைகின்றன.

முதல் பூச்செண்டு

பூச்செண்டு வழங்கும் முறை முதன்முதலில் இங்கிலாந்தில்தான் தொடங்கியது.

விக்டோரியா மகாராணி தன்னை மணந்து கொண்ட ஆல்பர்ட்டுக்குத்தான் முதல் முதலில் பூச்செண்டை அன்பளிப்பாக கொடுத்தார். அந்தப் பழக்கமே பின்பு பூச்செண்டு கொடுக்கும் வழக்கமாகிவிட்டது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii) இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி யார் எனக் குறிப்பிட்டு அவர் எத்தனை தடவைகள் பதவி வகித்தார் என்பதையும் குறிப்பிடுக.

iii) நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவரின் முக்கிய அதிகாரங்கள் ஐந்தைக் குறிப்பிடுக.

iv) 1947 சோல்பரி அரசியல் யாப்பையும் ,1972, 1ஆம் குடியரசு அரசியல் யாப்பையும் ஒப்பிட்டு ஆராய்க.

05) i) இலங்கையில் மிக நீண்ட காலமாக நிலவி வந்த இராஜகாரிய முறையை நீக்க முதன்முதலில் முயற்சித்தவர் ஆளுநர் பிரட்றிக் நோர்த் ஆவார். அதற்கு அவர் தெரிவித்த காரணங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

ii) ஆளுநர் மெக்கன்ஸியின் காலத்தில் இலங்கைக் கல்விப் புலத்தில் முன்வைக்கப்பட்ட முக்கிய சீர்திருத்தங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

iii) பிரித்தானியரது ஆட்சியில் கிறிஸ்தவச் செல்வாக்கிலிருந்து சுதேச மதங்களான இந்து, பௌத்த மதங்களை பாதுகாக்கப் பாடுபட்ட ஒவ்வொரு தலைவர்களைக் கூறி அவர்கள் அதற்காக ஆற்றிய பணிகளைக் குறிப்பிடுக.

iv) சுதேச விவசாயத்தை மேம்படுத்தப் பிரித்தானியா முன்னெடுத்த நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

06) i) கீழே A ,B,Cஎன மூன்று இராச்சியங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவ் இராச்சியங்களில் போர்த்துக்கேயருக்குப் பெரும் சவாலாக விளங்கிய ஒவ்வொரு மன்னர்களையும் குறிப்பிடுக.

A - யாழ்ப்பாண இராசதானி

B - சீதாவாக்கை இராசதானி

C - கண்டி இராசதானி

ii) கோட்டை இராசதானி வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

iii) பிரித்தானியரின் முதலாவது கண்டிப் படையெடுப்பு தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் நான்கைக் கூறி விளக்குக.

iv) கண்டி உடன்படிக்கை எப்போது? எங்கே? யாருக்கிடையில் இடம்பெற்றது என்பதைக் குறிப்பிட்டு அதன் முக்கிய சரத்துக்கள் மூன்றைக் குறிப்பிடுக.

பகுதி-III

07) i) பின்வரும் கூற்றுக்களுடன் தொடர்புடைய தலைவர்களை முறையே A ,B,C என்னும் ஒழுங்கில் தருக.

A - "நாடுகளுக்கு சுதந்திரம் தேவை, இனங்களுக்கு விடுதலை தேவை, மக்களுக்குப் புரட்சி அவசியம்''

B - " ஜனநாயக ஆட்சியின் வழிகாட்டிகளாக நாமே இருக்க வேண்டும்''

C - " புரட்சியைப் புரட்சி செய்வதன் ஊடாகக் கற்றுக்கொள்ளுங்கள்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii) சீனப்புரட்சியின் பிரதான காலகட்டங்கள் நான்கினையும் குறிப்பிடுக.

iii) சீனாவில் கலாசாரப் புரட்சியின் பின்னரான சமூகமாற்றங்களை விபரிக்குக.

iv) கொரியாவுக்குள் சீனா , ஜப்பான் ஆகிய இரு நாடுகளும் சண்டையிட்டுக் கொண்டமைக்கான காரணத்தைக் கூறி அதன் பின்விளைவுகளைச் சுருக்கமாக விளக்குக.

08) i) இந்தியாவில் ஆட்சி செய்த முஸ்லிம் பேரரசர்கள் சிலர் A,B,C எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். அவர்களுடன் தொடர்புடைய வரலாற்று நிகழ்வுகளை கீழே அடைப்புக் குள் இருந்து தெரிவு செய்க.

A - சாஜஹான்

B- முகமது இபின் துக்ளக்

C- அக்பர்

A எல்லா மதங்களிலும் உண்மை பொதிந்துள்ளது எனக் கூறி இந்து ஆலயங்களைக் கட்ட அனுமதித்ததுடன் ' தீன் இலாகி' எனும் புதியமதப்பிரிவு உருவாக்கப்பட்டது.

B தலைநகரம் டில்லியில் இருந்து தௌவதாகஹ்(தேவகிரி) நகருக்கு மாறியது.

C ஆக்ரா அரண்மனையில் அர்ஜூமான் பானு பேகமுடன் ஏற்பட்ட காதல் திருமணத்தில் முடிந்தது.)

ii) விஜயநகரப் பேரரசை உருவாக்கியவன் யார் எனக் கூறி இப் பேரரசிற்கு அப்பெயர் ஏற்படக் காரணமாய் அமைந்த வரலாற்று நிகழ்வைச் சுருக்கமாக கூறுக.

iii)மொகாலயப் பேரரசின் சிறந்த மன்னனும் அசோகனுக்குப் பின் இந்தியாவை ஆண்ட மிகச் சிறந்த பேரரசன் எனப் பெயரெடுத் தவனுமான மன்னன் அக்பரின் அரசியல் நடவடிக்கைகள் பற்றி சுருக்கமாக விளக்குக.

iv) இஸ்லாம் மதம் இந்தியாவில் ஏற்படுத்திய கலாசாரத் தாக்கங்களை விபரிப்பதுடன் பௌத்த மதம் ஆசியாவில் ஏற்படுத்திய தாக்கத்தை ஏதாவது ஒரு நாட்டை உதாரணம் காட்டி விபரிக்குக.

09) i) கிறிஸ்தவ உலகில் ஏற்பட்ட பிரிவினைகள் காரணமாக ஐரோப்பாக பல தேசிய அரசுகளாகப் பிரிந்தது. அவ்வாறு பிரிந்த முதல் மூன்று தேசிய அரசுகளையும் குறிப்பிடுக.

ii) ஐரோப்பாவின் முதலாவது தேசிய அரசை உருவாக்கியவர்கள் யாவர் எனக்கூறி அவர்களது உதவியைப் பெற்ற நாடுகாண் பயணிகளால் அந்நாட்டிற்குப் பெற்றுக்கொடுக்கப்பட்ட குடியேற்ற நாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக.

iii) புரட்டஸ்தாந்து மதம் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்த கிறிஸ்தவ திருச்சபையினதும் பாப்பரசரினதும் செயற்பாடுகள் இரண்டைக் கூறி விளக்குக.

iv) பிரான்சியப் புரட்சிக்கான உடனடிக் காரணத்தைக் கூறி இப்புரட்சிக்குப் பிரான்சியர்களின் சிந்தனையைத் தூண்ட ரூசோ ஆற்றிய பங்கு யாதென விளக்குக.

10) i) ஐரோப்பிய தேசத்தின் ஐக்கியத்திற்காக பாடுபட்ட மூன்று தலைவர்கள் பற்றிய மூன்று கூற்றுக்கள் கீழே A,B,C ஆல் காட்டப்பட்டுள்ளன.

A - " ஒரு தேசம் சிந்திக்க முற்பட்டது. அதன் வேகத்தை யாராலும் தடுக்க முடியாது''

B - " மனிதன் சுதந்திரமாகப் பிறக்கின்றான் எனினும் அடிமைச் சங்கிலியால் கட்டுண்டு கிடக்கின்றான்''

C - " எமக்கு ஒரு தேசியக் கொடியில்லை ஐரோப்பிய நாடுகளிடையே ஓர் அரசியல் அந்தஸ்தையோ பெயரையோ நாம் கொண்டிருக்கவில்லை''

அம் மூவரையும் கீழே அடைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுத்து A,B,C ஒழுங்கில் தருக?
(ரூசோ, வோல்ரயர், கரிபால்டி,ஜோசப்மிசினி, கபூர்)

ii) 2 ஆம் அலெக்சாண்டர் மன்னனிடமிருந்து தமது எழுத்தாற்றல் மூலம் நில அடிமைகளுக்கு விடுதலை பெற்றுத் தந்த எழுத்தாளர்கள் இருவரைக் குறிப்பிடுக.

iii) சட்டத்தின் சாரம் எனும் நூல் குறிப்பிடும் வலுவேற்றாக்கல் கோட்பாடு பற்றிக் குறிப்பிடுக.

iv) ஜேர்மனியின் ஐக்கியத்திற்கு உதவிய நெப்போலியனின் நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு அதைச் சிதைக்கும் நோக்கிலமைந்த வியன்னா உடன்படிக்கை பற்றிக் குறிப்பிடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. இம் மூலப்பொருளானது 10% ஆலும் கூலியானது 15% ஆலும் அதிகரிக்கப்படுமாயின் அப்பொருளின் புதிய உற்பத்திச் செலவைக் காண்க.

iv. அவ் உற்பத்தியாளன் அதே இலாபத்தைப் பெறுமாறு அக்கட்டிலை விற்க வேண்டுமாயின் அதன் விற்பனை விலையைக் காண்க.

02. சீரான குறுக்குவெட்டையுடைய எரிபொருள் தாங்கியிலுள்ள எரிபொருளில் $\frac{1}{12}$ பகுதி ஆவியாகியதுடன் 25% வாடிக்கையாளர்களுக்காக ஒதுக்கப்பட்டது.

i. ஆவியாகிய, வாடிக்கையாளர்களுக்காக ஒதுக்கப்பட்ட எரிபொருள் முழுவதன் என்ன பங்கு?

ii. தற்பொழுது எஞ்சியுள்ள எரிபொருள் முழுவதன் என்ன பங்கு?

iii. மிகுதியின் $\frac{3}{8}$ பகுதி வாகனங்களுக்கு நிரப்பப்பட்டது எனின் தற்பொழுது எஞ்சியுள்ள எரிபொருள் முழுவதன் என்ன பங்கு?

iv. இறுதியாக 6000 எஞ்சியுள்ளது எனின் தாங்கியின் கொள்ளளவைக் காண்க.

v. 1l எரிபொருளின் விலை ரூபா.120 எனின் வாகனங்களுக்கு நிரப்பப்பட்ட எரிபொருளின் பெறுமதியைக் காண்க.

03. 14 cm நீளமுடைய ABCD என்னும் சதுர வடிவத் தட்டிலிருந்து AB ஐ விட்டமாகவுடைய ஓர் அரை வட்டத்தட்டு வெட்டி எடுக்கப்பட்டு உருவில் காட்டியவாறு சதுரத்தின் மேற்பகுதி CD இல் ஒட்டப்பட்டுள்ளது.



i. அரை வட்டத்தின் ஆரையைக் காண்க.

ii. உருவில் AEB இன் நீளத்தைக் காண்க.

iii. ADFCBEA இன் சுற்றளவு யாது?

iv. அரை வட்டத்தின் பரப்பளவைக் கண்டு நிழற்றிய பகுதியின் பரப்பளவைக் கணிக்குக.

04.



திருமண விருந்துபசார வைபவம் ஒன்றிற்கு வருகை தந்திருந்த 650 பேர் பற்றிய விபரம் மேலே வென்னுருவில் காட்டப்பட்டுள்ளது. (இங்கே வருகை தந்த அனைவருமே உணவு உண்டனர் எனக் கொள்க.

i. தரப்பட்ட வென்வரிப் படத்தில் சைவ உணவை உண்ணும் பெண்களுக்கான பகுதியை நிழற்றிக் காட்டுக.

ii. விருந்துபசாரத்திற்கு வருகை தந்து அசைவ உணவை உண்ணும் பெண்கள் 100 பேர் எனின், மேலே i இல் நிழற்றிய பகுதியால் வகை குறிக்கப்படுவோரின் எண்ணிக்கையைக் காண்க.

iii. ε = {விருந்துபசாரத்திற்கு வந்தவர்கள்}
A = {ஆண்கள்}
B= {சைவ உணவு உண்பவர்கள்} எனக் கொண்டு $n(A \cup B)'$ இன் பெறுமானத்தையும் $n(A' \cap B')$ இன் பெறுமானத்தையும் கண்டு இவை இரண்டுக்கும் இடையிலான தொடர்புடைய ஒன்றைக் காண்க.

iv. விருந்துபசாரத்திற்கு வருகை தந்தவர்களில் ஒருவரை எழுமாறாகத் தெரிவு செய்யும் போது அவர் சைவ உணவு உண்பவராக அல்லது அசைவ உணவு உண்பவராக இருப்பதற்கான நிகழ்ச்சிக்குரிய மரவரிப்படத்தை வரைக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v. இதிலிருந்து அவர் அசைவ உணவு உண்பவராக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

05.



தரம்11 மாணவன் நிரோஸ் தனது செயற்றிட்டத்திற்காக குறித்த கடை ஒன்றில் விற்கப்பட்ட கோதுமை மாவின் அளவுகள் பற்றிப் பெறப்பட்ட தகவல்களை ஒரு வலையுரு வரையம் ஒன்றில் காட்டினான். இங்கு 30 –40 என்பது 30 இலும் கூடிய ஆனால் 40 இலும் குறைந்த எண்களைக் காட்டி நிற்கின்றது.

i. அக் கடையில் விற்கப்பட்ட கோதுமை மாவின் மிகக் குறைந்த அளவு யாதாக இருக்கலாம்?

ii. தரப்பட்ட வலையுரு வரையத்தைப் பயன்படுத்தி மீடிறன் அட்டவணையைத் தயாரிக்குக.

iii. மேலே ii இல் பெறப்பட்ட மீடிறன் அட்டவணையைக் கொண்டு ஒரு நாளில் விற்கப்பட்ட கோதுமை மாவின் இடை நிறையைக் காண்பதற்குப் பூர்த்தியாக்க வேண்டிய அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது. இவ் அட்டவணையைப் பூர்த்தியாக்குக.

வகுப்பாயிடை	30–40	40–50	50–60	60–70	70–80	80–90
மீடிறன்						

வகுப்பாயிடை	நடுப்பெறுமானம் (x)	மீடிறன் (f)	fx
30–40			
40–50			
50–60			
60–70			
70–80			
80–90			

iv. இவ் அட்டவணையைப் பயன்படுத்தி ஒரு நாளில் விற்கப்பட்ட கோதுமை மாவின் இடை நிறையைக் கண்டு ஐந்து மாதங்களுக்கு வேண்டிய கோதுமை மாவின் நிறையைக் காண்க.

(29.11.2013 அன்று வெளியாகிய விஞ்ஞானம் பகுதி –I இன் தொடர்ச்சி)

31. இவ்வடம்,



i. ஈரூசிச் செருகி வட்டமாகும்
ii. மூவட்டுக் கம்பியாகும்
iii. ஈரகட்டுக் கம்பியாகும்
iv. மேற்கூறிய ஏதுமன்று

32. ஆவர்த்தன அட்டவணை தொடர்பில் மாணவர்கள் சிலரது கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளது.

A. இடமிருந்து வலம் நோக்கிச் செல்கையில் மூலகங்களினது உருகுநிலை முதலில் கூடிப் பின்னர் குறையும்.
B. மூலகங்களின் வலுவளவிற்கும் அவை உள்ளடக்கப்படும் கூட்ட எண்ணுக்குமிடையில் தொடர்புண்டு
C. எந்தவொரு கூட்டத்திலும் மேலிருந்து கீழ் நோக்கிச் செல்லும்போது கொதிநிலை கூடும்.
D. உலோக இயல்புடைய மூலகங்கள் இடப்புறமாகவும் அல்லுலோக இயல்புடைய மூலகங்கள் வலப்புறமாகவும் உள்ளன.

இவற்றுள் சரியானவை

i. B,C,D மட்டும் ii. A,C,D, மட்டும்
iii. A,B,D மட்டும் iv. A,B,C மட்டும்

33. A,B காபன் மின்வாய்களாகும். இவற்றுள் A,B என்பன முறையே.



i. A அனோட்டு, B கதோட்டு
ii. B கதோட்டு A அனோட்டு
iii. A,B இரு மின்வாய்களும் அனோட்டு
iv. A,B இரு மின்களும் கதோட்டு

34. நீரின் நிலையான வன்மைக்கு காரணமாவது.

i. நீரில் கரைந்துள்ள $CaCo_3$
ii. வெப்பமேற்றி அகற்ற முடியாத $CaSO_4+MgSO_4$
iii. நீரில் உள்ள குளோரைட்டு அயன்
iv. நீரில் உள்ள சோடியம் அயன்

35. இரைப்பையில் அமிலத்தன்மையை நீக்குவதற்கு அமில.நிரோதி ஒன்றை மருந்தாக உட்கொள்வர். இம் மருந்தாவது.

i. $CaCO_3$ ii. $Mg(OH)_2$ iii. $MgSo_4$ iv. ஐதான H_2SO_4

36. அழுத்த சக்தி இயக்க சக்தியாக மாறும் போது பொருளின் வேகத்தை துணிவதற்கு

i. $mgh - \frac{1}{2} mv^2$ பயன்படுத்தப்படும்.
ii. $mgh = \frac{1}{2} mv^2$ பயன்படுத்தப்படும்.
iii. $mgh + \frac{1}{2} mv^2$ பயன்படுத்தப்படும்.
iv. $mgh \times \frac{1}{2} mv^2$ பயன்படுத்தப்படும்.

37. பின்வரும் எது எதிர் ஒட்சியேற்றமாகும்.

i. மொனே சோடியம் குளேகுளுடமேட் ii. கெரடீன்
iii. பியூடிலேட்ஹைட் ரொக்சிதொலுயின் iv. சோடியம் நைட்ரைட்டு

38. நீரேற்றப்பட்ட உட்பாகிய நீலநிற $CuSO_4$ ஐ வெப்பமேற்றும்போது வெள்ளை நிறமாவதைக் காட்டும் சரியான சமன் செய்த சமன்பாடு எது?

i. $CuSo_4(s) + 5H_2o_{(g)} \xrightarrow{\Delta} CuSo_4 5H_2O(g)$
ii. $H_2o_1 + Cuso_{4(5)} \xrightarrow{\Delta} Cuso_4 + H_2o_{(g)}$
iii. $Cuso_4\ 5H_2o_{(s)} \xrightarrow{\Delta} Cuso_{4(s)} + 5H_2o_{(g)}$
iv. $Cuso_4 5H_2o_{(s)} \xrightarrow{\Delta} Cuso_{4(s)} + 5H_2o_{(g)}$

39. பதார்த்தத்தின் அளவை அளக்கும் சர்வதேச அலகு

i.மூலகம் ii. கிலோகிராம் iii. நியூட்டன் iv. லீற்றர்

40. அமில மழைக்குக் காரணமான பச்சைவீட்டு விளைவுக்குக் காரணமற்ற வாயு.

i.Co_2 ii. So_2 iii.O_3 iv. NO_2 (முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னாசாமி...!

சாப்பாட்டில் பீடி துண்டா?

அண்மையில் எனக்கு தெரிந்த நண்பனை பார்ப்பதற்காக அவர் புதிதாக திறந்த சைவ உணவகத்துக்கு சென்றிருந்தேன்.

வாசலிலேயே நண்பர் என்னை வரவேற்றார். மேலும் நண்பர் கடையில் சாப்பிட்டு விட்டுதான் போகவேண்டும் என்று அடம்பிடித்தார். நானும் சரி என்று ஒரு மேசையில் உட்கார்ந் தேன். நண்பர் அங்கு வேலை செய்யும் ஆட்களிடம் இவரை நன் றாக கவனியுங்கள் என்றார்.

சாப்பாடும் ஓரளவுக்கு நன்றாக இருந்தது. சாப்பிட்டுக்கொண்டிருந்த போதே இன்னும் கொஞ்சம் சாப்பிடுங் கள் என்று சோற்றையும் கறியையும் கொண்டுவந்து போட்டார்கள். நானும் போதும் போதும் என்று சாப்பிட்டு கடைசியாக உள்ள சோற்றை பிசையும் போது என் கையில் ஒரு பீடித்துண்டு அகப்பட்டது.

அதை பார்த்ததும் அதிர்ந்து போனேன். சாப்பாட்டில் பீடித்துண்டா என்று, அதற் கிடையில் அங்கு வேலை செய்த நபர் நைசாக அதை கையில் வாங்கிக் கொண்டு முதலாளியிடம் சொல்லாதீர்கள் என்று வேண்டிக்கொண்டு சென்றுவிட்டார். இத்தனை உபசரிப்போடு கவனித்தவர்களை என்னால் எதுவும் சொல்லமுடியாது. மேலும் கடை முதலாளிஎன் நண்பர் என்றபடியால் அவ ரிடமும் எதுவும் சொல்லமுடியாமல் வந்துவிட் டேன்.

ஹோட்டல் சாப்பாடே கதி என்று நம்பிவருபவர்கள் எத்தனை பேர்? இப் படி சுகாதாரம் இல்லாது சாப்பாட்டை கொடுப்பது என்ன நியாயம்?

இது தப்பும்மா...!

நான் வசிக்கும் தொடர்மாடிக் கட்டிடத்தில் முதலாவது மாடியில் சிறிய அளவு அறை போன்ற இடம் இருக்கும். கிட்டத்தட்ட ஒரு ஆள் உள்ளே நிற்கக்கூடிய வகையில் அமைந்திருக்கும். அந்த அறையில் தண்ணீர் மீற்றர் மற்றும் மின்சார மீற்றர் பொருத்தப்பட்டிருக்கும். ஒரு நாள் அந்த அறையில் இருந்து புகை வரு வதை அவதானித்தேன். என்ன நடக்கிறது என்பதை தெரிந்துகொள்ள பின் வழியாக எட்டிப்பார்த்தபோது. எங்கள் தொடர்மாடிக்கு அருகில் ஒரு பையன் இரண்டு சைக்கிளு டன் நின்றிருந்தான். அவன் சற்று பதற்றமாக நின்று அக்கம்பக்கத்தில் யாராவது வருகிறார்களா என்று பார்த்துக்கொண்டிருந்தான்.

சிறிது நேரத்தில் அந்த மீற்றர் அறையில் இருந்து ஒரு பையன் ஓடிவந்து அவனிடம் தீப்பெட்டியை கொடுத்து அனுப்பிவிட்டு அவன் காவலுக்கு நின்று யாராவது வருகிறார்களா என பார்த்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரத்தின் பின்னர் இரண்டு பையன்களும் அந்த இடத்தை விட்டு சென்றபிறகு அந்த அறைக்கு நான் சென்று பார்த்தேன் அதிர்ந்து போனேன். அந்த இடத்தில் நான்கைந்து சிகரட்டு துண்டு கள் கிடந்தன. அந்த இரண்டு பையன்களும் இதே பிளட்ஸில் வசிப்பவர்கள். அதில் ஒருவர் ஆசிரியையின் மகன். ஆனால் அந்த பையன்களின் நடவடிக்கையைப் பாருங்கள்!

பெற்றோர்களே உங்கள் மகன் யாரோடு பழகுகிறான், அவன் என்ன வழியில் செல்கிறான் என்று கொஞ்சம் அவ தானிப்பது நல்லது.

கடந்த மாதம் எங்கள் உற வினர் வீட்டு திரும ணத்திற்கு நானும் எனது மகளும் சென்றிருந்தோம். அப்போது எங்கள் தூரத்து உறவுக் கார பெண் ஒருத்தி கொழும்பில் இருந்து குடும்பத்தோடு வந்திருந்தாள். நான் அவளை பல வருடங்களுக்கு பின் பார்க்கிறேன். கொழும்பில் பெரிய கம்பனி ஒன்றில் உயர்பதவி வகிக்கிறாள்.

அவளைக் கண்டதும் நான் அவளுடன் கதைத் துக்கொண்டிருந்தபோது அவளுடைய மகள் தூரத்தில் இருந்து ஓடிவந்தாள்.

அழகான குட்டி தேவதைபோல் இருந்தாள். சட்டென்று என்னுடைய மகள் அவளை தூக்கி கன்னத்தில் ஒரு முத்தமிட்டாள்.

அடுத்த நொடி அந்த குழந்தை செய்தது என்னை மிகவும் தர்ம சங்கடத்தில் ஆழ்த்தியது.

''சீ எச்சில் இந்த ஆன்டி டேர்ட்டி'' என்று சொல்லி கன்னத்தை துடைத் துக் கொண்டே அழுதது.

அதைவிட அவள் அடுத்து சொன்ன வார்த்தை எங்களை அதிர்ச்சியாக இருந் தது.

''அம்மா அந்த கறுப்பு அக்கா எனக்கு கிஸ் பண்ணிட்டாங்க'' அன்று அருவெருப் பில் முகத்தை சுளித்தது.

உடனே தோழி சொன்னாள் ''அவள் அப்படித்தான் கறுப்பு ஆட்களிடம் செல்லமாட்டாள், சின்ன குழந்தைதானே காலப்போக்கில் மாறிடுவாள்'' என்று சர்வசாதாரணமாக சொல்லிவிட்டு சென் றுவிட்டாள்.

அதன்பின் என்னுடைய குழந்தையின் முகத்தில் தெரிந்த வாட்டத்தை என்னால் பார்க்கவே முடியவில்லை.

இந்த பிஞ்சு வயதிலேயே வெள்ளைதான் அழகு என்று அவள் உள்ளத்தில் பதிந்ததை என்னால் காணக்கூடியதாக இருந்தது.

வெள்ளை என்பது அழகல்ல நிறம் என்பதை அவளுக்கு எப்படி புரிய வைப்பது.

நன்கு படித்தவர்களும் கருத்து சொல்லும் இடத்தில் இருப்பவர்களும் கூட நிறத்தைப்பற்றி விமர்சிப்பது வேதனையாக உள்ளது. என் தோழிகூட 'சின்னப்புள்ள... பெருசா எடுத்துக்காது' என்று அந்த விடயத்தை கண்டுகொள்ளாமல் சின்னப்பிள்ளைத்தனமாக நடந்து கொள்வது எப்படிச் சரியாகும்?

குழந்தைகளிடம் இனியாவது அழகை புகட்டாமல் நல்ல மன தையும் பாசத்தையும் புகட்டுங்கள்.

வெள்ளை என்பது அழகல்ல நிறம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகிம்சையால் உலகை வசப்படுத்திய மண்டேலா

உலகில் கோடானுகோடி பேர் பிறக்கிறார்கள். இறக்கிறார்கள். ஆனால் சரித்திரம் மிகச் சிலரை மட்டுமே பதிவு செய்து வைத்திருக்கிறது. அதற்கு காரணம் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை! ஒருவன் வாழ்ந்த வாழ்க்கையை அவன் இறப்பின் போது கூடும் கூட்டம் பறைசாற்றிவிடும் என்பார்கள். தனியொருவனின் மரணத்திற்காக உலகமே கவலைகொள்கிறது என்றால், உலகெங்கும் உள்ள இலட்சக்கணக்கானவர்கள் கண்ணீர் சிந்துகிறார்கள் என்றால் அவன் வாழ்ந்த வாழ்க்கை எப்படியிருக்க வேண்டும். அவ்வாறு ஒரு வாழ்க்கையை வாழ்ந்தவர்தான் அண்மையில் மரணித்த கருப்பினத் தலைவர் நெல்சன் மண்டேலா!

கருப்பின மக்களை அடக்கு முறையிலிருந்து விடுவிக்கப் பாடுபட்ட தலைவர், புரட்சி வீரன் மண்டேலா!

வீரமென்பது எதிரியைப் பணியவைப்பது. ஆனால் எதிரியை ஆயுதத்தால் அல்ல அகிம்சையால் பணி வைக்க முடியும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டதால்தான் உலகமே மண்டேலாவை ஹீரோவாகப்பார்க்கிறது.

எதிரியை ஆயுதத்தால் அடக்கினால், அடிபணிய வைத்தால் அது நிரந்தர வெற்றியாக இருக்காது. ஏனெனில் இன்று நம்மிடம் இருக்கும் ஆயுதபலம் நாளை அவனிடம் இருக்கலாம். ஆனால் எதிரியால் அணுக முடியாத அகிம்மையைக் கைலெடுத்தால்....? இதுதான் மண்டேலாவின் தத்துவமாக இருந்தது.

ஆனால் மண்டேலா முழுமையாக அகிம்சையை தேர்ந்தெடுத்துவிடவில்லை. இடையில் ஆயுதத்தையும் கையிலெடுத்தார்.

1918-ம் ஆண்டு தென் ஆப்பிரிக்காவின் கிழக்கு முனையில் உள்ள வேசோ எனும் கிராமத்தில் குடிசை விட்டில் பிறந்தார் மண்டேலா. மண்டேலாவுக்கு 9 வயதானபோது அவரது தந்தை இறந்துவிட்டார். அதன் பின் வேறொருவரால் தத்தெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்ட மண்டேலா 23 ஆவது வயதில் தலைநகர் ஜோகன்னஸ்பர்க்கிற்கு சென்றார். தலைநகர் வாசம் தான் அவருக்கு தனது நாட்டில் நிலவிய வெள்ளையர் ஆதிக்கத்தையும் நிறவெறியின் கொடூரத்தையும் உணர்த்தியது. இதன் பயனாக அரசியலில் ஆர்வம் ஏற்பட்டு ஆபிரிக்க தேசிய காங்கிரஸில் சேர்ந்தார். பின்னர் இக்கட்சியின் இளைஞர் பிரிவையும் நிறுவினார்.

ஒலிவர் டாம்போ எனும் நண்பருடன் சேர்ந்து நிறவெறிக்கு எதிராகவும் போராடினர். 1956-ல் அவர் மீது தேசத் தூரோக வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேலும் 155 பேர் மீதும் குற்றம்சாட்டப்பட்டது. இந்த வழக்கு நான்கு ஆண்டுகள் நடைபெற்று அவர் விடுவிக்கப்பட்டார்.

சுமார் 16 ஆண்டு காலம் ஆபிரிக்க தேசிய காங்கிரஸில் அமைதியாக வால்டெர் சிஸூலு, ஆலிவர் டேம்போ வழியில் சென்ற மண்டேலாவை 1960 இல் இடம்பெற்ற ஷார்ப்வில் படுகொலை திசைதிருப்பியது. சீன, கியூபப் புரட்சிகள் ஏற்படுத்திய தாக்கம், ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் ஆயுதப் பிரிவாக உம்கோண்டோ வெசீஸ்வெ (தேசத்தின் ஈட்டி) அமைப்பை உருவாக்கியது. ஆயுதப் பயிற்சிக்காகவும் ஆதரவு திரட்டுவதற்காகவும் எத்தியோப்பியா, அல்ஜீரியா, லிபியா எனப் பல நாடுகளுக்கும் சென்றார் மண்டேலா. நாடு திரும்பியபோது அவரையும் முக்கிய சகாக்களையும் தேசத் துரோகம், சதிக் குற்றச்சாட்டுகளின் கீழ் கைதுசெய்த அரசு ஆயுள் தண்டனை விதித்தது. மண்டேலா நினைத்திருந்தால், சிறைத் தகர்ப்பில் தொடங்கி, அரசுக்கு எதிரான பெரும் தாக் குதல்கள் வரை அடுத்தடுத்த கட்டங்களுக்கு எடுத்துச் சென்றிருக்க முடியும். அமைப்பினர் பலர் அந்தத் திட்டத்தில் இருந்தனர். மண்டேலாவோ, ஆயுதப் போராட்டம் ஒரு கவன ஈர்ப்பு வழிமுறை நிரந்தரமான ஆயுதப் போராட்டம் பெரும் அழிவுக்கே வழிவகுக்கும் என்ற முடிவை நோக்கி நகர்ந்தார். அப்போது தொடங்கி எவ்வளவோ பேர் வெவ்வேறு காலகட்டங்களில் ஆயுதப் போராட்ட வழிக்காக வாதிட்டு மண்டேலாவிடமிருந்து விலகினர். மண்டேலா இறுதிவரை உறுதியாக இருந்தார்.

மண்டேலாவின் 27 ஆண்டு காலச் சிறை வாழ்க்கையில் அவர் ஆற்றிய முக்கியமான பணி, இரு தரப்பினர் இடையே வெறுப்பையும் வன்முறையையும் தவிர்க்க இடைவிடாமல் பேசிக் கொண்டிருந்ததுதான். மண்டேலாவின் இந்த அமைதிப் போராட்டம் உலகோடு பேசியது; முக்கியமாக, அது மேற்குலகின் மனசாட்சியை உலுக்கியது. அங்கிருந்து எழுந்த அழுத்தம் தென்னாபிரிக்க நிறவெறி அரசை அசைத்தது.

1994-இல், எல்லோரும் வாக்களிக்கும் தேர்தல் நடந்தபோது, மண்டேலா குடியரசுத் தலைவர் ஆனார். எதிர்பார்ப்புகள் எவ்வளவு இருந்ததோ, அதே அளவுக்கு அச்சங்களும் மண்டேலா மீது குவிந்திருந்தன. முக்கியமாக, அவர் பழிதீர்ப்பார் என்ற பயம் இருந்தது. மண்டேலா, முன்பு அதிபராக இருந்த டி கிளர்க்கைத் துணை அதிபராக்கி, வெள்ளையர்களை அரவணைத்தார். இதன் மூலம் ஏனைய இனங்கள் மத்தியிலும் நல்லெண்ணத்தை உருவாக்கினார்.

ஐந்து ஆண்டுகள் குடியரசுத் தலைவராக இருந்தாலும், ஆட்சியை நடத்தியது டி கிளர்க்கும் மண்டேலாவின் சகாவான தபோ எம்பெகியும்தான். முக்கியமான முடிவுகளைத் தவிர, அன்றாட விடயங்களில் மண்டேலா தலையிட்டது இல்லை. எந்த ஒரு ஜனநாயக நாட்டுக்கும் ஒரே தலைவர் நீண்ட காலம் ஆட்சியில் இருப்பது நல்லதல்ல என்று சொன்னவர், அடுத்த தேர்தலில் போட்டி யிடவில்லை. விரைவில் அரசியலிலிருந்தும் விலகினார்.

உண்மையான தலைவர்கள் தங்கள் மக்களுக்காக தங்களது அனைத்து சு தந்திரங்களையும் இழக்கத் தயாராக இருக்க வேண்டும்."

என்று சொன்னவர் மண்டேலா. அதன்படி அவர் வாழ்ந்தும் காட்டி விட்டார்.

ரிஷி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதியின் கென்ய விஜயம் எதற்காக?

நிற வேற்றுமையை ஒழித்து கறுப்பின மக்களுக்காக போராடியவர் நெல்சன் மண்டேலா. ரொபின் தீவில் தனிமைச் சிறையில் தனது 95 வயது வாழ்வில் 27 வருடங்களைக் கழித்தவர் நெல்சன் மண்டேலா. பயங்கரவாதி என்று குற்றஞ்சாட்டப்பட்டவர் இன்று தேசபிதா என்று போற்றப்படுகின்றார். அன்னாரின் மரணச் சடங்கு தென் ஆபிரிக்காவில் அவர் பிறந்த கிராமத்தில் நடைபெறவிருக்கிறது.

நிற வேற்றுமைக்கு எதிராக தென்ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆரம்பித்த போராட்டம் நெல்சன் மண்டேலாவை தனித்துவமிக்க விடுதலைப் போராளியாகவும் நாட்டின் தந்தையாகவும் அடையாளம் காட்டியது. தென் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் நடத்திய விடுதலைப் போராட்டத்திற்கு கியூபாவின் ஜனாதிபதி பிடல் காஸ்ரோ, ஸிம்பாப்வே நாட்டின் ஜனாதிபதி ரொபர்ட் முகாபே, லிபியாவின் ஜனாதிபதியான கேணல் கடாபி ஆகியோர் ஆதரவளித்தனர். ரொபின் தீவில், சதிசெய்தார் என்ற குற்றச்சாட்டில் தென்னாபிரிக்காவில் அப்போது ஆட்சி நடத்திய சிறுபான்மை வெள்ளை இனத்தவரின் அரசாங்கம் மண்டேலாவைக் கைது செய்தனர்.

27 ஆண்டுகள் தனிமை சிறைவாசத்தை முடித்துக் கொண்டு விடுதலைபெற்ற நெல்சன் மண்டேலா 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார். ஜனாதிபதியாக ஒரு தடவை மாத்திரமே பதவியிலிருந்த மண்டேலா மீண்டும் பதவிக்கு வரவிரும்பவில்லை. கியூபாவின் காஸ்ரோ, ஸிம்பாப்வேயின் ரொபர்ட் முகாபே போன்று தனது பதவிக் காலத்தை நீடித்துக்கொண்டு போவதற்கு எதிரான கொள்கையை அவர் இறுக்கமாக பிடித்துக் கொண்டார். அது தென் ஆபிரிக்க மக்கள் மத்தியில் மூன்றாம் உலக நாடுகளின் தலைவர்கள் இடையே தனித்துவமிக்கவர் என்ற பெருமைக்கு ஆளானார். ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரும் நாட்டை ஒற்றுமையாக இயங்கவைத்தார்.

ஒரு காலகட்டத்தில் தென் ஆபிரிக்காவின் வெள்ளை இனத்தவரின் ஆட்சிக்கு ஆதரவளித்த பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பா யூனியனில் அங்கம் வகிக்கும் நாடுகள் 27 வருட தனிமை சிறைவாசத்தை முடித்துக்கொண்டு வெளியேறிய நெல்சன் மண்டேலாவின் அரசியல் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவளிக்க முன்வந்தன. இரும்புச் சீமாட்டி என வர்ணிக்கப்பட்ட பிரித்தானியாவின் பிரதமராக இருந்த மார்கிரட் தட்சர் ஒரு கட்டத்தில் மண்டேலாவை 'ஒரு பயங்கரவாதி' என்று தூற்றினார்.

ஜனாதிபதியாக வந்தபின்னர் மண்டேலா ஐ.நா. சபைப் பொதுக்கூட்டத்தில் முக்கிய கருத்து ஒன்றினை வெளியிட்டார். மண்டேலா கூறினார்;-

நிறம், இனம், பால் வேறுபாடு எல்லாம் கடவுள் தந்த கொடை என்பதை அனைவரும் உறுதிப்படுத்த வேண்டும். அவற்றை நிலை நிறுத்த கையாண்ட வழிகள் பற்றிச் சொல்ல, எழுத நிறைய உள்ளன. இப்பின்னணியில் நெல்சன் மண்டேலாவின் இறுதிச் சடங்குகள் அன்னார் பிறந்து வளர்ந்த யுனு என்ற கிராமத்தில் இன்று வியாழக்கிழமை உலக நாடுகளின் தலைவர்கள் அஞ்சலி செய்வதற்காக மண்டேலாவின் பூதவுடல் வைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் முதலாவது கறுப்பு நிற ஜனாதிபதி என்ற பெருமையைப் பெற்ற பராக் ஒபாமா, அவரது துணைவியார் மிஷெல் ஒபாமா, அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான ஜோர்ஜ் டபிள்யு புஷ், பில் கிளின்டன், ஜிம்மி கார்ட்டர் ஆகியோர் பூதவுடலுக்கு அஞ்சலி செய்வர்.

அஞ்சலி செலுத்துவதற்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பயணமாகிவிட்டார். உலகத் தலைவர்கள் வரிசையில் அவரும் நின்று அஞ்சலி செலுத்துவார். மண்டேலா நிறவேற்றுமைக்காக போராடி வெற்றியீட்டி சாதனை புரிந்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இனவேற்றுமைத்தீயை ஊதி வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். பூதவுடலுக்கு அஞ்சலி செய்யும் நோக்கம் என்னவாக இருக்கும்? என்ற கேள்விதான் பரவலாக கேட்கப்படுகிறது. மறைந்தவரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதன் நோக்கம் மறைந்த தலைவரின் கொள்கைகளை நாமும் முன்னெடுத்துச் செல்வதாக இருக்கவேண்டாமா? மண்டேலாவின் பூதவுடலுக்கு அஞ்சலி செய்தபின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கென்யா நாட்டுக்குச் செல்கின்றார். கென்யாவின் ஜனாதிபதி உகுறு கென்யாட்டா பொதுநலவாய அமைப்பின் உறுப்பினர் ஆவார். அவர் கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சிமாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. தனக்கு பதிலாக தனது வெளியுறவு அமைச்சரையே அனுப்பியிருந்தார்.

கென்யாவின் சார்பில் சோஹும் உச்சிமாநாட்டுக்கு கென்யா ஜனாதிபதி வராதது இதுவே முதல் தடவையாகும். காரணம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக கென்யாவில் 2007 இல் இடம்பெற்ற வன்முறைகளில் ஈடுபட்டார் என்ற வழக்கு இருப்பதால் என்று தெரிவிக்கப்படுகிறது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் தமக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு தொடர்பாக பொதுநலவாய செயலகம் ஆதரவளிக்கவில்லை என்பதே கென்ய ஜனாதிபதியின் அதிருப்திக்கு காரணமாகும்.

அவருக்கு எதிரான வழக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் அடுத்த வருடம் பெப்ரவரியில் விசாரணைக்கு வருகின்றது. பொதுநலவாயத்தின் நடப்பு வருடத்தலைவர் என்ற முறையில் மஹிந்த ராஜபக்ஷ கென்யா செல்கிறார். இலங்கை அரசாங்கம் சர்வதேச நீதிமன்ற விசாரணையை எதிர்நோக்கவேண்டிய நிலை ஏற்படும் என்று பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் கொழும்பில் நின்றபோது எச்சரித்து காலக்கெடு விதித்திருந்தார். இதற்கான முன்னெடுப்பை 2014 மார்ச் இல் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் மேற்கொள்வேன் என்றும் காலக்கெடு விதித்திருந்தார். இலங்கை, கென்ய தலைவர்களின் சந்திப்பு சர்வதேச நீதிமன்ற விசாரணைக்கு முன்னோடியான சந்திப்பாக அமைந்துவிடுமா? பொறுத்திருந்து பார்ப்போம்?

அநாமிகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்கு மட்டுமே உபதேசமா?

டெங்கு ஒழிப்புக்கு பொறுப்பாக இருக்கும் சுகாதார வைத்திய பணிமனையிலேயே டெங்கு அதிகம் பெருகும் சாத்தியம்!

தற்போது பரவும் பயங்கரமான ஒரு நோய் டெங்கு. அதனை கட்டுப்படுத்துவதற்கு தேசிய ரீதியில் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், பெருந்தொகையான பணமும் செலவு செய்யப்படுகின்றது. அந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் கடந்த ஆண்டு டெங்கு நோய் காரணமாக இருவர் உயிரிழந்துள்ளதுடன் இவ்வாண்டு ஒருவரே உயிரிழந்துள்ளார். இதன் மூலம் டெங்கு ஒழிப்பில் வவுனியாவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது எனக் கூறப்பட்டாலும் அது இன்னும் முழுமையடையவில்லை என்றே சுகாதார பரிசோதகர்கள் குறிப்பிடுகின்றனர்.

டெங்கு பெருகக் கூடிய இடங்களாக இனங்காணப்பட்ட பகுதிகளுக்கு சிவப்பு நோட்டீஸ் ஒட்டப்பட்டு தண்டமும் அறவிடப்பட்டு வருகிறது. அந்த வகையில் இவ்வாண்டு தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின்போது டெங்கு இருப்பதாக இனங்காணப்பட்ட பல இடங்கள் அதிர்ச்சி தரும் இடங்களாக அமைந்துள்ளமை பலரையும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

சாதாரண மக்களினுடைய வீடுகளுக்கு டெங்கு ஒழிப்பு தொடர்பாக அறிவுறுத்தப்பட்டு மக்கள் அதனை கட்டுப்படுத்துவதற்கு சுகாதார பரிசோதர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறார்கள்.

ஆனால், அரச அலுவலகங்கள் மற்றும் அரச விடுதிகளில் டெங்கு பெருகக் கூடிய வாய்ப்பு இருப்பதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

டெங்கு ஒழிப்புக்கு பொறுப்பாக இருக்கின்ற பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அவர்களின் பணிமனையில் டெங்கு பரவக் கூடிய இடங்கள் இருப்பதாக கடந்த 9 ஆம் திகதி இணையத்தளமொன்றில் செய்திகள் வெளியானதைத் தொடர்ந்து அங்கு சென்று பார்த்தபோது, சுகாதார பணிமனை வளாகத்தில் நீர் தேங்கக்கூடிய வகையில் வாகன ரயர்கள், பொலித்தீன் பைகள், அடைக்கப்பட்ட நிலையில் கழிவு வாய்க்கால் என்பன காணப்பட்டதுடன் சுகாதார சீர்கேடான முறையில் குப்பை கூளங்களும் நீண்ட நாட்களாக அகற்றப்படாது காணப்பட்டன.

சுகாதார பணிமனையில் உள்ள உணவு விடுதிக்கு அருகில் கழிவு வாய்க்கால் காணப்படுவதுடன் அதன் பின்புறப்பகுதியும் சுகாதார சீர்கேட்டுடன் காணப்பட்டது. சமூகத்திற்கு முன்மாதிரியாக இருக்கவேண்டிய குறித்த சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனை இவ்வாறு இருப்பது எந்த வகையில் நியாயமானது? அவர்களே இவ்வாறு இருக்கும்போது டெங்கையோ அல்லது தொற்று நோய்களையோ கட்டுப்படுத்த முடியுமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

நாளாந்தம் கர்ப்பிணித்தாய்மார்கள், சிறுவர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் வந்து செல்கின்ற இந்த இடத்தில் இப்படியான நிலைமை காணப்படுவது மிகவும் அபாயகரமானது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தவிர வவுனியா மாவட்ட செயலக வளாகத்தில் இறுதி யுத்தத்தின்போது மக்களால் கைவிடப்பட்ட வாகனங்கள் குவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் நீர்தேங்கி நின்று டெங்கு பெருகக் கூடிய அபாயம் உள்ளதாக சுட்டிக்காட்டி சுகாதார பரிசோதகர்களால் மாவட்ட செயலகத்தில் சிவப்பு நோட்டீஸ் இரண்டு ஒட்டப்பட்டது. ஆனால் அது ஒட்டப்பட்டு மறு நாளே அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது. டெங்கு இருப்பதாக கூறப்பட்டு ஒட்டபட்ட சிவப்பு நோட்டீஸ் அக்ற்றப்பட்டமையானது சட்டம் அனைவருக்கும் சமமானதா என்ற சந்தேகத்தை மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

இவ் விடயம் தொடர்பில் வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்தியகலாநிதி பத்மநாதன் சத்தியலிங்கத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது:-

வவுனியா மாவட்ட செயலகத்தின் பின் பகுதியில் உள்ள வாகனங்களால் டெங்கு பரவும் அபாயம் இருப்பதாக கடந்த ஆண்டும் நான் டெங்கு ஒழிப்புக்கு பொறுப்பாக இருந்த போது கூறப்பட்டது. அதன் பின் அரச அதிபர் அவற்றில் நீர் தேங்கி நிற்க முடியாதவாறு கழிவு ஒயில் ஊற்றியும் மண் போட்டும் துப்புரவு செய்தார். அதேபோல் இவ்வாண்டும் டெங்கு பரவக் கூடிய சூழ்நிலை இருந்து சிவப்பு நோட்டீஸ் ஒட்டப்பட்டதாக அறிகிறேன். அவ்வாறு சிவப்பு நோட்டீஸ் ஒட்டப்பட்டிருந்தால் அதனை அகற்றுவது சட்டரீதியாக பிழையானது. அவ்வாறு செய்ய முடியாது எனத் தெரிவித்தார்.

அரச அலுவலகங்களில் டெங்கு பரவக் கூடிய சூழ்நிலை இருப்பது சாதாரண வீடுகளில் இருப்பதை விட அதிக தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. ஏனெனில் வீட்டில் குறிப்பிட்ட சிலர் மாத்திரமே இருப்பர். ஆனால் அரச அலுவலகங்களில் அவ்வாறு இல்லை. அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் இருப்பதுடன் அதிகளவிலான மக்களும் வந்து செல்லும் இடமாகும். அதனால் பாதிப்பு அதிகம் ஏற்படவாய்ப்புள்ளது.

சென்ற ஆண்டு சுகாதார பரிசோதகர் ஒருவருடைய மனைவி டெங்கு நோயினால் இறந்திருந்தார். இம்முறை அச் சுகாதார பரிசோதகர் இருக்கும் அரச விடுதியிலும் டெங்கு இருப்பதாக இனங்காணப்பட்டு சிவப்பு நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது. இது சாதாரண விடயமாகக் கருதமுடியாது. சிந்திக்கப்பட வேண்டிய விடயம்.

இவ்வாறு வவுனியாவில் சாதாரண மக்களின் வீடுகளை விட அரச அதிகாரிகளின் அலுவலகங்கள் மற்றும் அரச விடுதிகள் சிலவற்றில் டெங்கு பரவக் கூடிய சூழ்நிலை இருப்பதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளமை டெங்கு ஒழிப்பு வெற்றி பெறுமா என்ற சந்தேகத்தை மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

-கே.வாசு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைத் துளிகள்



சிலைகள் தானே!

எதற்குடைத்தீர்
எங்கள்
தெய்வாலயங்களை!
நாங்கள்
சந்தோஷப்படுவதும்
சமாதானப்படுவதும்
இங்குதான்

ஆபரணம் அணிந்த
தெய்வங்களென்ற
அங்கலாய்ப்பா - இல்லை
பக்த அடியார்களின் மீது
ஆவேசமா

பேரணி நடத்தவில்லை
மன்றத்தில்
பேச்சுக்களையும் காணவில்லை
கண்டித்து சினந்திட
அமைப்பும் கிட்டவில்லை

உடையுங்கள் நன்றாய்
திருடுங்கள்
இந்துக்கள் இரக்கமுடையோர்
என்பதை
இம் மௌனத்திலிருந்தாவது
கற்றுக்கொள்ளுங்கள்

எங்கள்
சோகங்களை ஒன்று திரட்டி
கோபுரங்களில்
வீற்றிருக்கும் தேவர்களிடம்
கொடுத்துள்ளோம்
ஆயுதங்களாய்....!

சிலைகள் தானே
என்கின்றீர்களா
இன்று
நாங்களே சிலைகளான பின்
சிலைகள் தான்
பாவம் என்ன செய்யும்!

கோபால் பிரேம்குமார், மஸ்கெலியா.

பசி

உளர்முழுவதும் ஊற்று வற்றி
உணவு தேடி ஊரை சுற்றி
உயிர்வாழ வலியை தேற்றி
உணவுக்காக உறுப்பை விற்று
பசியால் பட்டினி தொடர்ந்து
பத்தும் பறந்து பலரும் பாவம்
என்று சொன்னார்களே ஒழிய
பசிதீர பணமோ பானமோ
கொடுக்கவில்லை பச்சப்பிள்ளை
பசிபோக்க மருந்திற்காக
பச்சிலை கூட கொடுக்காதவர்
பள்ளத்தில் பிள்ளை உறங்கும் போதுமட்டும்
பலர் சேர்ந்து பாலூற்ற காத்திருப்பது
சரியா? இல்லை இதுதான் முறையா?

த.ஜெயநாதன், வலிப்பனை.

மரண ஓலை

மரண ஓலை
மார்பை பிளக்கின்றது
மறக்க முடியாத- மானுட வாழ்க்கை
இளமை போர்வையில்
இன்னாசைப்பாடுகின்றது

காதலின் முடிவு
கல்வாரி பயணமா?
கண்முன் தோன்றிய தேவதை
காணாமல் போய்விடுவாளா?

மனதில் காதலை விதைத்து
மாரடைப்பில் கொண்டுவிடுவாளோ?
ஏன் இந்த மாற்றம்?
மங்கையின் மனதில்

மரணத்தை நேரடியாக கொடுக்காத - யமன்
கவி எனும் மங்கைவடிவில் அனுப்பிவிட்டானே
காதலெனும் பாச வலையை
மரணவலையாக மாற்றி விட்டான்
பெண்ணா அவள் யமன்

ச.ஜோன்சன், மன்றாசி.



சின்ன சின்ன பரிசில்கள்

உயிர் கொண்டு வந்த எத்தனையோ
பரிசில்களைவிட, நான் எந்தன் உயிரை
விட உயர்வாக நேசிக்கின்ற
அந்த சின்ன பரிசு, நீ என்னுடன் தினமும்
பேசுகின்ற அந்த ஓரிரு வார்த்தைகள் தான்

கனவில் வந்த உன் நினைவுகள்
நிஜத்தில் கனவாகியது
என் காதலை சொல்ல வந்த இதயத்தை
உன் இடி தாங்கிய
வார்த்தைகள் - என் இதயத்தையே
இல்லாமல் ஆக்கியது ஏனோ?

ச.விஜயபாஸ்கர், சென்.ஜோன்டிலரி.

கண்ணீர்

கொடியவளே! நீ
பிரிந்து செல்லும் போது
என் இதயத்தில் அடைக்கலமாய்
இருந்த உன் நினைவுகள்
அணைதிறந்த வெள்ளம்
போலாயிற்று - அதனை
இரு விழிகளுக்குள் இரகசியமாய்
தேக்கி வைத்து
இமைகளென்னும் கதவடைத்தேன்
அத்தருணத்தில் - என்
இமைகளையும் மீறி
இரகசியங்கள் கசிகிறது
கண்ணீராக.

ஆர்.பாசமலர், திகன அஸ்தவத்த.

காதல்

காதலுக்கு அடையாளமாக
கைக்குட்டை
கொடுத்தாய்
என்று
நினைத்தேன்
பிறகு தான் தெரிந்தது
அது என்
கண்ணீரை துடைக்கவென்று

ச.சபிதரன், மன்னார்.

மனிதா

சோதனைகள் சுற்றி உள்ள போதும்
வேதனைகள் கட்டி கொண்ட போதும்
சாதனைகள் படைத்திட வேண்டுமடா....!
வெற்றி என்பது பட்டாம் பூச்சி
அது ஒவ்வொரு மலரிலும் அமரும்
தோல்வி என்பது வெற்றியின் படியடா...!
சோதனைகள் தாண்டி பெறும்
வெற்றியே சுகமானதடா.....!

க.சகுந்தலா, புசல்லாவ.

தன்னம்பிக்கை

வாழ்வில் நீ வெற்றி பெறும்
போதெல்லாம்
உன் முதல் தோல்வி
ஞாபகத்திற்கு வந்தால்
உன்னை வெல்ல யாராலும் முடியாது...!

அ.பாத்திமா சமீரா, பொகவந்தலாவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதய சூரியன் "கவிதைச்சமர்"
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்
இல. 68, எலிஹவுஸ் வீதி, கொழும்பு-15.
பெயர்:----------
முகவரி:----------
தொலைபேசி இல----------



தமிழா! தமிழா!

பாலா.சங்குப்பிள்ளை அத்தியாயம் 11

சாருமதி வழமை போல் அன்றும் நேரத்துடன் படுக்கையைவிட்டு எழுந்தாள். அன்று சனிக்கிழமை. பாட சாலை விடுமுறை. ஆனாலும், ஐந்தாமாண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்துவதற்காக விஷேட வகுப்புகளை நடத்தி வருகிறாள். கடந்த ஆண்டைவிட இம்முறை அதிகளவான மாணவர்கள் பரீட்சையில் வெற்றிபெற வேண்டுமென்பதே அவளின் ஒரே குறிக்கோளாக இருந்தது. அவள் காம்பறாவை விட்டு வெளியே வந்தாள். மழை இலேசாக தூறிக்கொண்டிருந்தது. அவள் அந்தக் குடையை விரித்தாள். அது அவளின் பிறந்த நாளுக்காக தமிழ் அவளுக்கு பரிசாக அளித்தது. அதனால் அவள் அதை தன் கண்ணைப் போல காத்துவருகிறாள்.

"சாருமதி டீச்சர் போனமுறை என்னோட பிறந்த நாளுக்காக எனக்கொரு அழகான கைக்கடிகாரத்தை பிடிவாதமாக வாங்கித் தந்தீங்க. இதோ என்னோட சிறிய அன்பளிப்பு...."

"அப்படின்னா வெறும் அன்பளிப்பு மட்டும்தானா?"

"ஆமா, வேற என்ன எதிர்பார்க்கிறீங்க...?"

"என்னோட மனசுல எத்தனையோ இருக்கு. ஆனா சொல்லத்தான் வார்த்தைகள் இல்லை...."

"டீச்சர், நாம இங்க சேவை செய்ய வந்திருக்கோம். நம்மலோட தனிப்பட்ட தேவைகளுக்கு நாம அடிமையாகிடக்கூடாது...."

"ஐயையோ, என்ன நீங்க இப்படி கோபப்படுறீங்க..... நான் தவறா ஏதும் சொல்லலை. சேவை செய்யத்தான் நாம வந்திருக்கோம். ஆனா, அதுக்காக நம்மலோட தனிப்பட்ட ஆசாபாசங்களுக்கு தடைபோட தேவையில்லைத் தானே...."

"இப்ப நீங்க என்னதான் சொல்ல வாரீங்க....?"

"இதுக்கு மேல பெண்ணான நான் என்னத்தைச் சொல்லுறது.... கண்ணாடியில தன்னோட பிம்பத்தைப் பார்த்தும் எதுவும் தெரியலைன்னா அப்புறம் நான் என்ன சொல்லமுடியும்....?"

சாருமதி சட்டென நின்றாள். அவளுக்கு தலைசுற்றியது. தொடர்ந்து நடக்கமுடியவில்லை. நேற்று வைத்தியரைப் பார்த்தபோது அவர் கவலையுடன் அவளைப் பார்த்தார்.

"என்னம்மா நீ சத்தான உணவு எதுவும் சாப்பிடுற தில்லையா.... உடம்புல சத்தில்லை. இப்புடியே போனா படுக்கையிலத்தான் விழவேண்டியிருக்கும். உனக்கு இரத்த அழுத்தம் குறைவாக இருக்கு. உடனடியா இதை கவனிக்காட்டி விபரீதமாயிடும்...."

சாருமதி எதையும் காதில் போட்டுக்கொள்ளவில்லை. எப்போது தமிழ் போனானோ அப்போதே அவள் உயிரற்றவளாகிவிட்டாள். அவனின் பார்வையொன்றே அவளை பழைய நிலைக்குக் கொண்டுவரும். அதுவரை அவள் சரியாக சாப்பிடமாட்டாள். யார் சொல்வதையும் கேட்கமாட்டாள். மொத்தத்தில் அவளொரு நடைப்பிணம் தான்.

அவள் சற்றுநேரம் மரமொன்றை பிடித்தவாறு நின்றிருந்தாள். பின்பு நடக்கத் தொடங்கினாள்.

"அப்பா... தயவுசெய்து என்னை கட்டாயப்படுத்த வேணாம். எனக்கு உங்களோட சொத்துசுகம் எதுவும் தேவையில்லை. இதெல்லாம் நிலையில்லாதது. நிலையானது தூய அன்பு மட்டும்தான். அதனால நான் மாளிகையை விட்டு மண்குடிசையை நாடி போகப்போறேன். பணம் பகட்டுடன் பண்பில்லாமல் திமிரோடயிருந்த நான் இப்போ அன்புக்காக அத்தனையையும் தூக்கிவீசிட்டுப் போறேன்...."

"தாயில்லாப் பொண்ணுன்னு உன்னை தங்கம் மாதிரி தாங்கின என்னை உதறிட்டு எவனோவொரு தறுதலையை நம்பி தந்தையை தவிக்கவிட்டுட்டு போகப் போறியா... உன் முடிவை நீ மாத்திக்கம்மா..."

"தமிழ் தறுதலையில்லப்பா... பத்தரை மாற்றுத் தங்கம். அவரோட அன்பு சாம்ராஜ்யத்துக்கு இணையா எதுவுமே ஈடாகாது. இவ்வளவு நாளா தகரமாயிருந்த நான் அவராலதான் தங்கமானேன்."

"நான் சொல்றதைக் கேளு சாருமதி. நீ விரும்பினவனையே கட்டிக்க. ஆனா வீட்டைவிட்டு போகத் தேவையில்லை. அவரையும் இங்கே கூட்டிட்டு வா. ரெண்டுபேரும் சந்தோஷமா இங்கேயே இருக்கலாம்..."

"அப்பா அவர் சுய உழைப்புல வாழ்றவரு. உங்களோட சொத்து அவர் கால் தூசிக்கு சமம். இன்னமும் அவர் எனக்கே எட்டாக் கனியாத்தான் இருக்காரு. அவரோட அன்பு கிடைக்கிறதுக்காக நான் எதுவும் செய்வேன். தயவு செஞ்சி என்னை வற்புறுத்தாதீங்க. இது என்னோட இறுதியான உறுதியான முடிவு. என்னை விட்டுடுங்க..."

சாருமதி பாடசாலையை அடைந்தாள். அநேகமான மாணவர்கள் நேரத்துடன் வந்திருந்தார்கள். பெற்றோர் சிலரும் வந்திருந்தனர்.

"டீச்சர்... நான் மட்டும்தான் தோட்டத்துல வேலை. அவருக்கு சுகமில்லை. என் மவ நல்லா படிக்கக்கூடியவ. ஆனா, அஞ்சுபேரு இருக்கிற குடும்பத்துல இவளுக்குத் தனியா செலவு செய்யிறது கஷ்டமா இருக்கு. தமிழ்சேர் இருந்தப்ப கொப்பி புத்தகம் வாங்கிக் குடுப்பார்... அவரும் இப்ப இல்ல..."

சாருமதி புன்னகையுடன் அந்தத் தாயை பார்த்தாள்.

"படிக்கிற பிள்ளையை படிக்க வைக்கணும். கஷ்டம்னா எனக்கிட்ட சொல்லலாமில்லையா. தமிழுக்கு பதிலா நான் இருக்கேன். வகுப்பு முடிய நான் தர்சினியை டவுணுக்குக் கூட்டிட்டுப் போய் தேவையானதை வாங்கித் தாரேன். நீங்க கவலைப்படாம போங்க..."

"ரொம்ப சந்தோஷம் டீச்சர். ஓட்டு கேட்டு வந்தவன் கூட உதவின்னு போனா ஓட்டமா ஓடி மறையிற இந்தகாலத்துல கேட்காமலேயே தேடி வந்து உதவிசெய்யிற அந்த தமிழ்சேர் எங்க போனார்ன்னு தெரியலை. எங்களை மாதிரி நாதியற்ற ஏழை, எளியவங்களுக்காகவாவது அவர் மறுபடியும் வரணும். ஆண்டவன் கைவிடமாட்டான். நிச்சயமா அவர் வருவாரு..."

தொடரும்

மலையகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறை, துஷ்பிரயோகத்தைக் கண்டித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அட்டன் பொலிஸ் மற்றும் அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் காரியாலயம், பிரதேச இளைஞர் சமூக சம்மேளனம் ஆகியன இணைந்து பதாதைகளை ஏந்தி அட்டன் நகரில் ஊர்வலம் ஒன்றை மேற்கொண்டதோடு வீதி நாடகம் ஒன்றையும் அரங்கேற்றினர்.

க.கிஷாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயசூரியனுக்கு நன்றி!

மனம் மகிழும் மாகஸ்தோட்ட மக்கள்!



நுவரெலியா மாகஸ்தோட்ட மேற்பிரிவில் கலாசார மண்டபத்தை புனரமைத்துத் தருவதாகக் கூறிய பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்கா புனரமைப்புப் பணிகளை துரிதப்படுத்தவில்லை. ஏற்கனவே இருந்த மண்டபம்



உடைக்கப்பட்டு புதிய மண்டபம் கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டபோதும் மண்டபம் அமைக்கும் பணிகள் கைவிடப்பட்டுக் கிடக்கின்றன என்ற ஆதங்கத்தை உதயசூரியன் வாயிலாக மாகஸ்தோட்ட மக்கள் பகிர்ந்து கொண்டனர்.

இது தொடர்பான கட்டுரை கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் பிரசுரமாகியிருந்தது.

இதனைத் தொடர்ந்து தற்போது மேற்கூறிய கலாசார மண்டபம் புனரமைப்பிற்கான வேலைகள் விறுவிறுப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அப்பகுதி மக்கள் மகிழ்ச்சியடைவதோடு, உதயசூரியனுக்கு நன்றியையும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அப்பிரதேசத்தில் உள்ள ரவிச்சந்திரன் என்பவர் கூறுகையில்; உதயசூரியன் மூலம் எத்தனையோ பிரச்சினைகள் வெளிக்கொணரப்படுகின்றன. அந்தவகையில் இரண்டு வருட காலமாக கைவிடப்பட்டுக் கிடந்த மாகஸ்தோட்ட மண்டப புனரமைப்பிற்கு உதயசூரியன் வழிவகுத்துள்ளது என்றார்.

எஸ்.சுப்ரமணியம் என்பவர் கூறுகையில்:- எங்களைப் போன்றவர்கள் நேரடியாக தீர்த்துக்கொள்ள முடியாத எத்தனையோ பிரச்சினைகளை தேடியறிந்து தீர்த்து வைக்கின்றது உதயசூரியன். அதிலும் எங்கள் பிரதேசத்தில் உதயசூரியன் பத்திரிகைக்கென ஒரு தனியிடம் உண்டு. வரவேற்பும் உண்டு. வெறும் பத்திரிகையாக மட்டுமன்றி எங்களுக்கு தோழனாகவும் வளர்ந்து வரும் இப்பத்திரிகையின் சேவை மென்மேலும் தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலாசார மண்டபம் அமைக்கப்படுமா?
வாக்குறுதி நிறைவேற்றப்படாத மக்கள்

நுவரெலியா மாகஸ்தோட்ட மேற்பிரிவில் ஆரம்பிக்கப்பட்ட கலாசார மண்டபம் அமைப்பதான பணிகள் கைவிடப்பட்ட நிலையில் கவலையடைந்துள்ள இப்பகுதி மக்கள் மீண்டும் முன்னெடுக்கப்படுமா? தமக்கு கலாசார மண்டபம் கிடைக்குமா? என ஏங்கியுள்ளனர்.

மாகஸ்தோட்ட மேற்பிரிவில் வசித்துவரும் சுமார் 1500 மக்களின் நலன் கருதி கலாசார மண்டபம் ஒன்று கடந்த 2011 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி அப்போதைய பிரதேச சபை உறுப்பினர் ஸ்ரீரங்கா அவர்களினால் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. இந்த மண்டபம் சகல பிரிவினருக்கும் பயன்படும் வகையில் கட்டித் தரப்படுவதாகவும் தோட்ட நிர்வாகத்தினரும் கட்டிக் கொடுக்கப்படுவதாகவும் மாகஸ்தோட்ட பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் மண்டபம் இருந்த இடத்தை தரைமட்டமாக்கி விட்டு புதிய ஒரு கலாசார மண்டபத்தை கட்டித் தருவதாகக் கூறிய ஸ்ரீரங்கா அவர்களின் மண்டபம் கட்டப்படாமல் இப்பகுதி மக்கள் கவலையடைந்துள்ளனர்.

மண்டபம் அமைப்பதற்கான பணிகள் கைவிடப்பட்டதனால் தற்போது மண்டபத்திற்கான அஸ்திவாரங்கள் மட்டும் காணப்படுகின்றன. மண்டபம் இல்லாததால் இப்பிரதேச மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த ஜோசி என்பவர் கூறுகையில்:- இந்த மண்டபத்தை பதிதாகக் கட்டித்தருவதாகக் கூறிய ஸ்ரீரங்கா இதுவரையில் மண்டபத்தைக் கட்டியபாடில்லை. மண்டபம் இருந்த இடத்திற்கு ஆதாரமான தூண்கள் மாத்திரமே காணப்படுகின்றன. கட்டித் தருவதாக கூறிய ஸ்ரீரங்கா அவர்கள் மத்திய மாகாண சபைக்கு தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்த பின்னர் இந்த மண்டபத்தை கட்டுவதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அவரது வேட்பாளர்கள் எவரும் இந்த மண்டபம் அமைந்துள்ள பிரதேசத்தில் போட்டியிடவில்லை. இதனால் இந்த மண்டபம் கட்டப்படுமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

மண்டபம் கட்டப்படாமல் இருப்பதனால் தமது பிள்ளைகளின் பிறந்தநாள் நிகழ்வுகள், திருமண நிகழ்வுகள் போன்றவற்றை நடத்துவதற்கு வழியில்லை என்றும் இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

இப்பகுதி மக்களின் நலன் கருதி கலாசார மண்டபம் அமைப்பதற்கான பணிகளை விரைவுபடுத்தி நிறைவேற்றித் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

டி.சந்ரு நானுஓயா

ஆசிரியர்களுக்கு கொத்தமல்லிப் பானம்
மாணவர்களுக்கு மதுபானம்

மாணவர்கள் மத்தியில் ஒழுக்க பண்புகள் அருகி வருவதாக கடும் விமர்சனங்கள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில், அதை ஒப்பாக்குவது போல அதிர்ச்சியான சம்பவமொன்று பதியந்தலாவ பகுதியில் பதிவாகியுள்ளது. மாணவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகும் க.பொ.த. (சா/த) பரீட்சை தற்போது நடைபெற்று வரும் நிலையில், தமக்கு கற்பித்த ஆசான்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கடந்த வாரங்களில் பெரும்பாலான பாடசாலைகளில் பிரியாவிடை வைபவத்தை (சா/த) மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

இதற்கேற்ப கடந்த திங்கட்கிழமை பதியந்தலாவ பாடசாலையொன்றைச் சேர்ந்த (சா/த) மாணவர்கள் தமது பாடசாலை ஆசிரியர்களுக்கு தேநீர் உபசார நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தனர். நிகழ்வின் ஆரம்பத்தில் மாணவர்களுக்கு ஆசி வேண்டி சமய நடவடிக்கைகள் இடம்பெற்றன. பின் ஆசிரியர்களுக்கு கொத்தமல்லிப் பானம், பலகாரம், வாழைப்பழம் என்பவற்றை கொடுத்து உபசரித்தனர்.

இவ் உபசார நிகழ்வில் சில மாணவர்களின் செயற்பாடுகள் வித்தியாசமாகவும் சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையிலும் அமைந்திருந்தது. மாணவர்களை விசாரித்தபோது சில மாணவர்கள் மது அருந்தியிருந்தது அம்பலமாகியது.

பாடசாலையின் இறுதிநாளைக் கொண்டாட 6 மாணவர்கள் மதுபானம் வாங்கி வந்து பாடசாலையில் வைத்து குடித்துள்ளனர். அதிக போதை தலைக்கேற வெறியில் அநாகரிகமாக செயற்பட்டதால் மாட்டிக்கொண்டுள்ளனர்.

பின் அம்மாணவர்களின் பெற்றோர்கள் வரவழைக்கப்பட்டு கடும் எச்சரிக்கையின் பின் மாணவர்களுக்கு பரீட்சை அனுமதியட்டை வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கு கொத்தமல்லிப் பானம் கொடுத்துவிட்டு மதுபானம் அருந்திய மாணவர்களை என்னவென்று கூறுவது? என நீங்கள் புலம்புவது எமக்கு புரிகின்றது.

தாசன்



நானுஓயா பிரதேச பாடசாலைகளின் விளையாட்டுத் திறமைகளை வெளிக்கொணரும் முகமாக டீ-பீல்ட் நிறுவனத்தின் சமூக உத்தியோகத்தர் தர்மாவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 10 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி கடந்த சனிக்கிழமை ரதெல்ல பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இதில் நானுஓயா பிரதேசத்தைச் சேர்ந்த உடரதெல்ல தமிழ் வித்தியாலயம், வங்கிஓயா இல-2 தமிழ் வித்தியாலயம், ரதெல்ல தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் பங்குபற்றின. இறுதிப்போட்டிக்கு வங்கிஓயா இல-2 தமிழ் வித்தியாலயமும் ரதெல்ல தமிழ் வித்தியாலயமும் தகுதிபெற்றன. இதில் வங்கிஓயா இல-2 தமிழ் வித்தியாலயம் வெற்றிபெற்று கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

பி.கேதீஸ் - தலவாக்கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எவ்வளோ பிரச்சினை லைஃப் ல வந்தாலும்
நாம் செய்ய வேண்டிய மிக முக்கியமான 3 விஷயங்கள்
1) காலைல சாப்பிடணும்
2) மதியம் சாப்பிடணும்
3) நைட் கண்டிப்பா சாப்பிடணும்...

கொஞ்சம் சிரிக்க சிந்திக்க

புத்தி உள்ளவன் பிழைத்துக் கொள்வான்..

ரஷ்ய ஜெயிலில் மூன்று தூக்கு தண்ட னைக் கைதிகள் இருந்தனர். இறக்குமுன் அவர்களின் கடைசி மூன்று ஆசைகள் என்ன என்று கேட்கப்பட்டது.

முதல் கைதியின் ஆசை: நல்ல பெண், நல்ல மது, லெனின் சமாதிக்கு அருகில் புதைக்கப்பட வேண்டும். மூன்று ஆசைகளும் நிறைவேற்றப்பட்டன.

இரண்டாவது கைதியின் ஆசைகள்; நல்ல பெண், நல்ல உணவு, ஸ்டாலின் சமாதிக்கருகில் புதைக்கப்பட வேண்டும். அவனுடைய ஆசைகளும் நிறைவேற்றி வைக்கப்பட்டன.

மூன்றாவது கைதி தனது முதல் ஆசையாக மாம்பழம் கேட்டான். அப்போது மாம்பழ சீசன் இல்லை. எனவே தூக்கு தண்டனை ஆறு மாதம் ஒத்தி வைக்கப்பட்டது.

ஆறு மாதத்திற்குப்பின் மாம்பழம் வாங்கிக் கொடுத்து இரண்டாவது ஆசையைக் கேட்டனர். செர்ரிப் பழம் என்று பதில் வந்தது. அப்போது செர்ரிப் பழ சீசன் இல்லை என்பதால் மறுபடியும் தூக்கு தண்டனை ஆறு மாதம் தள்ளி வைக்கப்பட்டு, பின் செர்ரிப்பழம் வாங்கிக் கொடுக்கப்பட்டது.

மூன்றாவது ஆசையாக அவன் சொன்னான், ''என் உடல் தற்போதைய ஜனாதிபதியின் சமாதிக்கருகில் புதைக்கப்பட வேண்டும்.'' அதிகாரிகள் அதிர்ந்துவிட்டனர், ''என்ன சொல்கிறாய், நீ? அவர் உயிருடன் அல்லவா இருக்கிறார்!'' கைதி அமைதியாகச் சொன்னான், ''அவர் இறக்கும் வரை நான் காத்திருக்கிறேன்''.

படித்ததில் பிடித்தது...

சுடச்சுட உணவு இருந்தால்
தாத்தா அதிகம் சாப்பிடுவார்.
அம்மா உணவு பரிமாறினால்
அப்பா அதிகம் சாப்பிடுவார்.
தூக்கி வைத்துக்கொண்டு
உணவு ஊட்டினால்
தங்கை அதிகம் உண்ணுவாள்.
தொட்டுக்கொள்ள ஏதேனும்
இருந்தால் தம்பி
அதிகம் சாப்பிடுவான்.
சமைத்தது மீதமானால் மட்டுமே
அம்மா அதிகம் சாப்பிடுவாள்!
உண்மைதானே.



உண்மையான அன்பு தான்
இந்த உலகத்தில் எல்லா
நோய்களுக்கும் மருந்து.

அந்த அன்பே பொய்யானால்
உலகில் அதை விட
கொடியநோய் வேறு எதுவும்
கிடையாது...!!

காதில்

காதல் முட்டாள் செய்கிற புத்திசாலித்தனமான காரி யம். புத்திசாலி செய்கிற முட்டாள்தனமான காரியம் இதுல நீ எப்படி?

* காதல் ஒரு நல்ல குரு. ஆனா அது எல்லாரையும் சீடர்களாக ஏற்றுக்கொள்வ தில்லை.
* காதல் எல்லோருக்கும் ராசியில்லை, இருந்தும் யாரும் அதை விடுவதா யில்லை.
* காதலிக்கிற பெண், நரியை விட 1000 மடங்கு கிரிமினல்
* காதலில் ஜெயிச்சாலும் செலவு பண்ணனும், தோற்றாலும் செலவு பண்ணனும்.

பசங்க மனசு மொபைல் மாதிரி...
பொண்ணுங்க மனசு தண்ணீர் மாதிரி...
தண்ணீர்ல மொபைல் விழுந்தாலும் மொபைல்ல தண்ணீர் விழுந்தாலும் ஆபத்து மொபைலுக்குத்தான்...

****

வெளியே வந்த பிறகு உள்ளே செல்ல முடியாது.
''கருவறை''
உள்ளே சென்ற பிறகு வெளியே வர முடியாது.
''கல்லறை''

பாராளுமன்ற உறுப்பினர் சொன்ன முயல்-கரடி கதை!

பொலிஸாரின் திறமையின் இலட்சணம்

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாதங்கள் பாராளுமன்றத்தை சூடாக்கி வரும் நிலையில் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அவைக்கு ஒவ்வாத கேலியான கருத்துக்களை தெரிவித்து வருகின்றமை வாடி க்கை. கேலிப்பேச்சுக்கு பெயர் போன அமைச்சர் மேர்வின் சில்வா கடந்த பட்ஜெட்டின் போது தனது மனைவிகள் பட்டியலை வெளியிட்ட தோடு தனது வீர தீர செயல்களையும் அம்பலப்படுத்தியிருந்தமை வாசகர்களுக்கு ஞாபகமிருக்கும். அந்த வகையில் கடந்த சனிக்கிழமை நீதி அமைச்சு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு அமைச்சு மீதான விவாதம் இடம் பெற்றது. இவ்விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐ.தே.க. எம்.பியான பாலித்த தேவப்பெரும இலங்கை பொலிஸாரின் இலட்சணத்தை ஒரு நகைச்சுவை கதையினூடாக புட்டு புட்டு வைத்தார்.

சகலநாட்டு பொலிஸாருக்கும் பிரிட்டனில் ஒரு போட்டி நடத்தப்பட்டது. அதாவது முயல் குட்டி ஒன்றை காட்டுக்குள் விட்டு விட்டு அதை உயிருடனோ உயிரில்லாமலோ பிடித்து வரவேண்டும் என்பது தான் போட்டி. போட்டி தொடங்கியது. முதலில் பிரிட்டன் பொலிஸார் முயலைத் தேடி புறப்பட்டனர். நீண்ட நேரத்தின்பின் வெறுங்கையுடன் திரும்பி வந்தனர். காட்டுக்குள் சென்ற முயலால் எவ்வித தீங்கும் ஏற்படப் போவதில்லை. அதனால் அச்சப்பட தேவையில்லை என்றனர். இரண்டாவதாக அமெரிக்க பொலிஸார் முயலைத் தேடி புறப்பட்டனர். தம்மிடம் உள்ள நவீன ஆயுதங்களால் எங்கும் சுட்டு வீழ்த்தினர். பின் முயலை சுட்டுக் கொன்றுவிட்டதாகக் கூறினார்கள்.

அடுத்த வாய்ப்பு இலங்கை பொலிஸாருக்கு. இலங்கை பொலிஸார் முயலைத் தேடி காட்டுக்குள் சென்ற சிறிய நேரத்தில் காட்டுக்குள் கத்தும் சத்தம் கேட்டது, புது அம்மோ கஹன்ன எபா மரண்ண எபா (ஐயோ அடிக்காதீர்கள் என்னைக் கொல்லாதீர்கள்) என்று பலமான கதறல் சத்தம் கேட்டது என்ன என அறிய அனைவரும் அங்கு சென்று பார்த்தபோது இலங்கை பொலிஸார் கரடி ஒன்றை மரத்தில் கட்டி வைத்தபோது நீ தான் முயல் என ஒத்துக் கொள்ளச் சொல்லி சித்திரவதை செய்து கொண்டிருந்தார்கள். வலி தாங்காத கரடியும் நான் தான் முயல் நான் தான் முயல் எனக் கூறியது. எப்படி இலங்கை பொலிஸாரின் திறமையென பாலித்த தேவப்பெரும எப்.பி. கதையை கூறி முடித்தார். பாலித்த எம்.பி கூறிய கதையில் ஏதேனும் உண்மைகள் மறைந்துகிடக்கின்றதா என்பதை வாசகர்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

தாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சமியில் இறந்ததால் பலிவாங்கிய ஆவி

மோகன் வயது 34! மோகன் தோட்டத்து கங்காணி. மிகவும் அமைதியானவன். ஊரில் யாரிடமும் எந்த வம்பு தும்புக்கும் போகமாட்டான். ஆனால் நண்பர்கள் அடிக்கும் கொட்டத்தில் அவனையும் இணைத்துக்கொள்வார்கள்.

ராஜா, சேகர், சிவா, முரளி, மோகன் இந்த ஐவரும் பஞ்சபாண்டவர்கள் மாதிரிதான். ஒரு வரை ஒருவர் பிரிந்திருப்பதில்லை. மாலையில் வேலை முடிந்ததும் இவர்கள் எல்லோரும் சேர்ந்து தோட்டத்து மைதானத்தில் கரப்பந்தாட்டம் விளையாடுவார்கள்.

மோகன் அண்மையில் தான் தந்தையாகியிருந்தான். அழகான குழந்தை நிஷா. மனைவி கௌரி, குழந்தை நிஷா என சிறிய அன்பான அழகான குடும்பம் மோகனுடையது. ஆனால் யார் கண் பட்டதோ விதி தன் கைவரிசையைக் காட்ட அந்தக் குடும்பத்தை தேர்ந்தெடுத்துக் கொண்டது.

தோட்டத்துக் கங்காணி என்றாலே வேலை பார்க்கும் இடத்தில் சிரித்து பேசுவது இயல்பான விடயம். அதேபோலத்தான் மோகன் விமலாவிடம் சிரித்து பேசுவது தன் பங்குங்கு கொஞ்சம் கொழுந்து பறித்து அவளின் கூடையில் போடுவது என்று இவர்களின் நட்பு வளர்ந்தது. விமலா மோகனுக்கு ஒரு வழியில் தூரத்து சொந்தமும் கூட.

ஆனால் அக்கம் பக்கத்தில் வேலைசெய்யும் பெண்களின் வாயும், கண்ணும் சும்மா இருக்குமா? இதை கவனித்துவிட்டு இந்த விடயத்தை கண், காது வைத்து பெரிதாக்கினார்கள். இறுதியில் கௌரியின் காதையும் இந்தச் செய்தி சென்றடைந்தது.

கௌரி மாலை வீட்டுக்கு வந்ததும் விசயத்தை மோகனிடம் நேரடியாக கேட்காமல் சுற்றிவளைத்து சம்மந்தமில்லாமல் வம்புக்கு இழுப்பாள். மோகனை திட்டுவாள். சில சமயம் கோபத்தில் குழந்தையைப் போட்டு அடிப்பாள். கேட்டால் கத்தி சண்டை போடுவாள். நாளுக்கு நாள் பிரச்சினை வளர்ந்ததே தவிர குறைந்தபாடில்லை.

ஒரு நாள் இந்த பிரச்சினை தொடர்பாக மோகன் தன் நண்பர்களிடம் நடந்ததைச் சொல்ல சேகர் வாய் திறந்தான் ''நானும் உன்னிடம் கேட்க வேண்டும் என்று நினைத்தேன்... எப்படி கேட்பது என்று தயக்கத்தில் இருந்துவிட்டேன். நீயும் விமலாவும்...'' என்று இழுத்தான்.

அப்போது புரிந்தது மோகனுக்கு. நண்பர்களே என்னை புரிந்து கொள்ளவில்லை என்று அவர்களை திட்டி விட்டு வீட்டுக்கு வந்தான்.

எப்படியாவது கொளரியை சமாதானப்படுத்தி இந்தப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும் என்று நினைத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றான்.

கௌரி வாசலிலே தலையை விரித்து போட்டுக் கொண்டு நின்றாள். மோகன் வீட்டுக்குள் வந்து நிஷாவை தூக்கி தன் மடியில் வைத்துக்கொண்டு கௌரியிடம் தன் பக்கம் இருக்கும் நியாயத்தை எடுத்துரைத்தான்.

ஆனால் அவள் கணவன் பேச்சை விட ஊரார் பாட்டுக்குதான் தாளம் போட்டாள். வீட்டுச்சண்டையை வீட்டோடு வைக்காமல் அது தெருவரை கேட்கும் படி சத்தம் போட்டாள். மோகனுக்கு இது மிகவும் கேவலமாக இருந்தது. கோபத்தில் கௌரியை கைநீட்டி அடித்துவிட்டு. என்ன செய்வது என்று தெரியாமல் அந்த இடத்தை விட்டே சென்றுவிட்டான்.

அன்றில் இருந்து மோகனுக்கு ஊரில் யாரையும் பார்க்க வெட்கமாக இருந்தது. இரண்டு மூன்று நாட்களாக வேலைக்கும் போகவில்லை. வீட்டிலேயே முடங்கிக் கிடந்தான்.

இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றால் கௌரிக்கு நான் நல்லவன் என்று நிரூபிக்க வேண்டும். அவளிடம் பேசினால் அவள் செவிமடுக்கமாட்டாள். எனவே அவளைப் பயமுறுத்தினால்தான், அவள் தன்னைப் புரிந்துக் கொள்வாள் என்று நினைத்துக்கொண்டு அன்றிரவு நன்றாக குடித்துவிட்டு கையில் தோட்டத்திற்கு அடிக்கும் விஷ மருந்தையும் எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தான்.

விமலாவை பார்த்து நான் அன்று சொன்னதுதான் உண்மை நீ அதை கேட்காமல் என்னை அவமதித்து விட்டாய். நீயே என்னை நம்பாத போது நான் வாழ்ந்து பயனில்லை என்று சொல்லி கையில் இருந்த விஷ மருந்தை மட மடவென குடித்தான்.

அதைப்பார்த்த விமலா அதிர்ச்சியில் மயங்கிச் சரிந்தாள். குழந்தையின் அழுகுரல் கேட்டு அக்கம் பக்கத்தார் ஓடிவந்தனர். இருந்தும் என்ன பயன்? ஏற்கனவே மது அருந்திவிட்டு விஷ மருந்தையும் குடித்ததால் அந்த இடத்திலே மோகனின் உயிர் பிரிந்தது.

மறுநாள் ஊரே கண்ணீரும் கம்பலையுமாக அவனுடைய இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டது. ஒரு நல்ல மனிதனின் மரணம் தந்த சோகத்தில் இருந்த மக்களுக்கு அன்றிரவே மீண்டும் ஓர் அதிர்ச்சித் தகவல்! ஆம், அதே ஊரில் உள்ள பக்கத்து லயனில் வசிக்கும் மரகதம் என்ற பெண் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டாள். ஊரே அல்லோல கல்லோலப்பட்டது. இந்த அதிர்ச்சி முடிவதற்குள் மக்களுக்கு மீண்டும் ஒரு பேரதிர்ச்சி காத்திருந்தது. இன்னும் இரண்டு தினங்களுக்குள் அதே லயத்தில் இரண்டு வயதுக் குழந்தை தவறுதலாக கிணறில் விழுந்து மரணமடைந்தது.

அதே நேரம் மோகனுடைய வீட்டில் விளையாட்டு ஆரம்பித்தது. அன்று இரவு வீட்டு கூரையில் யாரோ திடு திடு வென ஓடுவதுபோலவும் சமையலறையில் பாத்திரங்கள் உருட்டுவது போலவும் சத்தம் கேட்டது. சிறிது நேரத்தில் குழந்தை நிஷா வீறிட்டு அழுதாள்... நாய் வேறு மோகன் வீட்டைச்சுற்றி ஊளையிட்டுக் கொண்டு ஓடியது. இரவிரவாக நடக்கும் இந்த அமானுஷ்ய செயல்களால் கௌரியின் குடும்பத்தினருக்கு தூக்கமே தொலைந்தது.

அடுத்து ஒரு வாரம் கழித்து அதே ஊரில் தோட்டத்தில் வேலை செய்துக்கொண்டிருந்த ராமையா என்பவர் மலசலகூட குழிக்குள் கால்தவறி விழுந்து மரணமானார். அடுத்தடுத்து ஏற்படும் எதிர்பாராத மரணங்களால் ஊர் மக்கள் பீதியில் உறைந்து போனார்கள். ஏன் இப்படி ஏதும் சாமி குத்தமா அல்லது துஷ்ட ஆத்மாக்களின் விளையாட்டா என்று தெரியாமல் தவித்தார்கள். அப்போது மோகனுக்கு 31 நாள் கருமாதி செய்வதற்காக மோகனின் ஜாதகத்தை கௌரி பூசாரியிடம் கொண்டு சென்றாள். அங்கே பூசாரி அவளுக்கு அந்த அதிர்ச்சித் தகவலைச் சொன்னார். ஆம் மோகனுக்கு இன்னும் ஆயுள் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அவன் இறந்த நேரம் பஞ்சமி என்பதால் துர் சம்பவங்கள் ஊரையே ஆட்டிப்படைக்கும். உன் காதுக்கு தொடர்ச்சியாக ஐந்து துர் மரணச் செய்திகள் வந்து சேரும் என்றார்.

பூசாரி சொன்னது போலவே ஊரில் நடந்துகொண்டிருந்தது. ஊரில் எங்கு பார்த்தாலும் மோகனின் கதைதான். அவனை ஆவியாக அங்கு கண்டோம், இங்கு கண்டோம் என்றார்கள். அவர்கள் கூறுவது உண்மை என்பதுபோல் இந்தச் சம்பவத்திற்குப் பிறகு ஒரு வாரம் கழித்து மோகனின் நண்பன் சேகரும், ரவியும் இரவு வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். அப்போது இருவருக்குப் பின்னால் யாரோ நடந்து வரும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தார்கள். யாரும் இல்லை.

கொஞ்ச நேரத்தில் தேயிலைக்குள் யாரோ நுழைந்து ஓடுவதுபோல் தெரிந்தது. ரவி யாரு... யாரு... என்றான். பதில் இல்லை. சிறிது நேரத்தில் சத்தம் இல்லை. இவர்களும் வேகமாக நடந்தார்கள். என்ன ஆச்சரியம் மீண்டும் அதேபோல யாரோ பின் தெடரும் சத்தம்.

பயத்தில் இருவரும் ஓட ஆரம்பித்தார்கள். ஆனால் அந்த அமானுஷ்யம் அவர்களை விட்டுவைக்கவில்லை அதுவும் அவர்கள் பின்னால் தொடர்ந்தது. ஒரு வளைவில் ரவியை பின்னால் பிடித்து இழுத்தது அந்த உருவம். ரவி....''சேகர் யாரோ என்ன இழுக்கிறாங்க. என்னை புடி புடி '' என்று கத்திக்கொண்டே பின்னால் சென்றான். சேகர் அப்படியே பேயறைந்தவன் போல் நின்றான். சிறிது நேரத்தில் தூரத்தில் உள்ள பள்ளத்தில் ஆ... என்ற அலறலுடன் ரவி கீழே விழுந்தான்.

ஊரார் ஒன்று சேர்ந்து ரவியை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றார்கள். ஒரு வாரம் வைத்தியசாலையில் உயிருக்கு போராடிய பின் இந்த உலகத்தை விட்டே பிரிந்தான். அவன் இறந்த அன்றுதான் மோகனுக்கு கருமாதி நடந்தது. இந்தச் செய்தி கௌரியில் காதில் ஐந்தாவது மரணச் செய்தியாக விழுந்தது.

தகவல் தொகுப்பு அபி

திகில் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

பேய் இருப்பது உண்மையா? பொய்யா
என்ற விவாதங்கள் ஒரு புறமிருக்க பேய்
என்ற பெயரைக் கேட்டதுமே பலருக்கு கிலி பிடித்துவிடும். நள்ளிரவு, தனிமை போன்ற சூழ்நிலைகளில் சும்மா ஒரு சுயிற்றுத்துண்டைக் கூட பேய் என நினைத்து அலறிவிடுவார்கள். நீங்கள் அல்லது உங்கள் நண்பர்கள் சந்தித்த பேய் பற்றிய அனுபவம் உள்ளதா? அதை எமது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

எமது முகவரி
உதயசூரியன் திகில் அனுபவங்கள்
தினக்குரல் இல-68, எலிஹவுஸ் வீதி,
கொழும்பு 15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாட்டா



பைக்கில் ஹீரோயிசம் காட்டும் விக்ரம்

இந்தச் சிரிப்பை பார்த்தும் இவனை காதல் மன்னன்னு எப்படித்தான் சொல்லுறாங்களோ?

கிராமத்து வேடத்தில் பொலிவூட் நட்சத்திரங்கள் இருந்தால் எப்படி இருக்கும்?

சார்லி சாப்ளின் வேடத்தில் விக்ரம்

விஜயை பல வேடத்தில் பார்த்திருப்பீர்கள் ஆனால் இந்த வேடத்தில்....!

மாத்தியோசி

மனிதா என் கன்றுக்காக நான் சுரந்த தாய்ப்பாலை நீ பிறந்தது முதல் இறக்கும் வரை உனக்கும் கொடுக்கிறேனே! நீயும் என் மகன் அல்லவா...? என்னைக் கொல்ல கடத்திச் செல்கிறார்கள் வேடிக்கை பார்க்கிறாயே...! தடுக்க மாட்டாயா?

அட இந்த ஸ்டைல் எப்படியிருக்கு....!

ரஜினி ஸ்டைலில் சூர்யா

இதெப்படி...

Gogule Radhai

GR

தலைநகரில் தலைசிறந்ததோர்
எவர்சில்வர் களஞ்சியம்
கோகுல் ராதை

மார்கழி மாத இராம பஜனைக்குத் தேவையான இந்தியக் கம்பம் மற்றும் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கோயில்களுக்குத் தேவைப்படும் பஞ்சலோக விக்கிரகங்கள், இந்திய கருங்கற் சிற்ப சிலைகள் மற்றும் உணவு விடுதிகளுக்கும், வீட்டு உபயோகத்திற்கும் தேவையான அனைத்துப் பாத்திரங்கள் மிக்ஸி, கிரைன்டர்கள் மற்றும் அன்பளிப்பு பொருட்களை அசல் எவர்சில்வரிலும் பூஜைப் பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

184, Sea Street, Colombo - 11. Tel: +94 11 242 1912

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டாரால் (இல-68, எலிஹவுஸ் றோட், கொழும்பு-15) 12.12.2013 வியாழன் 94, பரமானந்த மாவத்தை கொழும்பு-13, தினக்குரல் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org